# *Sita's Wedding*

A DRAMA IN TAMIL

BY

T. BHAKTAVATSALAM, B.A., M.B.P.I.,

AUTHOR OF

**Life of Krishna Chaitanya** (once prescribed for the B.A. Degree Examination of the University of Madras), **Manamohana Manikkam**, **Sage of Narayanavaram** (English) **Indian Saints** (English and Tamil) &c., &c.

PRINTED AT THE
R. VIVEKANANDA PRESS, VEPERY, MADRAS.

1915.

Annas 10

0-, 892M85,S
M15
(4689)

DEDICATED TO

His Highness

# Raja Rajeswara Setupathi Avl.,

THE RAJAH OF RAMNAD.

As a Mark of the Author's Great Respect for His Highness

and

As an Expression of the Author's Grateful Appreciation of

His Highness's Love of Tamil Literature—Old and New.

# சீதா கல்யாண நாடகம்.

இஃது

சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் உயர்தரக் கலாசாலை வகுப்புகளி
லொன்று விடாமல் தமிழ்ப்பாஷா நிபுணத்வ பரிசுபெற்றவரும்,
ஆங்கில தத்துவசாஸ்திர பரிசுபெற்றவரும், யூநிவர்ஸிடி
பி. ஏ. பரீக்ஷையில் தமி[illegible] முதல்வகுப்பு கௌரதா பட்
டம் பெற்றவரும், [illegible]னை யூநிவர்ஸிடி பி. ஏ. பட்
டப் பரீக்ஷைக்குப் [illegible] புத்தகமாயமைக்கப்பட்ட
ஸ்ரீகிருஷ்ணசைத[illegible]சரித்திர நூலாசிரியரும்,
சேஜ் ஆப் நார[illegible]ராம் (ஆங்கிலம்,) மன
மோஹன மா[illegible], இந்தியாதேசத்து
இணையிலா ம[illegible]ள், (ஆங்கிலமும்
தமிழும்) முதல[illegible] நூல்களின் ஆசிரி
யரும், மதுரைத் [illegible]மிழ்ச் சங்கத்
தின் அங்கத்தினரும் ஆகிய,

T. பக்தவத்ஸலம், பி. ஏ., எம். பி. பி. ஐ.

அவர்களாலியற்றப்பட்டது.

சென்னை புரசை,

ரா. விவேகானந்த பிரஸில்,

அச்சியற்றப்பட்டது.

1915.

ரிஜிஸ்டர் செய்யப்பட்டது]

[விலை அணா 10.

146897

11

# முகவுரை.

இந்நூல் வெகுதுரிதத்தில் அச்சியற்றி முடிதலின், யான் இங்கு அதிகமாயெழுத இயலவில்லை. சென்னைப் புரசை கௌரி விலாச சபையார் வேண்டுகோளின்படி, அவர்கள் முதன் முதல் அரங்கமேடையில் நடிப்பதற்கென்று இஃது உத்தேசம் செய்யப்பட்டது. சிலசில விடங்களில், இதிற் கண்டுள்ள ராகதாளங்களை மாற்றவும், சம்பாஷணை, காட்சி முதலியவற்றைச் சந்தர்ப்பப்படி முன்னர் பின்னராக அமைத்துக் காட்டவும் இயலுமென்று நம்புகிறேன்.

என விஷயத்திலும், இந்நூல் விஷயத்திலும் பேரன்புகாட்டிய ஷெ சபையின் அங்கத்தினரனைவருக்கும் நான் கடமைப் பட்டவனாகிறேன்.

T. பக்தவத்ஸலம்.

ஸ்ரீராமஜயம்.

# Act. I. Scene I.

## அங்கம் I. காட்சி I.

பிரமன் கொலு வீற்றிருக்கை

இந்திரன் முதலிய தேவர்கள் வருகிறார்கள்.

---

இந்திரன்:—மஹாப்ரபோ! பூலோக, புவர்லோக, சுவர்லோக, மஹாலோக, ஜனலோக, தபோலோக, சத்யலோக முதலிய மேலேழுலோகங்களையும், அதல, விதல, சுதல, தராதல, ரசாதல, மஹாதல, பாதாள முதலிய கீழேழுலோகங்களையும் ஸ்ருஷ்டி செய்து சராசரப் பொருள்களைப்படைத்துத் தாராதலத்தை வாழ்வித்த ஹே, கருணாநிதே வந்தனம்! நாய்படாத பாட்டை நாங்கள் படுகிறோம்! எங்கள்குறையைக் கவனித்து எங்கள் துயரைப் போக்காதிருப்பது எல்லாம்வல்ல தங்களுக்கு எப்படித் தருமமாகும்!

ப்ரம்ஹா:—சுந்தரகுணம்படைத்த இந்திராகேள்! எள்ளுக்குளெண்ணெய்போல் உள்ளுக்குள் பரந்த உத்தமனாகிய பெருமான், உயர்வற உயர்நலமுடையவன், ஆழாழித் துயர் போக்கப் பாலாழியிற்படுத்த பரமன், சங்குசக்கர மேந்திய ஸத்வகுண ஸ்வரூபன், பொய்யர்க்குப் பொய்யன் மெய்யர்க்கு மெய்யனாகிய மேகநிறத்தண்ணல் ஆதியிற் செய்த ஆக்ஞையின்படி மேதினி யெங்கும் மேன்மையாம் படைப்புத்தொழிலில் மனமிளைத்து உடல்சலித்துள்ள எனக்கு எதைத்தான் கவனிக்க எப்படித்

தான் முடியும்! உங்கள் மனதில் பொங்குகின்ற துயரை இன்னவெனக்கூறின் இடாதுகளையலாம்.

இந்திரன்:—எம்மைக்காக்கும் ஏந்தலே கேளீர்! கோரமாம் தவஞ்செய்து சாரமானவரத்தைப் பெற்ருன் ராவணன் என்னும் பாவத்தொழிலரக்கன். அவன் செய்யும் கொடுமை அளந்து சொல்ல முடியாது! வாட்டுகிருனெம்மை, வதைக்கின்ருனெங்களை! தயா தாக்ஷண்ய மில்லாதவனிடம் தப்பிப்பிழைப்பது யாங்ஙனம்?

தோடி-ரூபகம்.

பல்லவி

தப்பிப்பிழைத்துப் போகத்தரமா தேவாநாங்கள் (தப்பிப்)

அனுபல்லவி

முப்புவனங்களைத்தந்த மூதாதையே என்றும்
மூர்க்க அரக்கரின் முரட்டுச்செய்கையி னின்றும் (தப்பிப்)

சரணம்

அல்லும் பகலுமெம்மை அடிப்பதும் பிடிப்பதும்
ஹாஹா என்செய்வோம்கள்ளைக் குடிப்பதும் துடிப்பதும்
பல்லை நறநறவென்று கடிப்பதும் நடிப்பதும்
பாவிகளெங்களைப் பக்கத்தில் இடிப்பதும் முடிப்பதும்
சொல்லப்போமோ அந்த வேதனை
வெல்லப்போமோ மிருந்தவாதனை (தப்பிப்)

ப்ரம்ஹா:—இன்புருக் கொண்ட இந்திராகேள்! ஒன்றுக்கும் நீங்கள் உளங்கலங்கவேண்டாம். எல்லாத் துயரையும் எம்பெருமானருளாலே இரண்டு நிமிஷத்தில் பறந்துபோகச் செய்கிறேன்.

பைரவி-ரூபகம்.

பல்லவி

எதுக்குப் படுகிறீர் எல்லாருமே வருத்தம்
எம்பெருமான் செய்குவான்யாவுமே திருத்தம் (எது)

### அநுபல்லவி.

வாதுக்கு அழைக்கின்ற வம்புக்காரர்க ளெல்லாம்
வகை கெடச் செய்யாவிடின் வசையான சொல்லாம் (எது)

### சரணம்.

எமாந்த சமயத்தில் பெற்றார்கள் வரத்தை
ஆனாலும் பயமில்லை கொய்குவோம் சிரத்தை
மனிதரால் சாவார்கள் பயமில்லை சொன்னேன்யான்
குரங்காலும் மடிவார்கள் குறையில்லை பயமேன்தான் (எது)

கோரதவஞ்செய்த கொடியவன் ஏமாந்த சமயம் பார்த்து என்னிடம் பெற்றுவிட்டான் எண்ணிலாவர்ங்களை! யாராலும் சாவில்லையென்று யாதேதோ கேட்டுக்கொண்டவன், அகங்கார மிகுதியாலே அறவே மறந்துவிட்டான் மனிதரையும் குரங்குகளையும். இந்த உருவால்தான் இராவணன் படுக்கப்போகிறான் தரைமீது! அந்தக்கொடியவன் உங்கட்கு யாதேது கொடுமை செய்கின்றான் அறையுங்கள் பார்க்கலாம்.

இந்திரன் முதலிய தேவர்கள்:—அண்டாண்ட சராசரங்களனைத்தையும் படைத்த அற்புதப் பெரியோய், நாபிக்கமலத்தின் நடுவே தோன்றிய நான்முகத் தேவே, நாரணனிடத்து ஆரணம் பயின்ற பூரணப்பொருளே! கொடியோர் செய்யும் தீமையைக் கூறலு மாமா குவலயந்தன்னில்! கொதிக்கிற சூரியன் குளிர்ந்துமே செல்லவேண்டும், அடிக்கிறகாற்றும் அடங்கியே வீசவேண்டும். என்னசொல்வோம் கொடுமையை, எதெனவுரைப்போம கடுமையை! வருணன் பனிநீர் தெளிக்கவும், வாயுபகவான் ஆலவட்டம் வீசவும், சூரியனும் அக்கினியும் குளிரைப் போக்கவும், எல்லாரும் ராவணனுக்குச் சல்லாபஞ் செய்துகொண் டிருக்கவேண்டுமேயன்றி, அவன் அரசாளுமிடத்திலும், அவன்

இருக்குமிடத்திலும், இயற்கைநடையின் செயற்கையைச் சூரிய சந்திரர்களும், வாயு வருணன் எல்லோரும் விட்டேதீரவேண்டும், ஒழித்தேபோகவேண்டும், ரிஷிகளின யோகம்போயிற்று; தேவர்களின் போகம்போயிற்று! கோட்டையில் வாழ்ந்து கொலுவீற்றிருந்த தேவகன்னிகைகளெல்லரும், வீட்டில் வேலைசெய்யும் வெள்ளாட்டிகளாய்த் தீர்ந்தார்கள்! கந்தர்வஸ்த்ரீகள் கானம்பாடிக்கொண்டே கால்பிடிக்கவேண்டும்; கண்ணியம் மிகுந்த அண்ணலாகிய தாமே பஞ்சாங்கம் சொல்லவேண்டும பாவிகள் வீட்டில்!

## விருத்தம்.

என்னெனவுரைப்போம், ஏழைகள்துயரம்
ஏதெனமொழிவோம் எந்தைநா யகனே!
மன்னனே கேளாய் மறையவா கேளாய்
மாலொரு புதல்வனே வானவா கேளாய்!
மின்னெனவிளங்கும் நுண்ணிடையாரும்
மேதினியதனின் மேன்மையர் யாரும்
கொன்னுனை வேலி னின்னலே படுவோர்
குறையெலாம் போக்குவாய் குவலயத்தரசே.

ப்ரம்ஹா:—அன்பர்களே, நீங்கள் அஞ்சவேண்டாம் எதற்கும்! உம்மையும் எம்மையும், ஊரிலுள்ளாரனைவரையும் ஊனப்படுத்தும் ஈனப்பயல்களை ஹானிப்படுத்தி அதப்படுத்துவான், அறவாழியந்தணன்! அன்பருள்ளக்கமலத்தில், இன்பமாய் வீற்றிருக்கும் ஈஸன், ஸர்வேஸன், ஜகதீசன், ரிஷிகேஸன், போதபாராயணம் செய்வோர்க்கருளும் வேதநாராயணன்! அன்னவன் பள்ளிகொள்ளும் அழகிய பாற்கடல் சென்று, குறைகளைக்கூறி முறையிடுவோமாயின், போக்குவான் துயரை, நீக்குவான் இடரை!

### விருத்தம்.

வானவரே நல்லவரே வாருங்க ளனைவோரும்
வழியாய்ச் சென்று
தானவரைத் துணித்தருளி யன்னவரைத் துடைத்தருளித்
தயைதான் செய்ய
மீனவனாய் மற்றவையாய் மின்னுருவம் பொன்னுருவம்
மேன்மை யாகக்
கோனவனும் ஆழியான்பா லாழியானைக்
குணக்குன்றைக் கோமே தகத்தை
மாணிக்க நன்மலையை மரகதத்தின் பொன்மலையை
மகிழ்வா யோங்கும்
ஆணிப்பொன் அருண்மலையை அகவிருளைப்
போக்கிடுமெஞ் சுடர்மா மலையைப்
பூணா மின்மலையைப் புகழாரும் செம்பவளப்
புனித மலையை
வீணா வாரமெலாம் போயொழிய வியன்கழலே
போற்று வோமே.

---

## Act. I. Scene 2.

### அங்கம் I. காட்சி 2.

### திருப்பாற்கடலில் திருமால் சயனித்திருத்தல். பிரம்ஹா இந்திரன் முதலிய தேவர்கள் அங்கு சென்று குறைகூறி முறையிடுகிறார்கள்.

---

### தேவகாந்தாரி - ஆதிதாளம்.

### பல்லவி.

க்ஷீரஸாகரஸயனா—எந்தம்
சிந்தைதுயர் தீர்த்தருள்வாய் நாதா— (க்ஷீர)

### அனுபல்லவி.

தீரமாய் ராக்ஷதர் கோரமாய்த்தீமைகள்
செய்கிறா ரென்செய்வோம்—நாதா (க்ஷீர)

### சரணம்.

ஏழைகளெங்களை எள்ளைப்போலாட்டுறார்
        என்செய்வோம்—சாமி
எதிரில்லாதபடி கொடுமைகள் செய்கிறார்
        என்செய்வோம்—சாமி
வாழையின் குலையைப்போல் வரத்தாலேவதைக்கிறார்
        என்செய்வோம்—சாமி
வாசுதேவ மனோஹரஸ்வரூபனே பக்தவத்ஸலா
        காத்தருள் – சாமி (க்ஷீர)

---

மஹாவிஷ்ணு க்ருபாநோக்கச் சைகைசெய்கிறார்.
பின்னர் திருமால் கருடன்மீது ஆரோகணித்து ஆகாச மார்க்கமாய் வாகாய் வருகிறார்.
எல்லோருங் கரங்குவித்து ஸ்தோத்திரஞ் செய்கிறார்கள்.

---

### இங்கிலீஷ் நோட்.

ஆதியாதி யாதியாய னாதியான ஆதியே
ஜோதிஜோதி ஜோதிசுயஞ் ஜோதியான ஜோதியே
விந்தைவிந்தை யானலோகந் தந்தஎந்தை எந்தையே
எந்தம்சிந்தை நொந்தவிந்தை யாதுசொல்வோம் தந்தையே
மண்ணையுண்டு விண்ணைத்தாவும் மாறிலாத மன்னனே
கண்ணைக்காட்டிக் கருணைசெய்வாய் கனகஜோதி மன்னனே
முக்தஜோதி யுக்தஜோதி ரத்னஜோதி ஜோதியே
பக்தஜோதி ஞானஜோதி பரமஜோதி ஜோதியே
ஆதியாதி யாதியாய னாதியான ஆதியே
ஜோதிஜோதி ஜோதிசுயஞ் ஜோதியான ஜோதியே.

---

பிரம்ஹா தேவேந்திரன் முதலிய தேவர்கள் பெருமாளுடைய திருவடிகளைப்பணிந்து நேத்திரமாரியைக் காத்திரமாய்ப் பெருக்கித் தோத்திரஞ்செய்து துயரைக் கூறுகிறார்கள்.

அத்திமரத்திலே தொத்திய கனிபோலே அகிலாண்டங்களையும் படைத்த அற்புதப்பொருளே, முத்திக்கு வித்தாய், பக்தியின் பொருளாய், நான்குமறைகளுந் தேடிய நளின நற்பதமாய், ஆனந்தவாரிதியாய், ஆதிசேஷஸாயியாய், வேதமலைமேல் விளங்கும் போதப்பொருளென்ன ஜோதிகருடன்மேல் தோன்றிய ஜோதிபரஞ்ஜோதியாய், ஜோதியுள் ஜோதியாய், சுயம் பிரகாஸமாய் விளங்கும் சுந்தராங்கனே, உமது திருவடிகளுக்கு உண்மையான நமஸ்காரம். இருள் ஒருமாஞாலத்தில் எம்மைப்படைத்து இத்தனை துன்பத்தில் ஏழைகளை வருத்துவது, எப்படி நியாயமோ, என்ன திருவுள்ளமோ!

மஹாவிஷ்ணு:—எந்தனுந்தியில் தோன்றிய சுந்தரமைந்தா! நான்கு வேதங்களையும் நான்கு முகத்தால் விளக்கிய நான்முகக் குழந்தாய்! ஹே! இந்திரா, தேவர்களே, நீங்கள்படும் கஷ்டத்தை அறிந்தேயிருக்கின்றேன் யான்! அடங்காத ராக்ஷதர்கள், ஆலகால விஷத்தினும் கோலமான கொடுமை செய்யும் அஞ்சா நெஞ்சுபடைத்த சண்டாளமிண்டாளர்கள், கன்னெஞ்சுபடைத்த கழுதைகள், இடக்கர் வழியிலுழன்ற இழுதைகள், அவர்களுக்கு ஹே, பிரம்ஹா, நீ, அனேத்தாம் வரத்தையும் அளித்துவிட்ட பேதைமையா லல்லவா, ஹானி வந்து நேர்ந்தது மேதினிதன்னில்! பாத்திரமறிந்து பிச்சையிடவேண்டும் என்பதை யறி

யாது பாம்புகளுக்கும் நீ பால்வார்த்ததனுலன்று தீம்புவிளைத்துத் திரிகின்றூர்கள் அரக்கர்! தேளுக்குக் கொடுக்கில் விஷமானல் தீயவர்களுக்குத் தேகமெல்லாம் விஷம்! பாம்புக்குப் பல்லில் விஷமானுல் பாவிகளுக்கு உடம்பெல்லாம் விஷம்! இதனை யறியாது ஏழைத்தனத்தோடு, நீ, எடுத்துக்கொடுத்த வரத்தால் பிடித்துக்கொண்டது பீடை, அடித்துக்கொல்லுகிறது ஆரவாரம்! இருக்கட்டும் நீங்கள் யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம்!

தேவர்கள்:—மூவரில் மூத்தையே, தேவர்களுக்குத் தந்தையே! எங்கள் பாக்கியம் எங்கள் பாக்கியம் இது வெகு ஸ்லாக்கியம்! தங்கள் கருணை எங்கள் மேலிருக்க என்ன குறை எங்கட்கு, ஏது துயர் எங்கட்கு! பாக்கியம் பாக்கியம்!

மஹாவிஷ்ணு:—அஞ்சவேண்டாம் தேவர்களே! கலங்கவேண்டாம் கண்ணியரே! ஆகாதனசெய்யும் ஆகாவழிப்பயல்களைக் கதறச்சிதறப் பதறவடித்து, நசுக்கிக் கசக்கிப் பொசுக்கி யொழித்துச் சின்னுபின்னம்செய்யச் சிறப்பாய் அவதரிப்பேன் நான்! அதர்மப் பூண்டென்பது அறவே யொழிந்து அஸ்தமித்துப் போகவும், தர்மம் என்னும் தாமரை, சத்யம் என்னும் சூர்யனைக்கண்டு, முகந்துலங்கி அகங்களித்து, ஆனந்தப் பெருக்கால் அற்புதமாய் விகஸிக்கவும், அண்டர்கள் கொண்டாட, அருந்தவத்தோர் பெருமகிழ்வெய்த, நல்லார்களெல்லாரும் உல்லாஸமாய் உலாவ, இடியைக்கண்ட நாகம்போல் பரமனைக்கண்ட பாவிகளோடத் தசரதபுத்திரனய்த் தாரணியில் வருவேன் நான்! நீங்களும் பிறப்பீர்கள் மேதினியில்! வானரங்களாய் வந்து கானகங்களிலிருப்பீர்கள்!

## அடாணா-ஆதி.

### பல்லவி.

அவதாரம் செய்யவேவேண்டும்
அமரர் குழாங்களே நீங்கள் (அவ)

### அனுபல்லவி.

கவன ராக்ஷதரைக் காற்றிற்
பஞ்செனத் தூற்றியடித்திட (அவ)

### சரணம்.

வானவரெல்லாம் கானவராகத்
தானவரெல்லாம் போனவராக
அந்தரதுந்துமி யெங்கு முழங்கிட
சுந்தர ராமனும் வந்து பிறந்திட
சிந்தை நலிந்தவர் புந்தி மகழ்ந்திட
விந்தை நினைந்திடு மைந்தர் புகிழ்ந்திட (அவ)

தேவர்கள்:—ஏழைகள் நாங்கள் என் செய்யப்போகிறோம்! தங்கள் கிருபையைத் தவிர்க்கா திருப்பின், நாங்கள் பிழைப்பதில் யாது தடை?

மஹாவிஷ்ணு:—தேவர்களே நீங்கள் என் பயப்படுகிறீர்கள்? முன்பின் பாராது, ஆலோசனையில்லாது, அவசரப்பட்டுச் செய்ததால் அனர்த்தம் வந்து சம்பவித்தது. தேவர்களே, நீங்கள் உளங்கலங்க வேண்டாம், ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம்.

## கல்யாணி-ரூபகம்.

### பல்லவி.

ப்ரம்மாதிதேவரே ப்ரமையேனுறுகின்றீர்
சும்மாயிராதகுறை துயராய்ப்பெறுகின்றீர் (ப்ரம்)

### அநுபல்லவி.

கர்மானுசாரமாய்க் கவலையுட் பட்டீர்கள்
காலமிடமறியாது தானஞ் செய் திட்டீர்கள் (ப்ரம்)

சரணம்.

பாத்திரமறிந்து பிச்சை யிடாமலே
யோசனைக்கே யிடஞ்சிறிதுங் கொடாமலே
நீதிநூலினிற் பாதியாயினும்
ஓதிடாதகல் தீதினோரிடம்
வாரிவரங்களைத் தாரிவிடுத்தது
பாரிலெழுந்துமே நேரிலெழுந்தது (ப்ரம்மா)

ஆகையால் அவதாரஞ்செய்யுங்கள்; நானும் செய்கிறேன் நல்லது விளையும் தொல்லையு மொழியும்!

## Act. I. Scene 3.

அங்கம் I. காட்சி 3.

பிரம்ஹா, தேவர்கள் எல்லோரும் வருகிறார்கள்.

---

ப்ரம்ஹா:—மூவரருள் பெற்ற தேவர்களே! நல்லகாலம் வந்தது நமக்கெல்லாம்!

இந்திரன்:—அதற்கென்ன தடை! ஐயன் கொடுத்தான் அபயாஸ்தம்! அகன்றேவிட்டது தீமை, ஒழிந்தே விட்டது உபத்திரவம்!

ப்ரம்ஹா:—அற்புத உலகத்தில் அயோத்தியென்னும் நகரத்தில் ஐயன் அவதரிக்கிறான் அழகிய ராமனாய்! தம்பியர் மூவர், பரத லக்ஷ்மண சத்ருக்னரும் அவதரிக்கிறார்கள். வானர சைன்யங்களுக்கு வகையாய்ப் பிறக்கவேண்டும் மற்றெல்லாரும்!

இந்திரன்:—உள்ளத்தில் தோன்றுவதை உத்தரவு செய்வீர்கள்.

ப்ரம்ஹா:—நான்தான் ஜாம்பவனாய் அவதரிக்கப் போகிறேன். இந்திரா, நீ வாலியாய்ப் பிறக்கவேண்டும். ஹே! சூர்யா!

சூர்யன்:—மஹாப்ரபோ!

ப்ரம்ஹா:—நீ சுக்ரீவன்

சூர்யன்:—திருவுள்ளம்!

ப்ரம்ஹா:—ஹே! பிரகஸ்பதி, நீயெப்படி?

பிரகஸ்பதி:—நான் வானரங்களுக்குள் முக்கியனான தாரனாய்ப் பிறக்கிறேன்.

ப்ரம்ஹா:—சரி! குபேரா!

குபேரன்:—எந்த செல்வமும் படைத்த கந்தமாதனன் யான்.

ப்ரம்ஹா:—அக்னி பகவானே, நீ யென்ன செய்யப் போகிறாய்?

அக்னி:—ஐயனருளியபடி அடியேன் நீலனாய் ஜனிக்கிறேன்!

ப்ரம்ஹா:—வாயுபகவானே வாருமிப்படி. உம்மால்தான் வெகுகாரியம் உறுதியாய் நடக்கவேண்டியிருக்கிறது! ஒப்புயர்வில்லாத அவதாரம் உன்னதமாய்க் கொள்ளவேண்டும் நீர்!

வாயுபகவான்:—எந்தையே வந்தனம் எம் உளமாரத் தந்தனம்! எந்தன் வேகம் போதாதென்று, முக்கண் கடவுள் மூர்த்தியாகும் உருத்திரப்பிரானின் உரத்தையும் சேர்த்து, அனுமானாய் வந்து அவதரிப்பேன் யான்! காற்றாலும் அசைக்கமுடியாது அவனை, நெருப்பாலும் கொளுத்தலாகாது அன்னவனை! ஆயுதமும் அசைக்காது, அஸ்திரமும் வதைக்காது, வஞ்சனையும் கொல்லாது, வாதனையும் செல்லாது!

ப்ரம்ஹா முதலிய அனைவோரும்:—பேஷ்! பேஷ்! வெகு சரி; போவோம் வாருங்கள்.

## Act. 2. Scene I.

அங்கம் 2. காட்சி I.

கௌதமர்-அகலிகை. இந்திரன் ஒருபுறம்.

---

அகலிகை:—நமஸ்காரம் நாதா !

கௌதமர்:—தண்டகமண்டலம் பெண்ணே !

அகலிகை:—இதோ நாதா, அதோ மாமா !

கௌதமர்:—என்ன மாமா, எங்கே மாமா ?

அகலிகை:—அதோ சந்தமாமா, அதோ விந்தை மாமா!

கானடா-ஆதி.

பல்லவி.

ஆகாயந்தன்னிலே அழகான சந்திரன்
வாகாகத் தோணுது வட்டமாய்க் காணுது (ஆகா)

அனுபல்லவி

ஹா ஹா என்று ஆச்சர்யமே கொள்ள
ஹோ ஹோ என்று குழைந்தைகள் துள்ள (ஆகா)

சரணம்

சந்திரமாமன் சுந்தரமாமன்
சிந்தையில் களிப்பினை விந்தையா யூட்டுறான்
சில்லென்ற நோக்கமும்
சிங்கார நோக்கமும்
வானத்திலடிவைத்து வண்மையாய்ப் போகுது
கானத்தில் செவிவைத்து கண்யமாய்ப்போகுது (ஆகா)

நீலக்கடலினில் கோலக்கடலே போல்
சிங்காரவானத்தில் பங்காரு பதுமைபோல்
பளபள வென்கிற பண்புடன் மெய்யாய்
தளதளவென்கிற தளுக்குடன் மெய்யாய்
அலங்காரக்கப்பல்போல் அசைவிலாதேகுது
அழகேயுருக்கொண்டு ஆனந்தமாய்ப்போகுது (ஆகா)

கௌதமர்:—நிலாவும் போகுது, வேளையும் ஆகுது !
அர்த்தஜாமப் பூசைக்கு அவசரமாகுது !

அகலிகை:—ஹா ஹா! என்ன விந்தை, எனது சிந்தை! பச்சைக்கிளிகள் ஒருபுறம் கொச்சை மொழிகள் பேசுகின்றன! கருங்குயில்கள் பெருங்குரலில் பாடுகின்றன! தென்றற் காற்று சோலையில் புகுந்து, மனோரஞ்சிதப் பூக்களில் மனதாரச்சென்று, ரோஜாப்பூக்களில் ஜோராயுலாவி சண்பகத்தின் மணத்தையும், ஜாதிமல்லிகையின் குணத்தையுங் கவர்ந்து இங்கே வந்து இனிமையாய் வீசுகின்றது! நிலாவிற்கும், காற்றிற்கும், பூவிற்கும், மணத்திற்கும், ஹா! என்ன வாசம், என்ன நேசம்!

கௌதமர்:—பெண்ணே, யோகத்தாலே ரோகத்தைப் போக்கவேண்டும்.

அகலிகை:—போகத்தாலே சோகத்தைத் தீர்க்கவேண்டும்.

கௌதமர்:—பூஜைக்குப் புஷ்பமும் யாகத்திற்கு அக்கினியும் வேண்டும்.

அகலிகை:—வாசனைக்குப் பூவும் மனதிற்கு மகிழ்வும் வேண்டும்.

கௌதமர்: —புலியாசனம்வேண்டும்.

அகலிகை:—புஷ்பசயனம் வேண்டும்.

கௌதமர்:—காயும் கனியும் தின்னவேண்டும்.

அகலிகை:—பாலும் சீனியும் பருகவேண்டும்.

இந்திரன் தனியாக:—ஹா! எனது பாக்கியமே பாக்கியம், எவர்க்குண்டிருந்த ஸ்லாக்கியம்! கன்னங் கறுத்த பயல், காட்டுமராண்டிப்பயல், தாடி வைத்த தாதா பக்கத்தில், ஹா! என்ன சொல்வேன், அது என்ன, பெண்ணு, கண்ணு, பொன்னு, மின்னு! பார்த்த மாத்திரத்தில் கண்ணைப் பறித்துக் கொண்டு போயிற்று! பத்தரை மாற்றுத் தங்கத்

தையும் பறக்கடித்த பளபளப்பான அவள் வடிவழும், ஜிலுஜிலுப்பான அவள் வதனமும், மினுமினுப்பான அவள் கண்களும், மன்மதன் வந்து பாடம் படிக்கும் மனோ உற்சாகமும், என்னவென்று சொல்வேன், எதெனவுரைப்பேன்! அலங்காரமாதின் அற்புத ஸொகுஸும், சாகப்போகும் கிழவனின் சங்கடப்பேச்சும், அவள் போக எண்ணமும், இவன் யோகநினைப்பும் நன்றாயமைத்தனன் பகவான், நலமாய்ச் சேர்த்தனன் நாதன்!

(சற்று யோசனை செய்து) அதெதப்படியாயினுமிருக்கட்டும் அமராவதியை யாளும் அழகுடையரசன், தேவர்க்குத்தலைவன், சிங்கார ஸ்ரேஷ்டன், கற்பகச் சோலையின் காதன் மணாளன், எனக்கல்லவா அமையவேண்டும், இத்தனை அழகுள்ள சித்திரப்பாவை! நினைக்கும் போதெல்லாம் நெஞ்சமுருகுகின்றது! கருதும் போதெல்லாம் காதல் பெருகுகின்றது! சந்திரபிம்பமோ, சுந்தரப்பதுமையோ, அமிர்த தாரையோ, ஆனந்தப்ரவாகமோ!

ஆனந்தபைரவி-ரூபகம்.

பல்லவி

ஹா ஹா மெத்த அழகான பெண்ணிவள்
ஹோ ஹோ என்ன சுந்தரவடிவினள் (ஹா)

அநுபல்லவி.

சீ சீ யென்னச் சீ கொட்டும் கிழவற்கு
ஹோ ஹோ கிடைத்ததே உன்னதப் பெரும் பொருள் (ஹா)

சரணம்.

நடக்கும்போதே தடுக்கி விழுகிறான்
பேசுவதற்கே மூக்காலழுகிறான்
சிங்காரமென்பதே எங்கேனுங்கண்டிலான்
அலங்காரமென்பதே அறியகிலானிவன்

படைத்தது பாக்கியம்
கிடைத்தது ஸ்லாக்கியம்
இல்லையே யோக்கியம்
உண்மையிவ் வாக்கியம் (ஹா)

காதலென்னுங்கப்பலே, அகலிகை யென்னும் அரிவையே! என்னை வருத்தி, ஆனந்த வடிவாலே ஆசைக்கடலிலழுத்தி, நஞ்சாய்த் தோன்றிய கண்ணாலே நெஞ்சைப் பிளந்து, கண்ணாலே இழுத்துக் கண்ணாலே வளைத்துக் காதலென்னுங் கயிற்றாலே பேதை யென்னைக்கட்டி, என் மனதைக்கெடுத்த எந்திழையே! உன்னை நானடையாவிடில் உயிரோடிருக்கேன் யான்! எப்படியாயினும் பெறாவிட்டால் ஏறுமாறுவேன் யான்!

ஆகட்டும்! நான் சாமக்காலத்தில் சேமக்கோழியாய்த் தோன்றி, கூச்சலிட்டு, குருஸ்வாமியை வெளியேயனுப்பி, அகலிகையோடு அகங்களித்திருப்பேன்.

---

## Act. 2 Scene. 2
அங்கம் 2. காட்சி 2.

(இந்திரன் கோழியாய் வந்து கூச்சலிட, கௌதமர் பொழுது விடிந்ததென்று)

கௌதமர்:—அகலிகா! ப்ராதஹ்காலமாகிறது! ஆற்றிற்குச்சென்று அமிழ்ந்துமே வருவேன்! நீராடவேண்டும், நேம நிஷ்டை முடியவேண்டும்!

கௌதமர் போகுதல்.

இந்திரன் நுழைதல் கௌதமர் வேடம்பூண்டு.

---

இந்திரன் தன்னுருவோடும், அகலிகை ஆனந்த மனத்தோடும் தோன்றல்.

கௌதமர் திரும்பிவந்து மறைந்து கவனித்திருத்தல்.

அகலிகை:—என்ன பாக்கியம்பெற்றேன் என்னரசே! இன்பத்திற் கிருப்பிடமாகிய இந்திரன், தேவேந்திரன், மஹாசுந்தரனாகிய நின்னையடைய என்ன பாக்கியம் பெற்றேன்! தமது சுந்தரமுகமும், சுயம்பிரகாஸமும், கேளிவிலாஸமும், கம்பீர நேசமுமடைந்த நானன்றோ அகலிகைப்பெண்! சந்திரனொளியில் சுந்தரரூபம், தென்றற் காற்றில் திவ்விய உருவம்—ஹாஹா! அந்த ப்ரம்ஹதேவன் அழகில் முதலாயமைத்தார் தங்களை!

நாயகி-ஆதிதாளம்.

பல்லவி.

சுந்தர மனமோகனனே
சிந்தைகலி தீர்த்திடுவாய் (சுந்)

அனுபல்லவி.

சந்தனச்சோலையில் கோகிலம்பாடுது
சிந்தைமகிழ் கிள்ளைகள் சுந்தரச்சொல்கூடுது (சுந்)

சரணம்.

தாமரைபோல் முகம் தளதள வென்னுது
மேகத்தின் மின்னல்போல் தேகமு மின்னுது
சாமரைபோல் தென்றல் பேச்சிலே வீசுது
காந்தியைத்தாளாமல் கதிரோன் கண் கூசுது (சுந்)

இந்திரன்:—ஹா! என் அன்பிற்குரிய ஆருயிரே, பூர்வ ஜன்மத்தில் செய்த புண்ணியத்தின் பலனாக, உன்னையுற்றேன், ஆனந்தம்பெற்றேன், உன்னைப்போன்ற உன்னதப்பெண்கள் அமராவதியிலுங் கிடையார்கள், அகிலமெங்கும் கிடையார்கள்! ரோஜாப்பூவும் ஜோராயில்லை! மல்லிகைப்பூவும் மணமாயில்லை! உந்தன் ஸௌகுஸலம், உன்தன் சிங்காரமும், உன்தன் ஒயிலும், உன்தன் அழகும்,

இந்திரன் தனது பாட்டிலேதாவதொன்றிற்கும் பதிலாய், பின்வரும் பாடலைப் பாடினாலும் அமையும்.

## தோடி-ரூபகம்.

### பல்லவி.

கமலழலர் விழிக்காரிகையே
கண்ணே பெண்ணே கருணைசெய்வையே (கமல)

### அநுபல்லவி.

விமலமுகத்தினில் அமல ஒளியாளே
நிமல இசையுடன் நேர்பெறு கிளியாளே (கமல)

### சரணம்.

சந்திர ஒளிதோற்கும் சுந்தரவடிவாளே
இந்திரனெனைநோக்காய் இன்பத்திற் படிவாளே
அந்தர முழுதுமே அழகுணைப்போல் கிடையாது
அகிலமெலாம் சுற்றினேன் அரிவையே தடையாது (க)

என்னென்று கூறுவேன், என்னென்று பாடுவேன்,
நம்நேசம் என்றென்றும் நிலைத்திருக்கவேண்டும்,
நம்பாசம் என்றென்றும் பாழாகக்கூடாது!

சுருட்டி-ரூபகம்.

பல்லவி.

சிங்காரமயிலே சித்திரக்குயிலே
சிந்தையென்மேல் வைப்பாய்மயிலே (சிங்)

அநுபல்லவி.

அலங்காரமாதே அற்புதத்தேனே
அருள்கூர்ந்தெனையாளுவாய்மானே (சிங்)

சரணம்.

சந்திரன் வந்து சரசங்கள்பேசுரான்
தென்றலும் வந்து தீயினைவீசுரான்
இந்திரன் நானே இன்பமுணர்ந்தவன்
இன்றைக்கும் நாளைக்கு மேற்ற மறிந்தவன் (சிங்)

மல்லிகை வந்து மணத்தினைக் காட்டுது
மாயங்கள்செய்து மனோரஞ்சிதம் வாட்டுது
முல்லையும் தோன்றிப் பல்லையும் விளக்குது
மூடமன்மதபாணம் நெஞ்சைப் பிளக்குது (சிங்)

கிள்ளைகள் பேச்சாலே சள்ளையும்பெருகுது
கீச்செனும் மைனாவின் பேச்சுமேயுருகுது
சள்ளையென் செய்வாயோ கிள்ளையின்மொழியாளே
சங்கடந் தீர்க்காவிடி னிங்கிதமறியாளே (சிங்)

அகலிகை:—ஆசைக்குகந்த அழகான துரையே, நான் ஒருக்காலும் நாதனும்மை மறவேன், நாற்பது வருடமாயினும் நாதனும்மை மறவேன்! சிற்றின்ப விருப்பத்தில் சிந்தை செலுத்திய எனக்கு யோகக்கிழவனால் யாதுபலன்! என் சிங்காரதுரையே, என் சித்திரதுரையே, என்றும் மறக்கக்கூடாது என்னை, என்றென்றும் துறக்கக்கூடாது என்றன்னை!

### சுருட்டி-ரூபகம்.

### பல்லவி.

சிங்கார துரையே சித்திர துரையே
சிந்தையென்மேல்வைப்பாய் துரையே (சிங்)

### அனுபல்லவி.

அலங்காரமன்ன அற்புதராஜா
அருள்கூர்ந்தெனை ஆளுவாய்துரையே (சிங்)

### சரணம்.

சந்திரன்வந்து சரசங்கள் பேசுறான்
தென்றலும் வந்து தீயினைவீசுறான்
இந்திரன் நீயே இன்ப மறிந்தவன்
இன்றைக்கும் நாளைக்கும் ஏற்ற மறிந்தவன் (சிங்)

மல்லிகைவந்து மணத்தினைக் காட்டுது
மாயங்கள்செய்து மனோரஞ்சிதம் வாட்டுது
முல்லையுந் தோன்றிப் பல்லையும்விளக்குது
மூடமன் மதபாணம் நெஞ்சைப்பிளக்குது (சிங்)

கிள்ளைகள் பேச்சாலே சள்ளையும்பெருகுது
கீச்செனும் மைனாவின் பேச்சுமேயுருகுது
சள்ளையென் செய்வாயோ சரசவினோதனே
சங்கடந் தீர்ப்பாய்தேவகம்பீரனே (சிங்)

### சம்பாஷணைகள்.

### இந்திரன்.

உந்தனழகைக் கண்டவெந்தன்
உள்ளம்வாடுதே
ஊர்வசியழகும் ரம்பையழகும்
காதமொன்றே யோடுதே (உன்)

### அகலிகை.

சிந்தைமகிழும் சுந்தரரூபம்
உன்றனுடையதே
எந்தையின்ப மென்னவென்பே
னேற்றமுடையதே (சிந்)

### இந்திரன்.

பொன்னுந்தோற்கும் மின்னும்தோற்கும்
　　மேனியாளே நீ
இன்னும்என்மேல் காதலென்றும்
　　மறவாதாளே நீ　　　　(உன்)

### அகலிகை.

தேவர்போற்றும் மூவர்புகழும்
　　கண்ணியா நீயே
திருவுளத்தின் கருணையென்றும்
　　நீங்காதாய் நீயே　　　　(சிங்)

அகலிகை:—ஹா, என் நாதா, பிராண நாதா, உலகத்தில் யாராயினும், உன்னதமானவரைக்கண்டால், இந்திரன், சந்திரன் என்று, புகழ்வார்கள், மெய் மகிழ்வார்கள். அத்தகைய இந்திரனைப்படைத்த அகலிகையாகிய நான், எப்படி யும்மைப் பிரிந்திருப்பேன்? உன் அழகிலேயே உள்ளம்படிகிறது, உன் ஆனந்தத்திலேயே மனம் லயிக்கிறது.

### மோகனம்-ஆதி.

### பல்லவி.

சததள பங்கஜ முகமுள மதனே
சுபகுண ரஞ்சித சுந்தர மன்னா　　　　(சத)

### சரணம்.

விதவித துன்பத்தில் நிதநிதமழுத்தி
வீணனவேலையில் வாணளமுழுத்தி
பதம்பெறமுடியாமற் செய்யாது பாவையே.
பக்குவமாய்ப் பெற்றேனுன் பரிபூர்ண சேவையே　　(சத)

வைரம்போல் பல்லும் மாணிக்கப்பேச்சும்
மரகதப்பசுமையின் மாட்சியின் வீச்சும்
பவழஇதழுடன் முத்தத்தின் நேசமும்
பாரினி லென் னென்பேன் ஆசையின் பாசமும்　　(சத)

இந்திரன்:—நானென்ன செய்வேன் களின சுந்தரீ! கௌதமர் வந்தால், கஷ்டமாய்விடும்! உனக்கும் கெடுதி, எனக்குங்கெடுதி! ஹா! அந்த சந்திர முகத்தையும் சுந்தரவொளியையும், மறுபடியும் எப்பொழுது காண்பேன், மறுபடியும் எப்பொழுது பார்த்து ஆனந்தங்கொள்வேன், அகமகிழ்வேன்!

எதுகுல காம்போதி-ரூபகம்.

பல்லவி.

ஸொகுஸான சுந்தரி ஜோதிக்ருபாகரி—ஹே
சுந்தராம்பிகா சந்திரப்ரபா (ஸொ)

அனுபல்லவி.

Nice
நைஸான நின்முகம் நளினமேபோல்வது
Wise
ஒயிஸான நின்பதம் ஒய்யாரமானது (ஸொ)

சரணம்.

Lovely face
லௌவி fஏஸதன் லாவண்யமென் சொல்வேன்
Lily
லிலியும்ரோஜாவும் தோற்பதையென்சொல்வேன்
Hallo my dear
ஹல்லோ மை dஇயர் ஆனந்தவாரிதி
Shake hands with me
ஷேக்ஹாண்ட்ஸ் வித் மீ சிங்காரபாரதி
Quite well Quite well Smile
க்வொயட் வெல் க்வொயட் வெல் உன்தன் ஸ்மைல்
Favor do not fail
fஏவர் செய்வாய் dஊ நாட் fஏயில் (ஸொ)

(கௌதமர் கோபத்தோடு வருதல்.)

கௌதமர்:—ஹே! அகல்யா! அடிபாவி சண்டாளி! உனக்கு மதிமயங்கி, ஊனமடைந்து, ஹானிப்பட்டாயே! மானமழிந்து மதிகெட்டு, சிற்றின்பத்தில் சிந்

த்தைசெலுத்தி, இந்தகதிக்காளாய் இன்னல்பட்டொழிந்தாயே! கற்பின் தன்மையையும், கற்பின் பெருமையையும் மறந்து, பதிவிரதா தர்மத்தின் பாங்கையும் மறந்து, இத்தகைய பாவத்தொழில் செய்தமையின் ஹே! அகல்யா, நீ கல்லாகக்கடவை, கண்காணு தொழிவை, ஓடிப்போ! பெண்ணே, பெரும்பேயே, ஒழிந்துபோ!

(இந்திரனைப் பார்த்து)

அடா இந்திரா! அகம்பிடித்த உன்னை அடக்குகிறேன்பார் அவனிதன்னில்! என் தவத்தையும் சிந்தியாது, என் பெருமையையுங் கவனியாது, இந்த வேலைக்குச் சிந்தைதுணிந்த உன்தன் மேனி ஊறடையட்டும்! தேகமெல்லாம் கண்களாகக்கடவது, புண்களாகக்கடவது!

அகலிகை:—அறியாது செய்தகுற்றத்தை அறிந்தோராகிய தாம் பொறுத்தருளி, அபசாரத்தை க்ஷமிக்க வேண்டும்! எனக்கும் பரிகாரம் சொல்லவேண்டும், என்னைக் காக்கவேண்டும், என்னைக் கரையேற்ற வேண்டும். "சிறியார் செய்த சிறுபிழையெல்லாம் பெரியோராயிற் பொறுப்பதுகடனே" என்கிறபடி, என்னை மன்னித்து என்னைக்காக்கவேண்டும் இருடியர்கோவே!

கௌதமர்:—இருக்கட்டும் பயப்படாதே! ரகுகுலந்தன்னில் ராமச்சந்திரன் அவதரிக்கப் போகிறான் அதிசீக்கிரம்! நீ கல்லாய்க் கிடக்கும்மார்க்கத்தில், நேமியாகிய அவன் பாததூளிபட்டுப் பாவையாவாய் மறுபடியும்!

இந்திரன்:—என்னையும் க்ஷமிக்கவேண்டும் வந்தல்பெருமானே, எனக்கும் பரிகாரமியம்பவேண்டும், என்னையும் காக்கவேண்டும், கரையேற்றவேண்டும்!

கௌதமர்:—இந்திரா பயப்படாதே! உன் கண்ணுக்கு மாத்திரம் ஊருய்த் தோன்றுமேயன்றி வேறுயார் கண்ணுக்கும் விளங்கா திருக்க அருள் புரிந்தேன் ஓடிப்போ!

---

## Act. 3 Scene. 1.

அங்கம் 2. காட்சி 1.

அயோத்தி—தசரதர் தர்பார்.

மந்திரிகள் சுமந்திரர் முதலானோர் தயாராயிருக்கிறார்கள். தசரதர் வருகிறார். வந்து சிம்மாதனத்திலமர்ந்தவுடன் தேசவிசாரணை.

---

தசரதர்:—மந்திரி சுமந்திரரே! மாதமும்மாரி மாட்சிமையாய்ப் பெய்து தேசமெங்கணும் க்ஷேமம் திருத்தமாயிருக்கின்றதா?

மந்திரி:—அன்பே பொங்கி அருளே விளங்கும் இன்பமாருள்ளத் திறைவனே கேளாய்! பாசம் பெருகி நேசம் விளங்கும் நின்மலமான மனம், பொன்மயமான நெஞ்சம் தங்களுடையது! அத்தன் தன்னை நித்தம் பணிந்து, சத்தியந்தவருச் சங்கற்பம் கொண்டவர்கள் தாங்களாதலால் என்ன குறை எங்கிருந்துண்டாகப் போகின்றது! வருத்தமென்பது வாடியே போயிற்று, துயரமென்பது தொலைந்தே போயிற்று!

தசரதர்:—ஆறிலொரு கடமை நேர்மையாய் வாங்கி, நீதி செலுத்தும் நியாயாதிபதிகள் நின்மலமாய் விளங்கி, யாவும் சுகமே யிருக்கின்றனரா?

மந்திரி:—புலியும் பசுவும் ஒருதுறையில் நீர்குடிக்க, பாம்பும் கீரியும் க்ஷேமமாய் விளையாட, எலியும் பூனையும் இன்பமாய் உறவாட, அனைத்தும் நன்றாய் அகமகிழ்ந்திருக்கின்றன.

தசரதர்:—இந்திரற்கு நிகரான மந்திரீகேள்! வீடுகள் பல சேர்ந்து நாடுகளாகுமென்பது செம்மையாயுனக்குச் சிந்தையில் தெரியுமல்லவா! வீடுகளெல்லாம் வினையற்றிருந்தால்தான் நாடுகளெல்லாம் நன்றாய்ச் செழிக்கும். அப்பன் குடிகேடனாகவும் மைந்தன் மதிகேடனாகவும், கணவன் பெருமூடனாகவும் மனைவி மாஜாலக்கள்ளியாகவும், தாயும் பெண்ணும் பேயும் நாயுமாகவும், பாட்டியும் பேத்தியும் சள்ளும் லொள்ளுமாகவும் உலகத்தில் எத்தனையோ உபத்திரவங்க ளிருக்கின்றன!

ஏகமுண்டம் கிரகச்சித்திரம்
த்விமுண்டம் க்ரஹநாஸனம்
திரிமுண்டம் க்ராமஸூன்யஞ்ச
சாதுர்முண்டஞ்சபட்டணதே
அதவா பஞ்சமுண்டஸ்ய
ப்ரம்ஹலோக வினஸ்யதே—

என்று வழக்கத்தில் ஸ்லோகம் வண்மையாய் ஏற்பட்டது உனக்குத் தெரியுமல்லவா உத்தம மந்திரீ! அவ்வித குறைகளும் எவ்வித முறைகளும் எந்தம் தேசத்தில் ஏதுமில்லையென்று உனக்குத் தெரியுமா உத்தம அமைச்சா!

மந்திரி:—தருமநெறியில் தலைமை பூண்ட தசரத சக்ரவர்த்தியாம் தன்ய ஸ்ரேஷ்டரே! நீதியாகும் நின்மலச்செடிக்கு வேராகத் தாங்களே விளங்கியிருக்கும்போது, ஏன் உண்டாகின்றது எந்தத் தீமையும், எதற்கு நேரிடுகின்றது எந்தக் கொடுமையும்!

எல்லாம் சுகமே யிருக்கின்றன; யாவும் நன்றே விளங்குகின்றன.

(சேவகன் ஓடிவந்து) மஹாப்ரபோ, நமது குல குருவாகிய ஞானதேசிகர் வஸிஷ்டரென்பவர் வருகின்றாரிதோ!

(தண்ட கமண்டலத்தோடு வஸிஷ்டரேழுந்தருள,
தசரதர் எழுந்துவந்து அவரை நமஸ்காரஞ்செய்து)—

இருளைப்போக்கி அருளைக் கொடுக்கும் முனிவரரே நமஸ்காரம்! நான் செய்தபாக்யம் ஆர்செய்தார்கள் அகிலத்தில்! 'ஊரிகராரு மஹாத்முலு' என்று தெலுங்கர் சொல்வார்கள் தெளிவாக! அதுபோல், எம்மூதாதையர் செய்த தவமோ, யாம்செய்த பேறமோ, எத்தவமோ இத்தருணம், இருடியரே தாங்களெழுந்தருளியது!

வஸிஷ்டர்:—தவளவெண்குடைக்கீழ்த் தரணியைப்புரக்கும், ஒப்புயர்வில்லா உத்தமமன்னா வாழ்க வாழ்க வண்மையாய் வாழ்க! நீடூழிகாலமும் பீடுடன் வாழ்க! எல்லாப் பெருமைகளும் எல்லா உன்னதமும் எல்லாச் சீரும் எல்லாச் சிறப்பும் பேரும் புகழும் பெருமையாய் விளைக! நன்மை யுண்டாக, காணயம் பெருக! ஹே! தசரதா, உன் தேசம் க்ஷேமமா, உன் மனம் குதூகலமா? நாடு நகரம், வீடு வாசல், பெண்டு பிள்ளை, உற்றார் பெற்றார் ஊறில்லாதிருக்கின்றனரா? அகங்களிப்பா மனம்மகிழ்வா? எல்லாமிருந்தும் இதயம் பூவாவிடின், எல்லாமிருந்தும் என்னபயன்! மாநிலத்தன்னில் மனதைவிட, மற்றதுயாது பெற்றது பெருமை!

(சற்றுநேரம் உற்று நிதானித்து, எல்லாவற்றையும் மறந்து, இருடியர் பெருமான், ஆராய்ச்சிவயமாய் அகத்தை நிறுத்தி)

'மாசற்ற மனமே! உன் மகிமை யுரைக்க யாரால் முடியும்! மண்ணும் விளைத்து விண்ணும் விளைத்து.மா ட விளைத்தனையே! சூரியன் காய்வதும் சந்திரன் நில வெறிப்பதும் அண்டங்கள் காணுவதும் நக்ஷத்திரங்கள் மின்னுவதும் எல்லாம் உன்னாலே!' * மனத்தை நிறுத்தினர் மற்றதை நிறுத்தினர்! மனத்தை விடுத்தார் மஹா வருத்தம் தொடுத்தார்! மற்ற நோய்க்கு மருந்துண்டு மனநோய்க்கு மருந்தின்று! மனச்சுகமே மாட்சிமைச் சுகம்; மன நிம்மதியே மஹா நிம்மதி! ஆதலால், ஹே, ராஜன், எல்லாச் சுகத்திற்குமுன்னும் இதயசுகம் உனக்குண்டா, மற்ற சுகத்திற்கு முன்னும் மனச்சுக முனக்கு மாண்புடனிருக்கின்றதா?

ஸர்வம் விஷ்ணுமயம் ஜகது ஓம்
ஸர்வம் விஷ்ணுமயம் ஜகது
ஸர்வம் ப்ரம்ஹ மயம் ஜகது ஓம்
ஸர்வம் ப்ரம்ஹ மயம் ஜகது.

பொங்கு புவனங்க ளெங்குமே யாண்டாலும்
இங்கு மனந்தனி லின்பமி லாவிடின்
என்ன இருந்துமே எது பலன்
பொன்னாலும் பொருளாலும் என்னபலன் (ஸர்வம்)

மனவிஷயத்தில் மன்னவனே உனக்குண்டான சுகத்தை உரைப்பா யெந்தனக்கு!

தசரதர்:—அது தானில்லை அருந்தவ முனிவ!

வஸிஷ்டர்:—என் என்? உள்ளங் கலக்குகின்றது உத்தமா உனமொழி! காதைத்துளைத்து நெஞ்சைப் பிளந்து வயிற்றைக் கலக்கி மனத்தை வாட்டுகின்றது, மன்னவா உன்சொல்!

---

* ஸ்ரீ க்ருஷ்ணசைதன்ய சரித்திரம் (இக்கிரந்தகர்த்தரா லியற்றப் பட்டது)

தசரதர்:—துக்கக்கடலின் மிக்க அலைக்குள், அழுந்திக் கிடக்கின்றேன் அசடனேன் யான்! உள்ளங் கொதித்தது உடலம் துடித்தது, வயிறு பதைத்தது வாட்டம் மிகுத்தது! எல்லா மடங்கி யிப்போது, துக்கக் கடலி லமுக்குண்டு கிடக்கின்றேன்!

வஸிஷ்டர்:—ஏன் ஏன் அப்படி?

தசரதர்:— தன்யாசி-ரூபகம்.

பல்லவி.

அரசாட்சி யிருந்தும்
அவனியி லென் பயன்?
அன்பான குழந்தைகள் இன்பாயிராவிடில் (அர)

அநுபல்லவி.

தரைமாட்சியிற் பெருமாட்சிகள் யாவும்
தக்கபடி எனக்குக் கிடைத்துமே யதனாலே (அர)

சரணம்.

குழலையேபோன்ற மழலையேபேசி
குளிரவேசெய்யும் குழந்தைகள்வாசி
பாச்சி சோச்சியென்று கேட்பதும் இல்லாது
பரதவிக்கும் குறை ஹாஹா பொல்லாது (அர)

அறுபதாயிரம் வருடம் அரசாண்டேன் யான்! என்ன பலன் என்ன லாபம்! குழந்தையில்லாக் குறையே கொதிக்கச்செய்கிறது மனதை! 'புத்' என்னும் நரகத்தினின்றும் பெற்றவனைக் காத்திடவும், இத்தரைதன்னில் உற்றகடனையெலாம் முற்றச்செலுத்தி முறையாக்கிடவும், மனதைக் களிப்பிக்கவும், மாட்சி விளைப்பிக்கவும் மைந்தனில்லாக் குறையே சிந்தைதனை வருத்துகின்றது! என்ன பாக்கியமிருந்தும என்ன ஸ்லாக்கியமிருந்தும் என்ன யோக்கியம் என்ன பாக்கியம் [illegible]ளிடம் காணக்கூடும்!

விருத்தம்.

ஆனந்தப் பேருலகி லழகோடே
பொருளெல்லா மமைந்த தேனும்
தானந்த மில்லாத தனிக்களிப்பிற்
றிருமழலை பயிலும் பாலர்
ஊனந்து முடல்மேலே யுளமுருகச்
சாயாக்கா லுவப்பே யென்னும்
நானந்தப்பேறிலாது நலிகின்றேன்
குலைகின்றேன் நாயே னந்தோ.

உச்சிமுகரவும், உள்ளம் குளிரவும், கொடுத்து வைக்கவில்லை, கொடியனேன் யான்! கீதம்கேட்டுக் கிளர்ந்தேன் யான்: குழந்தைகளின் நாதம்கேட்டு நயந்தேனில்லை! குழலைக்கேட்டுக் குதூகலித்தேன் யான்: குழந்தைகளின், மழலையைக்கேட்டு மகிழ்ந்தேனில்லை! வீணையைக்கேட்டு வியந்தேன் யான்: மக்களுடைய சித்திர ஒலியைக்கேட்டுச் சிந்தைகளித்தேனில்லை!

"குழலினி தியாழினி தென்பர்தம் மக்கள்
மழலைச் சொற் கேளாதவர்"

என்று பின்னுளி லொருவர் சொன்னாலும் சொல்வர்! என்ன உலகம் என்ன வாழ்வு!

விருத்தம்.

பாலரிலாக் குறையதனாற்
பதறுகின்றேன் கதறுகின்றேன்
பாவி நான்தான்
பாலரிலாத் துயரதுதான்
படமுடியாப் பெருந்துயரிற்
படித்த தென்னைப்
பாலரிலாச் சங்கடத்தைப்
பரமன்றான் போக்கவேண்டு
மல்லதாயிற்

பாலசிலாத் துன்பத்தைப்
பரமகுரு நீவிர் தாம்
அகற்றலாகும்.

வஸிஷ்டர்:—அஞ்சாதே மன்னா, அயராதே தசரதா.

தசரதர்:—எந்தனுக்குக் கதிமோக்ஷம் ஏதேனு மிருக்கின்றதா?

வஸி:—உண்டு உண்டு, தசரதா, உளங்கலங்க வேண்டாம்!

தச:—கம்பவில்லை நான், நற்றவ முனிவரே!

வஸி:—ஒன்றுக்கும் பயப்படாதே, தசரதா, யாதொன்றுக்கும் வருந்தாதே.

தச:—ஆயின் என்செய்யவேண்டும்?

வஸி:—கலைக்கோட்டு முனிவரை நம் நாட்டுக்கழைத்து வரின், புத்ரகாமேஷ்டியாகம் புகழ்ச்சியாய்ச் செயலாம்: புத்திரர் பிறப்பார்கள், நற்றவம் பெருகும்.

தச:—அவர் தாம் யாவர், அறைகுவீர் முனிவரே!

வஸி:—உரோமபாத ராஜனுடைய உத்தம நாட்டில், மாரி யென்பதில்லாது, மனம்வருந்தி, காட்டிலுள்ள கலைக்கோட்டு முனிவரை நாட்டிற்கழைத்துவர நன்றாய் முயன்றார்கள்!

தச:—ஹா! அவரை யெப்படி யழைத்துவந்தார்கள்?

வஸி:—முத்தநகை தத்தைமொழி, மீன்போலும் கண் மான்போலும் பார்வை, கொவ்வை யிதழ் கோமள உடல், பவளவாய் பங்கஜமேனியுடைய பாவையரை யனுப்பிப் பக்குவமா யழைத்துவந்தார்கள்.

தச:—மயங்கியா வந்தார் மஹாரிஷி யவர்கள்?

வஸி:—இல்லை, யில்லை.

தச:—மற்றெப்படி?

வஸிஷ்டர்:—28-ம் பக்கத்தில் 'அஞ்சாதே மன்னு அய ராதே தசரதா' என்பதன்பின் சேர்க்க.

இதற்கா நீ உளங்கலங்க வேண்டும், இதற்கா நீ மனவருத்தப் படவேண்டும்? கற்றறிந்த நீ முற்றும் மறந்தவன்போல், முறையிடுகிருயே, குறைபடுகிருயே! (தனக்குத் தானே பேசிக்கொள்ளுகிருர்.) ஹா ஹா என்ன விந்தை என்ன உலகம்! என்னஇருந்தும் உலகத்தில் எவ்வளவு திருப்தியும் காணவில்லே. பணமிருந்தால் பாலரில்லேயென்கிருர்கள்; பாலரிருந்தால் பணமில்லே யென்கிருர்கள். பணமில்லே துணியில்லே, கஞ்சியில்லே கூழில்லே, வழியில்லே வகையில்லே யென்று கத்துகிருர்கள் சிலபேர் காகமபோலே! குழந்தையைக் கொடுத்தான் கோபாலன், கூடவே கொடுத்தான் நோயும் நொடியும்! ஏனே கொடுத்தான் இந்த குழந்தைகளே, எவரே கேட்டார் குழந்தைகளே என்று கூறிச் சில பேர் என்னென்னவோ அழுகிருர்கள். குழந்தையில்லாதவர்கள் கோடிபுண்யம் செய்தவர்கள்; துயரமே ஆயிற்று, தூக்கமேபோயிற்று, வாதனே மிகுத்தது, வேதனேபெருத்தது என்று குழந்தையுள்ளவர்கள் குழந்தை யில்லாதவர்களேப் பார்த்து என்னென்னவோ சொல்லி ஏக்கங் கொள்ளுகிருர்கள். குழந்தை யில்லாதவர்கள் உத்தமனுகிய இந்தக்கொற்ற வேந்தனேப் போல், என்னஇருந்தும் என்னபலன், எதிருந்தும் என்னசுகம், குழந்தை யில்லாமல் கோடித்தனம் இருந்தும், ஒன்றும் பலனில்லே, ஒன்றும் சுகமில்லேயென்று ஓரேபைத்தியமாய் ஓரே அழுகை அழுகிருர்கள். ஹா! பைத்தியக்கார உலகமே, ஹா! அவிவேக உலகமே, ஹா! அந்தகார உலகமே, அஞ்ஞான உலகமே, மனநிம மதியில்லாது, மனத்திருப்தியில்லாது, வருத்தத்திலேயே கறகறவெனச் சுழன்று, மயக்கத்திலேயே கிறுகிறென உழன்று, தடதடவென வுதைத்துக்கொண்டு படபட

வென அடித்துக்கொண்டு, ஹா கேடுகெட்ட வுலகமே, பாடுபட்ட உனது பாதவிப்பை என்னென்று கூறுவேன்! பெற்ற குழந்தைகளையாவது வைத்துக்காக்க வகையுண்டோ? கலகலவெனப் புலபுலவெனக் குழந்தைகளைப் பெற்றுத் திடுதிடுவெனக் கிடுகிடுவெனத் திகிலும் கிலியும் மிகவுங்கொண்டு, வைத்துப்படைக்க வழியில்லாது, ஆப்பதனைப் பிடுங்கிவிட்ட பேய்க்குரங்கைப்போல அல்லாட்டப்படுவது என்ன அவஸ்தை! என்ன அவிவேகம்! (மறுபடியும் தசரதரைநோக்கி) ஆயின் தசரதா, உனக்குக்கடவுள் ஒன்றொன்றும் செய்யமாட்டார். உன்கோரிக்கையைக் கடவுள் உண்மையாய் ஈடேற்றுவார்! உத்தமனான உனக்கு உன்னதமான குழந்தைகள் பிறப்பார்கள்! பாவப்பஞ்சில் தீயைவைத்த உனக்குப் பாக்தாமென் கொடுப்பான் பண்பான குழந்தைகளை! ஒன்றுக்கும் பயப்படாதே! யாதொன்றுக்கும் அஞ்சாதே!

(இதன்பின் 28-ம் பக்கத்தில், 'தசரதா:—எந்தனுக்குக் கதிமோக்ஷம் ஏதேனுமிருக்கின்றதா,' என்பது முதல் தொடர்ச்சியாய்ச் சேர்த்துக் கொள்க.)

வஸி:—கலைக்கோட்டு முனிவர் யாம், உடற்கோட்டு முனிவர்கள் இவர்கள் என்று கூடவே வந்தார் குரு மஹாராஜர்.

தச:—உலகமே தெரியாத உத்தமர் போலும்!

வஸி:—ஆம்! ஆம்! அதற்கென்ன தடை! தலையில் கொம்பிருக்கின்றது நமக்கு, அவர்களும் ஒருவாறு நம்மைபோலிருக்கின்றார். என்று நம்பியேவந்தார் நற்றவ முனிவர்!

தச:—அப்புறம்?

வஸி:—வந்தனர் அவரும், பெய்தது மழையும்! பூமியும் குளிர்ந்தது, புண்யமும் விளைந்தது!

தச:—அருந்தவ முனிவரை இங்கு அழைத்து வர முடியுமா?

வஸி:—புத்திரகாமேஷ்டி யாகத்தை விசித்திரமாய்ச் செய்வதற்கு, கலைக்கோட்டு முனிவர் கட்டாயம் வரவேண்டும்.

தச:—அழைத்துவர ஏற்பாடு செய்யுங்கள், அருந்தவ முனிவரே, அனைத்தையும் இங்கு அரை நிமிஷத்தில் சேர்க்கிறேன்!

(மந்திரியை நோக்கி) யாகத்திற்கு வேண்டியவற்றை, வேகமாய்த் தயார்செய்யுங்கள்,

மந்:—இதோ முடிந்துவிட்டது இரண்டு நிமிஷத்தில்!

---

## Act. 3. Scene 2.

அங்கம் 3 காட்சி 2.

[யாகசாலை—ரிஷிக்கூட்டங்கள், தசரதர்]

[கலைக்கோட்டுமுனிவர்க்கு நமஸ்காரஞ்செய்து அழைத்து வருதல்; யாகம் நிறைவேறல்.]

---

| | |
|---|---|
| ஸூர்ய க்ரஹாயநம : | ஓம் |
| ஸூர்யக்ரஹ அதிதேவதாயநம : | ஓம் |
| ஸூர்யக்ரஹ ப்ரதிதேவதாயநம : | ஓம்! |
| சந்த்ரக்ரஹாயநம: | ,, |
| சந்தரக்ரஹ அதிதேவதாயநம: | ,, |
| சந்த்ரக்ரஹ ப்ரதிதேவதாயநம : | ,, |
| அங்காரக்ரஹாயநம : | ,, |
| அங்காரக்ரஹ அதிதேவதாயநம : | ,, |
| அங்காரக்ரஹ ப்ரதிதேவதாயநம : | ,, |
| புதக்ரஹாயநம : | ,, |
| புதக்ரஹ அதிதேவதாயநம : | ,, |
| புதக்ரஹ ப்ரதிதேவதாயநம : | ,, |
| ப்ரஹஸ்பதிக்ரஹாயநம : | ,, |
| ப்ரஹஸ்பதிக்ரஹ அதிதேவதாயநம : | ,, |
| ப்ரஹஸ்பதிக்ரஹ ப்ரதிதேவதாயநம : | ,, |
| சுக்ரக்ரஹாயநம : | ,, |
| சுக்ரக்ரஹ அதிதேவதாயநம : | ,, |
| சுக்ரக்ரஹ ப்ரதிதேவதாயநம : | ,, |
| சனிக்ரஹாயநம : | ,, |
| சனிக்ரஹ அதிதேவதாயநம : | ,, |
| சனிக்ரஹ ப்ரதிதேவதாயநம : | ,, |
| ராகுக்ரஹாயநம : | ,, |
| ராகுக்ரஹ அதிதேவதாயநம : | ,, |
| ராகுக்ரஹ ப்ரதிதேவதாயநம : | ,, |
| கேதுக்ரஹாயநம : | ,, |
| கேதுக்ரஹ அதிதேவதாயநம : | ,, |
| கேதுக்ரஹ ப்ரதிதேவதாயநம : | ,, |

[விகாரபூதம் பாயசம் கொண்டுவந்து கொடுத்தல்.]

[கௌஸலை. சுமித்ரை, கைகேசிக்கு தசரதர் பங்கிடுதல்.]

## Act. 3. Scene 3.

அங்கம் 3. காட்சி 3.

[தசரதர், வஸிஷ்டர், மந்திரி.]

மந்திரி:—மஹாராஜா, கௌஸலையம்மாளுக்கு ஒரு ஆண் குழந்தையும், சுமித்திரையம்மாளுக்கு இரண்டு ஆண்குழந்தைகளும், கைகேசியம்மாளுக்கு ஒரு ஆண்குழந்தையும் பிறந்து அனைவரும் சௌக்கியமா யிருக்கின்றார்களென்று, சங்கதிவந்து இங்கிதம் விளைத்தது!

தச:— அருள்பழுத்த கற்பகமே அன்புநிறைவாரிதியே
அன்பா யென்பால்
மருளகத்து மனத்தோடே பொருளளித்த புண்ணியனே
புனித வாழ்வே
குருடனுக்குக் கோல்கிடைத்து முடவனுக்குத் தேன்கி
முறைமை போல [டைத்த
அருளெனக்குக் கொடுத்திட்ட
ஆரமுதே அடித்துணைகள் போற்றி போற்றி.

(குழந்தை யுண்டான மகிழ்வு)

எம்பெருமா னென்றனக்கே இன்புதல்வர் தந்தனனல்
எம்பெருமா னென்றனக்கே யாவையுமே யீந்தனனல்
எம்பெருமா னருளாலும் எங்குரவர் மொழிபோலும்
எம்பெருமா னெனக்களித்த பேறதனை யென்னென்பேன்

என்மகிழ்வே பெருமகிழ்வாம் என்னிலையே நன்னிலையாம்
என்கண்ணே விழியில்லார்க் கிருகண்ணும் நேர்ந்ததுவாம்
என்கதையே இருடியரின் எழிலதனை யினிதுணர்த்தும்
என்கதையே பெருமானின் இன்கருணை தனைவிளக்கும்.

தச:—ஞானமளித்த கற்றவமுனிவரே, தங்களாசிர்வாதத்தாலும் தங்கள் உபதேசத்தாலும் தன்னியனானேன; ஆனல் அபசாரமாத்திரம் பட்டேன. அதற்காக என்னை மன்னித்தல் வேண்டும்!

வஸி:—கடவுள்செயல், ஐயன்கருணை, ஆனால் நீ என்ன அபசாரப்பட்டாய், நீ ஒன்றும் செய்யவில்லையே!

தச:— ஏழைநான் கொண்டதுயர்
எடுத்தியம்ப லாகாது
ஏந்தல் நீ ரியம்பியதை
யென்னெனவோ நினைத்திட்டேன்
மோழைநான் நும்பெருமை
முழுதுணர வல்லனோதான்
மோனமுனி தனைக் கொணர
மொழிந்ததையும் நம்பவிலை
சோழைமனந் தன்னாலே
குருசொலிலும் பற்றில்லேன்
குற்றமற வேள்விதனை
முற்றுவித்தும் நம்பவிலை
வாழஇவண் அவதரித்தார்
வான்குமரர் தேன்மொழியார்
மாட்சிமையை யின்றறிந்தேன்
மாமுனிவா பதம்போற்றி.

மன்னிப்பாயென்றன்னை மாமுனிவா
மாண்பறிந்தேன்
உன்னிப்பாய் முக்க லும் உற்றறிந்த
நற்றவனே
தன்னியனே தவித்தேற்குத் தனயரையே
தந்திட்டாய்
தன்னியனே நின்பெருமை நான்கூறுந்
தகைமைத்தோ.

குழந்தை பிறக்கும் என்று தாங்கள் சொன்ன போதும், யாகம் செய்யவேண்டும் என்று தாங்கள் கூறியபோதும் நான் ஒன்றும் நம்பவேயில்லை. தங்கள் பெருமை இப்போதுதான் புலப்பட்டது, தங் தங்கள் மஹிமை இப்போதுதான் தெரியவந்தது. எல்லாம் தங்கள் கருணையே, எல்லாம் தங்கள் கண்ணோக்கமே!

(33 ம் பக்கத்தில் வஸி:—'என்னுமேல் யானது இம்மியளவும் கிடையாது' என்பதன்பின் சேர்க்கவும்.).

உன்னைப்போல் புண்யவான், ஹே, தசரதா, உலகத்தில் யாவரிருக்கின்றார்கள்! கோடிபேரிலும் ஒருவர் குவலயத்திலுனைப்போல் காண்பதருமை! ஹே, ராஜன், இவ்வுலகத்தில் ஏறக்குறைய எல்லோரும், பாவமென்பதையே பாயசமாய்க் கொண்டவர்கள்! சங்கடம் விளைப்பதே சர்க்கரைபொங்கல்! தகல்பாஜித்தனம் செய்வதே, ததியோதனமாகின்றது! வாதனைபுரிவதே வடைதோசை, சுடுமூஞ்சியைக் காட்டுவதே சுண்டல் பிரஸாதம்! மோசம்பலித்தால் பூசைபோடுவார்கள், திருடுமுடிந்தால் தீபமேற்றுவார்கள், கன்னக்கோல் வைத்தால் கற்பூரம் கொளுத்துவார்கள்! மோசமென்பதே உலகத்தில் மூடுபனியிட்டிருக்கின்றது. ஆகாயத்தைக் காட்டிலும் அபாரமாய்ப் போர்த்திருக்கிறது அந்தகாரப்போர்வை, அவிவேகப்போர்வை, துன்மார்க்கப் போர்வை, துஷ்டப்பெரும் போர்வை! இத்தனை அகோரத்தில், இவ்வித அகணிதமாயாப் பிரபஞ்சத்தில்; அஞ்ஞானதிமிரத்திற்கு ஆவேஸச்சூர்யன்போல், தகத்தகாயமாய், மிகப்பிரகாஸமாய்ப் பார்த்தவர்கள் கண்களுக்குப் பளிச் பளிச் என்று பரமானந்தம் கொடுக்கத்தக்க பாஸ்கரோதயமாய்ப் பாரில்தோன்றினாய் பக்குவமாய் நீ! இன்னல்போக்கும் மன்னவர் கோனே, இனனுமுரைக்கவா உன்னுடைப்பெருமை! அரசாட்சியாகும் ஆகாயந்தன்னில் அழகான சூரியனாய் நீ அலங்காரம் செய்யும் அற்புதந்தன்னால், நல்லவர் முகங்கள் நளினமாய்த்துலங்கின! துஷ்ட ஜனங்கள் கஷ்டங்கொண்டு, இடியைக் கேட்ட நாகம் போல், விதிர் விதிர்த்துப் பதைபதைத்துத் துடி துடித்துத் திகை திகைத்து எட்டுத் திசைகளிலும் மட்டிலாதோடவும், குள்ளநரிபோன்ற கள்ளப்பயல்கள் துள்ளித்

துடித்துத் தொப்பென்று சாய, கோரப் புலிபோன்ற கொடிய தீயோர் வேரோடழிந்து வெந்நீராய் வெந்து ஊர்பேரிலாது ஒருமிக்க மாள, மதயானையைப்போல அதஞ்செய்யும் அக்கிரமப் பாவிகளெல்லாம் அம்படி பட்டு, வீறிட்டு, முறையிட்டுக் கதறிட்டுப் பதறிட்டு உயிர்விட்டு அடியோடே தொலைய இத்தனை வன்மை செய்த உன்னை எத்தனைநாள் வருத்துவார் எம்பெருமான்! அவன் செய்தான் கருணை! அடியேனாலானது அற்பமுமில்லை!

(இதன் பின் 33-பக்கம் 'தச:—ஆயினும் தபோநிதே' என்பது முதல் சேர்த்துக்கொள்க.)

---

(வஸிஷ்டரை நமஸ்கரித்து)

பஞ்சேந்திரியங்களின் சேஷ்டைகளைப் பஞ்சாக்கினியிலே போக்கிப் பரந்தாமனைநாடிய பரமக்ருபாநிதே! தங்கள் பெருமையையும் நோக்காது, தங்கள் தவத்தின் வன்மையையும் உணராது, தாமரையை யடுத்திருந்த தவளையைப்போலானேன், அபசாரப்பட்டேன்! என்னைத் தாங்கள் க்ஷமித்தருளி என்னைத் தாங்கள் ரக்ஷிக்கவேண்டும்!

வஸி:—அப்பா தசரதா, எல்லாம் ஈசன்செயல், எல்லாம் இறைவன் திருவுளம்! என்னாலே யானது இம்மியளவும் கிடையாது!

தச:—ஆயினும், தபோநிதே, அன்பர் வழியாய்த்தானே ஐயன் அருள்புரிவான். அதுபற்றித் தானே பகவத்பக்தியைக் காட்டினும் பாகவத பக்தியே விசேஷித்தது என்று வைதீகர்கள் கூறுவது. ஸ்வாமி, குழந்தைகட்கு நாமகரணம் செய்தபிறகு தான் தாஙகள் எழுந்தருள வேண்டும்.

வஸி:—அப்படியே சந்தோஷம்! நாமகரணத்திற்கு நாளிடவேண்டாவோ?

* * *

வஸி (மந்திரியை நோக்கி):—அப்பா மந்திரீ! குழந்தைகளைக் கொண்டுவரவேண்டும். இந்த வேளையில் நாமகரணஞ் செய்யவேண்டும்.

தச:—அருளே மிகுந்த அருந்தவ முனிவரே! தாங்களேயிருந்து தடையில்லாது நடத்த வேண்டும் எல்லாக் காரியங்களையும் உல்லாஸ மனத்தோடே.

வஸி:—மஹாராஜன்! தன்யோஸ்மி! தன்யோஸ்மி!

தச (மந்திரியை நோக்கி):—அன்பிற்குரிய ஆருயிர் மந்த்ரீ! கடவுள் தமது கருணைப்பெருக்கத்தால், குழந்தை

எனக்குத் தந்து குதூகலமடையச் செய்ததற்கு, நாடுமுழுவதும் நன்றாய் மகிழ்வெய்தல்வேண்டும்; தேசமுழுவதும் ஆனந்தக்கடலில் அமிழ்ந்ததாக வேண்டும். அவற்றிற்கு வேண்டியவற்றை ஆடங்கமில்லாமல் உடனே நடத்தவேண்டும்.

மந்:—அப்படியே, மஹாராஜா.

நாமகரணம்.

வஸி:—[கௌஸலை குழந்தையைப் பார்த்து ஆசீர்வதித்து]

கராமலையத்தளர் கைக்கரியெய்த்தே
அராவணை யிற்றுயில் வோயென வந்நாள்
விராவியளித்தருள் மெய்ப்பொருளுக்கே
இராமனெனப் பெய ரீந்தனனின்றே கம்பராமாயணம்.

அப்பா, ராமா, அருமந்தக் குழந்தாய்; நன்றாய் வாழ்க, நளினமாய்த்துலங்குக! பல்லாண்டு பல்லாண்டாய் வாழ்க! பாவம்தொலைக! புண்ணியம்பெருக!

[மற்ற மூன்று குழந்தைகளுக்கும் பெயரிடல்.]

---

## Act 4. Scene I.

### அங்கம் 4. காட்சி I.

(விஸ்வாமித்ரர் வந்து ஒருபுறமாய் நின்றுகொண்டு)

ஹா! ஜகதீசா! நான் வந்தகாரியம் நல்லகாரியமாயிருக்கிறது! ராக்ஷதப்பாவிகளால் நானும் என்னைப் போன்ற மற்ற ரிஷிஸ்ரேஷ்டர்களும் தபோதனர்களும் படும்கஷ்டம் இவ்வளவவ்வளவென்று இயம்பவே முடியாது. மும்மூர்த்திகளி லொருவனாகிய முகுந்தனே வந்து ராமபிரானாய் அவதரித்திருக்கிறான். தசரதராஜ

னே தனயனைப் பெற்றான் ராமச்சந்திரனை! ராமன்வந்து தான் ராக்ஷதரைக் கொல்லவேண்டும். தசாதனைக் கேட்கலாமென்றுதான் போகிறேன். அவன் கொடுப்பானோ கொடுக்கமாட்டானோ! ராமன் வராவிட்டால் ராக்ஷதர்கள் மடியார்கள். தசாதன் கொடுத்தே யாக வேண்டும் தவப்பெரும் புதல்வனை! நான் கேட்டால் இல்லையென்றும் சொல்வானோ! இல்லையென்றால் நான் விடுவேனோ! நல்லது பார்க்கலாம்.

---

## Act 4. Scene 2.

அங்கம் 4. காட்சி 2.

தசரதர் தர்பார்.

தசரதர், வஸிஷ்டர், மந்திரிகள்

---

தச:—ஹே குருநாதா—என்னுடைய அஞ்ஞானத்தையெல்லாம் பறக்கடித்து என் அறியாமையையெல்லாம் அறவே யொழித்து என்னை ஆட்கொண்டு எனக்கு அருள் கொடுத்தருளினது போதாதென்று, மக்களில்லாக் குறையினையும் மனதாரப்போக்கி விட்டீர்! தங்களுடைய கருணைப் பெருக்கையும் தங்களுடைய கிருபையின் விசேஷத்தையும் வியந்து பேசுவதே யல்லாமல் வேறுயா னென்செயக் கூடும், ஏழையேன் யான் என் செயப்போகிறேன்?

வஸி:—எல்லா விசேஷமும் எம்பெருமான் செயல்! கருப்பைக்குள் முட்டைக்கும் கல்லினுள் தேரைக்கும் உணவளித்து, உறுதியளித்து, நெடுநாள் வாழச்செய்யும் நின்மலச்செயல், எம்பெருமான் செயலேயன்றி என்னுடைய செயலா,? எம்பெருமானுடைய சக்தியாலே யன்றி, அஃது என்னாலே

யாவதொன்று? உலகத்தைப் புரந்தாய், உயிர்களைக் காத்தாய், மனுநீதி தவறாது மன்னுயிர்களை ரக்ஷித்தாய், கொடுமைசெய்யும் அரக்கரைக் கோடி கோடியாய் வதைத்தாய்—புலியும் பசுவும் ஒரு துறையில் நீர்குடிக்கப் பாம்பும் கீரியும் பக்குவமா யுறவாட, இத்தனைசெய்த உனக்கு எத்தனை நாளைக்குப் புத்திரரில்லாமல் எம்பெருமான் வைத்திருப்பார்! ஐயனே வந்தான் அவதரித்தான் ராமனாய்! உன் பாக்கியமே பாக்கியம், எவர்க்குண்டிந்த ஸ்லாக்கியம்!

(சேவகன் ஓடிவந்து) மஹாப்ரபோ! மண்டலாதிபா, ராஜகம்பீரா! வருகின்றார் விஸ்வாமித்ரர்! வாயுவேகமாய் வருகின்றார் மஹாரிஷியானவர்!

தச:—வாயுவேகமாயா?

சேவ:—வாயுவேகமாயா, மனோவேகமாய்!

தச:—என்னகோபம், எது ஆவேஸம்?

வஸி:—ஒன்றுமில்லை, பயப்படாதே!

(விஸ்வாமித்ரர் வருகிறார்)

(தசரதர் அவருடைய அடிபணிந்து)

தச:—இருளை யொழித்து அருளைக்கொடுக்கும் அருந்தவ முனிவரே, பெருந்தவப் பெரியவரே! ஏழையேன் செய்த புண்ணியம், பாவியேனுடைய பாக்கியம், எழுந்தருளினீர்கள் இங்கே!

விஸ்:—மன்னவனே, க்ஷேமமா?

தச:—தேவரீர் ஆசீர்வாதம். ஏழையிருப்பிடத்திற்கு ஏந்தல் எழுந்தருள என்னபாக்கியஞ் செய்தேன்!

(மறுபடியும் நமஸ்கரித்து ஆசனத்தமர்த்தல்.)

விஸ்:—ஹே! மஹாராஜன், நான் அவசரமான காரியத்திற்கு நாடிவந்தேன் உன்னிடத்தில்!

தச:—குருமஹராஜ், அஃதென்ன?

விஸ்:—வானுலகத்திலிருக்கும் தேவர்களுக்கும் மண்ணுலகத்திலிருக்கும் ரிஷிகளுக்கும் கஷ்டம்வந்தாலும் நஷ்டம் நேரிட்டாலும், கைலேயில் வாசஞ்செய்யும் கர்த்தனிடமாவது, பாற்கடலிற் பள்ளிகொள்ளும பரந்தாமனிடமாவது, சத்தியலோகத்திருக்கும் பிரமனிடமாவது, சொர்க்கலோகத்திருக்கும் இந்திரனிடமாவது, பூலோகத்திலிருக்கும அயோத்தியை பாளும் அற்புத அரசன், அதிபலவீரன், வெகு வெகு தீரனுகிய உன்னிடமாவது குறையைச்சொல்லி முறையிட்டுக் கொள்ளவேண்டுமேயன்றி வேறு என்செயக்கூடும்?

தச:—குருநாதா, ஆக்ஞைக்குக் காத்துக் கொண்டிருக்கிறேன் அடியனேன!

விஸ்:—ஆயின், நான் கேட்பவற்றைக் கொடுப்பாயா?

தச:—ஆக்ஷேபனேயென்ன விருக்கின்றது? இக்ஷ்வாகு குலத்திற் பிறந்த இணையற்ற வீரர்கள் யாவரேனும் கேட்டதைக்கொடாது ஓட்டம் பிடித்திருக்கிருர்களா? கொடுப்பதே வேலே, அவர்களுக்கு, அளிப்பதே ஆனந்தம்!

விஸ்:—ஆனல் நான் கேட்பதைக் கொடுப்பாயே!

தச:—யதிராஜா, ஹே, தபோநிதே! இன்னும் என் சந்தேகம், தங்களுக்கு, இன்னும் என் ஆலோசனே?

விஸ்:—நானிலம் புரக்கும் நராதிபா, நன்ருக யோசித்துச்சொல். ஆத்திரத்தில் ஒன்றை நேத்திரமிழந்தவன்போல் ஆவேசத்துடனே ஆர்ப்பரித்துச்

சொல்லாதே! உன் மூதாதை, அரிச்சந்திரன், அவசரத்திலே சொல்லி அவஸ்தைப்பட்டது அகிலமெல்லாம் தெரிந்திருக்கிறதே! நிதானமாய்ச் சொல், சாவதானமாய்க் கூறு!

தச:—முனிபுங்கவா, என் மூதாதை அரிச்சந்திரர் ஏறுமாறாகச்சொல்லி, அதனை நடத்தாமல், தாறுமாறாய்விட்டாரா? சூர்ய குலத்துக்குக் கொடுப்பதே பிருது, சொன்னதை நடத்துவதே சொர்க்கானுபவம். சத்தியத்தை நிறுத்துவதே மோக்ஷசாம்ப்ராஜ்யம்! அந்த குலத்தில் வந்த அடியேன்மீது, ஆசார்ய ஸ்ரேஷ்டராகிய தம்முடையவும் தம் போல்வாருடையவும் அனுக்ரஹம்பெற்ற என்பால், ஏன் தங்களுக்குச் சந்தேகம், ஏன் தங்களுக்கு யோசனை?

துளித்தேனூர் தொடைமௌலித் தார்புனைந்த
வேந்தரெம்தந் தொன்னாள் மன்னர்
அளித்தேமென் றெவரேனும் சுளித்தாராய்
அளியாதே விழித்த துண்டா?
களித்தேன்யான் உன்வரவால் கடையேன்யான்
கொடையதனில் கலங்க மாட்டேன்
அளித்தேன்யான் அளித்தேன்யான் அளிப்பேன் யான்
கேட்பவற்றை அடியேன் தானே.

விஸ்:—சபாஷ், தசரதா, ஆயின் யான்கேட்பதை அகக்களிப்போடே கொடுப்பாய்!

தச:—ஆஹா! ஆக்ஷேபனையில்லை! தங்கள் ஆசீர்வாத பலன் இருக்கும்போது, தங்கள் கிருபாநோக்கம் என்மீது பூரணமாய் விழுந்திருக்கும்போது, என்ன குறை ஏன் உண்டாகும்!

விஸ்:—நல்லது! அதெல்லாமிருக்கட்டும் அவசரமாய்ப் போகவேண்டும்!

தச:—அடியேன் !

விஸ்:—ஆனல் என்ன சொல்லுகிருய், என்னுடன் அனுப்புவையா ?

தச:—எதை? யாரை ?

விஸ்:—ராமனை, அபிராமனை, பரந்தாமனை, பத்மநாபனை! அருமந்தக் குழந்தையை அனுப்புவாய் என்றேடே !

மாயாமாளவகவுளம்-ரூபகம்.

பல்லவி.

ராமனைத் தருவாய் ரகுகுல (ஸ்ரீ)
ராமனைத் தருவாய்

அனுபல்லவி.

சோமனைத் தோற்கச்செய் சுந்தர
ராமனை அபிராமனைப் பரந்தாமனை (ராமனைத்)

சரணம்.

அரக்கர்கள் தோன்றி அனர்த்தமேசெய்ய
அன்பரா மடியர்கள் ஆவியும்நைய
தாடகைப் பாவியின்கோரமும் ஒழிய
மாதவர் விண்ணவர் மலர்மாரிபொழிய (ராம)

தச:—ஹா! ராமனையா, அருமந்தக் குழந்தை ராமனையா, என் ஆயிர்க்குயிரான ராமனையா, இத்தனை நாளில்லாது பெற்றகுழந்தை ராமனையா? ஐயோ, என் ராமனையா, என் கண்மணியையா, யாகத்தால் வந்த தேவக் குழந்தையையா, பச்சைக்குழந்தையையா, பரமானந்தத் திருவுருவையா? என் செய்வேன், தம்பாகிதே, எனக்கொன்றுக் தோன்றவில்லை !

விஸ்:—ஹாபேஷ்! கேட்டதைக்கொடாது ஒட்டம் பிடிக்கிறாயே இப்போது! நீ கொடுத்தவாக்கு என்ன வாயிற்று? நீ சொன்னபேச்சு என்னவாய்ப் போயிற்று?

தச:—தபோநிதே என்ன செய்வேன்!

விஸ்:—தசரதா, ஏழை நெஞ்சையுடைய இறைவர் பெருமானே! எதற்குப் பயப்படுகிறாய், ஏதுக்கு அஞ்சுகிறாய்? சம்பரனைக்கொன்று இந்திரனுக்கு நாடளித்த அஞ்சா நெஞ்சு படைத்த நீ, எதற்கும் அஞ்சாத நீ, கோடிக்கணக்காய்த் தேடிவந்த வேகவீரர்களையெல்லாம் போகத்தொலைத்த சுத்த வீரனாகிய நீ, சத்யசந்தனாகிய நீ, இதற்கா மனங் கலங்குகிறாய், இதற்கா சிந்தைப்படுகிறாய்? என்னுடைய யாகமெல்லாம் எப்படி யெப்படியோ கெட்டு விட்டது! ராக்ஷதர்கள்வந்து ரவுண்டடிக்கிறார்கள், அடிக்கிறார்கள், இடிக்கிறார்கள், உதைக்கிறார்கள், வதைக்கிறார்கள்! என் தபமும் கெட்டது, எல்லார்தவமும் கெட்டது! அழாதே மன்னவனே, அனுப்புவா யென்னோடே!

தச:—என் ராமனையா கேட்கிறீர்கள்? குழந்தைராமன் உறங்குவானே பொழுதோடே! பச்சைக்குழந்தை ராமன் பாவி அரக்கர்களோடு போர்புரிவானா! யாகத்தைக் கெடுக்க மேகத்தில் மறைவார்களே, இந்திர ஜாலம்செய்வார், மஹேந்திர ஜாலம் புரிவார், எல்லாம் செய்வார்கள், இளைப்பு சலிப்பில்லாத ராக்ஷதர்கள்! கொடூரப் பாவிகளிடம் குழந்தை ராமன் என் செய்வான்! நான் வருகிறேன், போர்புரிகிறேன்; நாசப்படுத்துகிறேன் மோச அரக்கரை; ஹதப்படுத்துகிறேன் அற்பராக்ஷதரை! இதற்கா ராமன வரவேண்டும்!

சாவேரி-ரூபகம்.

பல்லவி.

ராமனை இதற்கு க்ஷேமமாய்வரவேண்டும்
நானேவருகிறேன் துயரத்தைத்தாண்டும் (ரா)

அனுபல்லவி.

பூமியை யாள்கின்ற புரவலன் நானுகப்
புண்ணியம் இருந்தும் கண்ணியம் இலேயோ (ரா)

சரணம்.

சூரிய வம்சத்திற் சூரனாய்ப் பிறந்தும்
அதைர்ய மென்பதை அடியோடேமறந்தும்
சந்திரனேக்கண்டு கூம்புந்தாமரைபோலே
இரவினேக்கண்டு உறங்குவோனை மென்மேலே
வேண்டுமென்று கேட்பதுவோ மிகவிந்தை
விளேக்குது எனக்குமே மிகமிகச்சிந்தை (ரா)

விஸ்:— (அதிகோபங்கொண்டு எழுந்திருந்து) மதிமயக்கங்கொண்ட மன்னவனே, அறிவென்பதே யில்லாத அரசனே! நான் இன்னனென்பதையுங் கவனியாது, நான் இதற்காகக்கேட்கிறேனென்பதையும் அறியாது, ராமபிரானின் ரமணீயத்தையும் நோக்காது, அன்னவன் தன் வன்மையையும் உணர்கிலாது, குழந்தை யென்கிருய், உறங்குவானே யென்கிருய், அப்படி யென்கிருய், இப்படி யென்கிருய், ஐயோவென்கிருய், ஹா ஹா வென்கிருய்! நானென்ருல் நடுங்குமே த்ரிலோகமும்! நானே பயந்து அவனே வரவேண்டு மென்னும்போது, அளவிட முடியுமா அப்பன் பெருமையை! வைரமுடிதரித்த உனக்கென்னடா தெரியும், ராமன் பெருமை, ஜடைமுடி தரித்த எனக்கல்லவா தெரியும்? நாட்டிலிருந்து நகரம் புரக்கும் உனக்கென்னடா தெரியும், ராகவன் பெருமை, காட்டிலிருந்து கடுந்தவம் புரியும் எனக்கல்லவா தெரியும்?

பீதகவாடை தரித்த உனக்கென்னடா தெரியும், மாதவன் தன்மை, மாவுரிதரித்த எனக்கல்லவா தெரியும்? இகபோகத்தி லிருக்கும் உனக்கென்னடா தெரியும், ஈசன் மஹிமை, பரலோகவிச்சையால் மிக யோகஞ்செய்யும் எனக்கல்லவா தெரியும்? பொன்னே பொருளே, மண்ணே மயானமே, பெண்ணே பேயே என்று அற்ப உலகத்தின் சொற்பசுகத்தில் மனதை நிறுத்திய மன்னவன் உனக்கென்னடா தெரியும், ஞான நோக்கத்தில் நாட்டம் வைத்துப் பக்திக்கடலில் தெப்பமிட்டு வைராக்கிய நிலையில் மனதைச்செலுத்திய எனக்கல்லவா தெரியும்? மண்ணோக்கத்தில் கண்ணோக்கம் வைத்த உனக்குத் தெரியாது, விண்ணோக்கத்தில் உண்ணோக்கம் வைத்த எனக்குத் தெரியும்! பஞ்சேந்திரியங்களின் பாவச் செயலிற் படிந்து கிடக்கும் உனக்குத் தெரியாது, பஞ்சாக்கினியின் மத்தியிற் பதிந்து நிற்கும் எனக்குத் தெரியும். உனக்குத் தெரியாது, எனக்குத் தெரியும்!

ராகம்-அடாணா தாளம்-ஆதி.

பல்லவி.

ஏனின்ன மிப்படியோசனை செய்வாய்
என்னென்பேன் உன்றன் மதி.

அநுபல்லவி.

வானவர் போற்றும் வண்மையன் உன்மகன்
வைபவ மறியாது வகை தொகை தெரியாது (ஏனி)

சரணம்.

வலையிலகப்பட்ட பறவை
வானத்திலேறாது அதுபோல்
மலையைப்பிடுங்கும் மாபாவிகள்
கோபம் இவன்மேல் சேராது

இவனிடம் நில்லாது-அது
இறைவனிடம் செல்லாது-அந்த
இயக்கரம்புகள் கொல்லாது இந்த
இளைஞனை அது வெல்லாது (எனி)

(தசரதர் மூர்ச்சையாய் விழுந்து, சைத்யோபசாரத்தால் எழுந்திருக்கிறார்.)

வஸி:—தசரதா, ஒன்றுக்கும் நீ பயப்படவேண்டாம், உன் மகன் ராமனுக்கு உத்தம மங்களம் உண்டாகப்போகின்றது! விஸ்வாமித்ருக்குக் கோபம் வரும்படி செய்யாது, விநயமாய் அனுப்புக திருக்குமாரனை!

(தசரதர் ராமலக்ஷ்மணரை அழைத்து வரும்படி ஏவ அவர்கள் வருதல்.)

ராமன்:— ராகம் மோஹனம்; தாளம்-ஆதி
பல்லவி.

மனமோஹன ஜனரஞ்சித
வெகு சுந்தர மிகுசந்திரா

சரணம்.

தினஸோபித கரதாமரை
மிகநாணிடு வெகு தந்திரா
மனமாறிடு மடமாதர்கள்
குறைகூறிடு குணசுந்தரா (மனமோஹன)

நவபல்லவ சுபமல்லிகை
வெகுதுல்லிய நிஜரூபனே
தவமுற்றவ ரருள்பெற்றவர்
நிதம்போற்றிடு தவராஜனே (மன)

(வந்து அனைவரையும் நமஸ்கரித்தல்)

தசரதர்:—(குழந்தைகளை அழைத்துக்கொண்டு)—குழந்தைகாள், கண்மணிகாள், நீங்களிருவரும், (விஸ்

வாமித்ரரைக்காட்டி) அவர் உங்கள் தாதா; அவருடன் ஊர் காடு முதலியவைகளைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு தீர்த்த யாத்திரை ஸ்தல யாத்திரை செய்து திரும்பி வாருங்கள். உங்களுக்கு வேண்டிய அனைத்தையும் உளக்களிப்போடு அவரே செய்வார். சுகமே போய் சீக்கிரமே வருக.

தச:—(விஸ்வாமித்ரரை நோக்கி) ஸ்வாமி! நான் புத்திர வாத்ஸல்யத்தால் மறுத்துக்கூறியதற்கு மன்னித்தருள வேண்டும். குழந்தைகளை அழைத்துக் கொண்டு குருநாதா போய்வரலாம். (நமஸ்காரஞ் செய்து) நான் அநேக நாளாய் குழந்தையில்லாது அவதிப்பட்டு, பின்னர் பிறந்த குழந்தைகளான தால், அவர்களைக் கொடுப்பதில், கண்ணில்லாத குருடன் கண்ணைப்பெற்றுப் பின்னர் இழந்தது போல் தவிக்க நேர்ந்தது. அவர்களுக்கு இளவரசுப்பட்டம் கட்டவேண்டுமென்றும் ஆரண்யமடைந்து நான் அருந்தவம் புரியவேண்டுமென்றும் யாதியாதோ நினைத்ததால் ஏதேதோ வருந்தினேன். அதனால் தேவரீரிடம் அபசாரமும்பட்டேன்: அடியேனை மன்னித்து ஆட்கொள்ள வேண்டும், குழந்தைகளை அழைத்துக் குளிர்ந்துமே போய் வரவேண்டும்.

(விஸ்வாமித்திரைப் போற்றி வழிவிடல்)

ஐந்தீயின் நடுநின்றே யைம்புலனைச் சுட்டறுத்துச்
செந்தீயி ஞெளிபோலே தவத்தீயை வளர்த்தவனே
மைந்தரிலா தடைந்த குறை மாமுனியே வருத்தியதால்
மைந்தர்தமைப் பிரியவொட்டா மனமதுவே கலக்கியதால்

மாமுனியே கருணைநிறை வாரிதியே மண்ணுலகம் புதிதமைத்த
கோமுனியே குற்றமற்ற நற்றவனே குழந்தைகளைக் கொடுபோவா
[யால்

நீமுனியே லென்றன்னே நின்மலனே பாலிப்பாய் நீண்ட காலம்
காமுனியேயெம்மீது கடைக்கண்ணைத்தாமுனியே கடவுண்முனியே

விஸ்:—சந்தோஷம், தசரதா, உன்தன் புதல்வனால் உலகமே பிழைக்க வேண்டியிருக்கிறது. சந்தோஷம் சந்தோஷம்! அழைத்துப்போய்வருகிறேன் உன் தன் அருந்தவப் புதல்வர்களை!

---

## Act. V. Scene I.

### அங்கம் 5. காட்சி I.

[விஸ்வாமித்திரர்—ராமலக்ஷ்மணரோடு செல்லுதல்]

---

விஸ்:—அப்பா, ராமா, குழந்தாய் லக்ஷ்மணா, நாட்டில் வாசஞ்செய்த நீங்கள் காட்டிற்கு வந்து இப்போது கஷ்டப்படுகிறீர்களே! பசியெடுக்கிறதா, தாகம் வருத்துகிறதா?

ராமன்:—ஆமாம், தாதா.

லக்ஷ்மணன்:—தாகத்தால் தவிக்கிறது.

விஸ்:—பலை அதிபலை எனகிற மந்திரங்களை இதோ உபதேசிக்கிறேன் (உப—ர்). அவற்றை நன்றாய் அப்பியாசஞ் செய்தீர்களானால், பசியும் எடுக்காது, தாகமும் வருத்தாது, களைப்பும் தோன்றாது, இளைப்பும் தெரியாது.

ராம:—நமஸ்காரம் தாதா!

லக்ஷ்:—பேஷ், தாதா!

விஸ்:—எப்படி யிருக்கிறது?

ராம:—பசியென்பதே பறந்துபோயிற்று! தாகம் என்பதே ஓடிப்போயிற்று!

லக்ஷ:—திம்மென்றிருக்கிறது! புலியேப்பம்கூட வருமோ!

விஸ்:—துடுக்கா லக்ஷ்மணா; சும்மா இரு, ஒன்றும்வராது.

ராம:—மஹா மூநே! இந்தக்காடு எவ்வளவு ஸ்ருங்காரமாயிருக்கிறது; எவ்வளவு அலங்காரமா யிருக்கிறது! அலங்காரமா யிருந்தாலும், பயங்கரமாயிருக்கிறது; அழகா யிருந்தாலும் ஆபத்திருக்கிறது!

விஸ்:—ஆபத்திற்கு ஒன்றும் அஞ்சவேண்டாம் நீங்கள்! அஸ்திரவித்தைகளை யெல்லாம் அரை நிமிஷத்தில் சொல்லுகிறேன். பெற்றுக்கொள்ளுங்கள் அஸ்திரங்களை! கற்றுக்கொள்ளுங்கள் வித்தையெலாம்!

ராமலக்ஷ்:—(கற்றுக் கொண்டு) பாக்கியம் பாக்கியம்! இனிமேல் நாங்கள் எதொன்றுக்கும் அஞ்சமாட்டோம்.

விஸ்:—குழந்தைகாள், இந்தக்காடு எவ்வளவு உன்னதமாயிருக்கிறது பாருங்கள், எவ்வளவு பயங்கரமாயிருக்கிறது கவனியுங்கள்! புலியின் கோபக்கூச்சலும், யானையின் ஆர்ப்பாடச்செயலும், நாய் குலைக்கிறதும் நரி ஊளையிடுகிறதும் எவ்வெவ்விதமாய்க் கேட்கின்றன, எவ்வளவுக் கெவ்வளவு பயங்கரமாயிருக்கின்றன! அதிக பயங்கரமா யிருக்கிறதோ!

ராம:—இல்லை இல்லை! வில்வித்தை தாங்கள் உபதேசித்தபிறகு, பயமென்பதே தோன்றவில்லை, கிலியென்பதே கிட்டவில்லை! (லக்ஷ்மணனைநோக்கி) லக்ஷ்மணா; சிறிதுபோது வில்வித்தை பழகலாமா? சிறிது நேரம் வேடிக்கையாய் விளையாடலாமா?

லக்ஷ்:—பலே! அப்படியே அண்ணா!

ராம:— பியாகடை-ஆதி.

பல்லவி.

சிங்காரவேட்டை சிறப்பாய்நா மாடலாம்
அலங்கார லக்ஷ்மணு அவசரமாய் வாடா

அனுபல்லவி.

சிங்கமும் கரடியும் சீறியே ஓடிடும்
செந்நாயும் புலிகளும் ஓநாயும் பன்றியும்
எங்கு பார்த்தாலும் கூச்சல் எல்லாவற்றிற்கும் பாய்ச்சல்
எடுத்தால் நம் வில்லே, எல்லாங்காணுமே ஓய்ச்சல் (சிங்)

சரணம்.

பாதகம் செய்கின்ற பாம்பையும் புலியையும்
பறக்கடித்தாலன்றோ தொலைக்கலாம் கிலியையும்
காதகம் செய்கின்ற கபட நரியையும்
காட்டினெருமையையும் கனத்த அரியையும்
அடித்துக்கொன்றுமே அதிகமாய் வாட்டலாம்
அனைவோர் திகிலையும் அடியோடே ஓட்டலாம் (சிங்)

(ராம லக்ஷமணர்கள் வேட்டையாடி விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்)

விஸ்:—ஹா ஹா! என்ன அழகு, என்ன ஸ்ருங்காரம்! என்ன லாவண்யம் என்ன தேஜோமயம்! ஆகாயத்தில் நாம் காண்பது அழகான ஒரு சந்திரன்! இங்கு நான் காண்பது இரண்டு சந்திரர்கள், இவர்கள் மனமோஹன சுந்தரர்கள்! ஹா! என் கண்கள் என்ன பாக்கியம் செய்தன! அழகென்பதே அழகுபெற்று வந்ததுபோன்று, அற்புதமும் அலங்காரமும் உடைய அருமைக் குழந்தைகள் அரசகுமாரர்கள் மாத்திரமா அவதார புருஷர்களென்றே சொல்ல வேண்டும்! ஆதி சரித்திரத்தை அழகாய்த் தெரியாதவர்கள்கூட அழகான இவர்களைககண்டு, அந்தசந்தம் படைத்த சுந்தர குமா

ர்களைப் பார்த்து, மனமாரக் களிப்படைந்து, நெஞ்சார ஆவல் பூத்து, உடம்பெல்லாம் நெக்கு நெக்குருக, உயிரெல்லாம் மிக்குமிக்குருக, இவர்கள் அவதார புருஷர்களே, புருஷோத்தமனே இன்று பூலோகத்தில் தோன்றினன் திருவுருவோடே என்று கூறுவாராயின், ஞானக்கண்ணால் காலையும் உணரும் யான், என்ன களிப்பை அடைவேன், எவ்வாறு புளகிப்பேன், என்னகுதூகலமடைவேன், என்ன ஆனந்தங்கொள்வேன்! ஹா ஹா! வெள்ளைச்சந்திரன் விண்ணிற்றுலங்கினல், நீலச்சந்திரன் எதிரே விளங்குகின்றனன்! நீலமேனி பொன்னர்மேனி, சுந்தராங்கம் சுயம்பிரகாசம்! நீலமேனியில் கோலத் தாமரைகள் பூத்தனபோல், இரண்டு நயனங்கள் என்ன அழகாயிருக்கின்றன! பவளவாயின் அழகும், பச்சைமேனியின் உச்சித வடிவும், முத்தைப்போன்ற முறுவற்பல்லும், அமுதம் பாய்வது போன்ற அழகிய சொற்களும்—இன்று கண்டேன் ஆனந்தங்கொண்டேன், அல்லலெல்லாம் விண்டேன் இவர்கள் நடை என்ன அழகு! இவர்கள் ஒயில் என்ன உல்லாஸம் விளைக்கிறது!

ஸ்ரீராகம்-ரூபகம்

பல்லவி.

குலுக்கிக் குலுக்கிப் போகும் ஸொகுஸைக்
கூறஎன்னுல் தரமாமோ (குலுக்)

சரணம்.

ஜிலுக்கு ஜிலுக்கு என்ற மேனி
தளுக்கு தளுக்கு என்று மின்னப்
பளிச்சு பளிச்சு என்று காந்தி
பாரிலெங்கும் வீசும் பண்பு
பகரப்போமோ என்னலே (குலுக்)

ஜோதி ஜோதியான கண்கள்
நீதி நீதியான எண்கள்
ஆதி ஆதியான ஜோதி
அழகைக்கூற யாவர்தரம்
அறையப்போமோ என்றாலே (குலுக்)

ராம:—குரு மஹாராஜ், சற்றுநேரம் வேட்டையாடி சிறிதுநேரம் விளையாடி, வந்து சேர்ந்தோம். புறப் பட்டுச் செல்லலாமா?

விஸ்:—அப்பா ராமா, அப்பா லக்ஷ்மணா, வாருங்கள் புறப்பட்டுச் செல்வோம்.

ராம:—(சற்று கிதானித்து) குரு மஹாப்ரபோ, அஃ தென்ன சத்தம்? ஆயிரம் யானை ஒன்று சேர்ந்து அதிக கூச்சலிடுவதுபோல் கேட்கிறதே! அஃ தென்ன என மதிமயக்கத்தால் அப்படித்தோன்று கிறதா, அல்லது, உண்மையில் ஏதேனும் ஊறு நேர்ந்திருக்கிறதா? ஒன்றுந் தெரியவில்லை, எதுப விளங்கவில்லையே!

விஸ்:—உண்மைதான், குழந்தாய்! ஆயிரம்யானைகள் ஒன்று சேர்ந்து சிங்கம் ஒன்றன்கையி லகப்பட்டுச் சிரமமடையும்வேளை வந்துவிட்டது, காலம்நெருங்கி விட்டது!

ராம:—என்ன மஹாராஜ், ஒன்றும் விளங்கவில்லையே! சந்தடியும் நெருங்கிவிட்டது, மண்மாரியும் தலைப் பட்டதே!

விஸ்:—மாயச்சண்டையில் மண்மாரி இயற்கைதானே! ஆயிரம் யானையின் பலம்கொண்ட அரக்கிதாடகை என்பவளுடைய வனம் இது! முனிவரைக்கொன்று, நல்லவரைவதைத்து, யாகத்தைக் கலைத்து, யோ கத்தைக் கெடுத்துத் தீமையேசெய்யும் தீய அரக்கி யாகிய தாடகை நம்மை வதைக்க நாடிவிட்டாள்

இப்போது! அதோபார் தோன்றிவிட்டாள், எதிரே வந்துவிட்டாள்!

(தாடகை வருகிறாள்.)

தாட:—ஹா ஹா ஹா! நரவாசனை யடிக்கிறது, மனித வாசனை வீசுகிறது! ஹா, கண்டுபிடிக்கிறேன்! இதோவருகிறேன் ஹா ஹா ஹா!

ராம:— ஹா ஹா! கோரப்பல்லும், குறுகிய நெற்றியும், மலைபோன்ற உருவமும், அலைபோன்ற கொந்தளிப்பு முடையவளாய் வந்துவிட்டாளே எதிரே, வாய்ந்துவிட்டாளே பாவி!

விஸ்:—வில்லையெடுத்து விடுவாய்கணையை! போர் புரிந்து போக்குவாய் உயிரை!

ராம:—தபோநிதே! என்னையினும் பெண்ணாயிற்றே! எண்ணறக் கற்று எழுத்தறப் படிக்கினும் பெண்புத்தி யென்பது பெரும் பேதைமைத்தே என்கிறபடி, குற்றஞ்செய்தாலும் பெண்ணென்று குறை கூறுரேயாரும்! நம்மைத் தூற்றுவாரே நல்லோரும் பொல்லோரும்! பெண்ணைக் கொன்றான் பெரும்பாவி, தையலை வதைத்தான் தருமமில்லாதவன் என்று நால்வர் வைவாரே! பெண்ணென்றால் பேயு மிரங்குவதாயிருக்க, மாதொருத்தியைக் கொன்ற மாபாவி இவனென்று மாநில முள்ளவரைக்கும், சூரிய சந்திராதிகள் ஆகாயத்தில் தோன்றி அழகாய் வலம்வரும் காலமுழுமையும், ஊழி முடிவில் ஆழிபெயருங் காறும் வைவாரே நம்மை, தூற்றுவாரே எம்மை! என்செய்வது!

விஸ்:—தாசரதே! ஹே! ராமா, ஒன்றுக்கும் நீ அஞ்சாதே, யாதொன்றுக்கும் நீ பயப்படாதே! பெண்ணானாலுமென்ன ஆணானாலுமென்ன? யாவரொரு

சென்னை-60

வர் நீதியின் வரம்பைக்கடந்து, தர்மத்தின் லையைத்தாண்டி, மனச்சாட்சிக்கு விரோத மகிதலத்தில் நடக்கிறார்களோ, அவர்கள் கொ யோர், அவர்கள்சண்டாளர், அவர்கள் துன் மார்க்கர், அவர்கள் அயோக்கியர்—அவர்களை அதஞ்செய்வதே அரசரின நெறியாகிறது, ராஜாக்களின் கடமையாகிறது. இதைவிட்டு வன்மைக்கு ஒரு நியாயம், எளிமைக்கு ஒரு நியாயம், ஆண்களுக்கு ஒரு நியாயம், பெண்களுக்கு ஒரு நியாயம், ஒரு குலத்துக்கொரு நீதி என்னும் கொள்கை எனக்குச் சரியெனத் தோன்றவில்லை. இவள்பெண் என்றாலும் பேயையும் விழுங்கும் பெரும்பேய் என்று நினைத்துக்கொள், இவள் உருவம் பெண்ணுருவாயினும், எல்லாவற்றையும் ஹதஞ்செய்யும் எறுமாறான ராக்ஷஸியென்று தெரிந்துகொள்! கோடி கோடியான குருவர்யர்களை ஆடி ஆடியென்று ஓடி ஓடி பலிகொள்ளும் மாரியாத்தாளைப் போன்ற மஹாபயங்கர ஸ்வரூபி என்று அறிந்து கொள்! இவள்பெண் அல்லள், இவள் பெரும்பேய்! இவள் பெண் அல்லள, இவள் பெரும்பூதம்!

கல்யாணி-ரூபகம்.

பல்லவி.

பெண்ணணிவளா இவள் ராமா— தாடகைப்
பேயிவள் பொல்லா நாயிவள் ராமா (பெண்)

சரணம்.

விண்ணிலிருந்தமேகம் மண்ணில்வந்தேயிடித்து
கண்ணைக்கலக்குமாபோல் சிங்கநாதம்பிடித்து
தடதடவெனக்குதித்துப்
படபடவெனமிதித்துச்
சிடுசிடுவெனச் சினந்து
கடுகடுவெனக் கடிந்து

வந்தவளிவளாகும் வல்லாளகண்டி
வந்தாளே விழுங்க நம்மைத்தானண்டி (பெண்)

ஒருகுதிகுதித்தாலே ஒன்பதாயிரம் யானை
ஒருமிக்கமாளுமே பெரும் பெரும் சேனை
ஒருகூச்சலாலே உலகெங்கும் சாகுமே
ஒருபார்வைபார்த்தாலே உற்பாத மாகுமே
தப்பிலி இவள்பொல்லா தகல்பாஜி யிவளாகும்
ராக்ஷதப்பேயிவள் ராஸ்கலாம் நாயாகும்
Rascal
ஒப்பிலா ஸ்கௌண்டரல் வெகுக்ரூயல் பெரும்பாவி
Scoundrel cruel
ஊறுசெய்யும் ரெட்சிவள்
wretch
பாழ்செயும் பிட்சிவள். (பெண்)
bitch

ராம:—ஆயின், யதிராஜா, இவளைக்கொல்லச் சொல்லுகிறீர்களோ?

விஸ்:—ஆம்! ஆலோசனையேன், ஆக்ஷேபனையேன்! வில்லையெடு, அம்பைத்தொடு!

தாடகை வந்துவிடுகிறாள்.

தாட:—ஹா ஹா நாசப்படுத்துகிறேன்! இங்கே ஏதோ நரவாசனை வீசுகிறது! எனக்கு மாட்டுவாசனை நாலுகாதம் தெரியும், மனிதவாசனை ஆயிரம் காதம் தெரியும், ஹா ஹா...... அதப்படுத்துகிறேன வதைப் படுத்துகிறேன்! ஹா ஹா........கறகற வென்று காராபூந்தியைப்போல் மொற மொற வென்று முறுக்கு மசால்வடையைப்போல் ஹா ஹா......கற கறவென்று எலும்பை மென்று நச நசவென்று சதையைத்தின்று கொன்று மென்று தின்று ஹா ஹா......பிடித்து அடித்துக் கடித்து ரத்தங்குடித்து ஆதாள பாதாள வேதாளங்களை

யும் அடித்து, ஆளி காளி கூளியையும் நசுக்கி, ஹ
ஹா......பயன்களா விழுங்குகிறேன் சொத்
பயன்களா விழுங்குகிறேன், சுண்டக்காய் பய
ளா கொத்தவரைக்காய் முனிகளா, மண
களிக்காய் மனுஷரா! ஹாஹா......ஆடடா நீ

சம்பாஷணை,

தாட:— இங்குவந்தாய் நீ யாரடா
எனக்குத் தெரியக்கூறடா

ராம:— உன்னைக் கொல்ல வந்தேன்யான்
உனக்குக் கர்வ மேனோதான்

தாட:— அச்சல் மனிதன் கூப்பிட்டானோ
துச்சமவனைச் சாப்பிடேனோ

ராம:— வாயைமூடு பேயே சும்மா
ஆவிபோகும் நாயே திம்மா

தாட:— நசுக்கிப் பொசுக்கித் தின்னேனோ நான்
கசக்கிப் பிழிந்து தள்ளேனோ நான்

ராம:— பாணமொன்றில் கொல்லேனோ நான்
பாவம் பழியைத்தள்ளேனோ நான்

தாட:— குட்டிமனிதா எட்ட ஓடு
மட்டிப்பயலே மறைவா யோடு

ராம:— போட்டேன் பாண மோடிப் போடீ
போட்டே னம்பைச் செத்துப் போடீ

(தாடகை விழுந்து இறந்துபோதல்)

விஸ்:— ஆனந்தராமா! அற்புதராமா! சபாஷ் சட
அம்புவிடும் திறமை இன்றல்லவோ கண்
மனமகிழ் கொண்டேன! கற்றுக்கொடுத்த
குச் சற்றேனும் வாவில்லை இத்தகைய ச
இவ்விதலாகவம்!

—குருமூர்த்தே! எல்லாம் தேவருடைய ஆசீர்வாதம், எல்லாம் தமது தவத்தினுடைய வன்மை! இப்பொழுது எப்படிப் போகலாம்?

—சித்தாஸ்ரமம் சென்று யாகமபுரியவேண்டும், அரக்கர் வரவொட்டாது நீங்கள் தடுக்கவேண்டும். வாருங்கள் போகலாம்.

(அனைவரும் போகிறார்கள்.)

---

## Act 5. Scene 2.

அங்கம் 5. காட்சி 2.

சித்தாஸ்ரமம்—யாகசாலை

ரிஷிகள்—விஸ்வாமித்ரர்

ராம லக்ஷ்மணர் காவல்.

---

தபோஸ்ரேஷ்டர்களே! ஆத்மார்த்த மறிந்த ...ன்பர்காள்! இன்று யாகம், நல்லயோகம்! ஈசன் ...ந்தான நேசங்கொண்டு, இறைவனை வந்தான் ...ன்பு பூண்டு! அரக்கர்கள் வந்தால், ஹதப்படுத்து ...ன் ரகுராமன்! அம்பொன்றினால் அடித்து விட் ...ன் தாடகையை! பாணமொன்றால் பறக்கடிப் ...ன பகைவரையெலாம்!

—எமது பாக்கியமே பாக்கியம்! எமது ஸ்லாக்கி ...மே ஸ்லாக்கியம்! எத்தனை வருடமாய்த் தவஞ் ...ய்தும், பஞ்சாக்னி மத்தியில் பாரதவமியற்றியும் ...ணலாகாத கருணைக் களஞ்சியத்தை, எட்ட ...ட எட்டியும் மனத்தால் எட்டலாகாத எந்தை ...ர்னை, இந்த சுந்தரவடிவில் இன்று காணக்

கொடுத்துவைத்த எமது கண்களே கண்கள்! யாகந் தொடங்குவோமா?

விஸ்:—தொடங்கலாம்—அப்பா ராமா, குழந்தாய் லக்ஷ்மணா, ராக்ஷதர்கள் வராதபடி ராப்பகலாய்க் காவலிடவேண்டும். எமாந்த சமயம்பார்த்து எதிர்த்து வருவார்கள் ராக்ஷதப் பயல்கள்! யாகம் ஆரம்பிப்போம்.

(ரிஷிகளனைவோரும்)

| | |
|---|---|
| சூர்ய க்ரஹாயநம: | ஓம் |
| சூர்யக்ரஹ அதிதேவதாயநம: | ஓம் |
| சூர்யக்ரஹ ப்ரதிதேவதாயநம: | ஓம்! |
| சந்த்ரக்ரஹாயநம: | ,, |
| சந்த்ரக்ரஹ அதிதேவதாயநம: | ,, |
| சந்த்ரக்ரஹ ப்ரதிதேவதாயநம: | ,, |
| அங்காரஹக்ரஹாயநம: | ,, |
| அங்காரஹக்ரஹ அதிதேவதாயநம: | ,, |
| அங்காரஹக்ரஹ ப்ரதிதேவதாயநம: | ,, |
| புதக்ரஹாயநம: | ,, |
| புதக்ரஹ அதிதேவதாயநம: | ,, |
| புதக்ரஹ ப்ரதிதேவதாயநம: | ,, |
| ப்ரஹஸ்பதிக்ரஹாயநம: | ,, |
| ப்ரஹஸ்பதிக்ரஹ அதிதேவதாயநம: | ,, |
| ப்ரஹஸ்பதிக்ரஹ ப்ரதிதேவதாயநம: | ,, |
| சுக்ரக்ரஹாயநம: | ,, |
| சுக்ரக்ரஹ அதிதேவதாயநம: | ,, |
| சுக்ரக்ரஹ ப்ரதிதேவதாயநம: | ,, |
| சனிக்ரஹாயநம: | ,, |
| சனிக்ரஹ அதிதேவதாயநம: | ,, |
| சனிக்ரஹ ப்ரதிதேவதாயநம: | ,, |

ராகுக்ரஹாயநம : ஓம்
ராகுக்ரஹ அதிதேவதாயநம : ,,
ராகுக்ரஹ ப்ரதிதேவதாயநம : ,,

கேதுக்ரஹாயநம : ,,
கேதுக்ரஹ அதிதேவதாயநம : ,,
கேதுக்ரஹ ப்ரதிதேவதாயநம : ,,

மாரீ:—இது நல்ல சமயம், இந்தப் பயல்களை இரண்டு நிமிஷத்தில் ஹதஞ்செய்ய வேண்டும் !

சுபா:—ஆம் ஆம் ! எடுத்து விழுங்கவேண்டும் !

மாரீ:—எப்பமிட வேண்டும்!

சுபா:—ஆமாம் இதோ இதோ!

(மாரீசன் சுபாகு கூச்சலிட்டுக்கொண்டு உதிரமாரியை உக்கிரமாய்ப்பொழிய ஆரம்பிக்கிறார்கள்.)

ராக்ஷ:— இங்குவந்தாய் நீ யாரடா
எனக்குத் தெரியக் கூறடா

ராம:— உம்மைக் கொல்லவந்தேன் நான்
உமக்கிக் கர்வ மேனோதான்

ராக்ஷ:— கச்சல் மனிதன் கூப்பிட்டானே
துச்சமவனைச் சாப்பிடோமோ

ராம:— பாணமொன்றில் கொல்வேனோநான்
பாவம்பழியைத் தள்ளேனோநான்

ராக்ஷ:— குட்டிநாய்கள் நீங்கள் யாவர் ?
மட்டிப்பயல்கள் நீங்கள் யாவர் ?

ராம:— மோசப்பயல்கள் ஓடிப்போங்கள்
நாசகாலர் விலகி நீங்கள்

ராக்ஷ:— சொத்தைமனிதர் கற்ற வித்தை
முற்றுமொழியும் மூடவித்தை

ராம:— கொல்வோ மும்மைத் துள்ளாதீர்கள்
வதைப்போ மும்மைக் குதிக்காதீர்கள்.

(சுபாகு இறந்து விழுகிறான்—மாரீசன் ஓடிப்போகிறான்.)

விஸ்:—என் புண்யமே புண்யம்! என் தவபலமே பலம்! தபோபலம்வந்து தயைசெய்தது தாமே தானுருவாக! நான்செய்த யோகத்தால், நாதன் வந்தான் என்னோடே, யாகம்நடந்தது மகிழ்வோடே! ரிஷிஸ்ரேஷ்டர்களே, நாங்கள் போய்வருகிறோம் மிதிலைக்கு. ஜனகன் புத்ரி ஜானகிக்குக் கல்யாணமென்று கடிதம்வந்தது. கமலக் கண்ணன் காதற்கண்ணுளைக் கடிமணம்புரியும் காலம்வந்துவிட்டது! நாங்கள் போய்வருகிறோம்.

(ரிஷிகளிடம் விடை பெற்றுக்கொண்டு)

விஸ்:—அரச குமாரரே வாருங்கள் செல்லலாம். மிதிலைப் பட்டணத்திற்குப் போவோம் வாருங்கள்.

(மூவரும் செல்கிறார்கள்.)

---

## Act 5. Scene 3.

அங்கம் 5 காட்சி 3.

அஹல்யோத்தாரணம்.

விஸ்வாமித்ரர்—ராமலக்ஷ்மணர்.

---

ராம:—அஞ்ஞானத்தை யொழித்து விஞ்ஞானம் புகட்டிய மெய்ஞ்ஞான குருவே, நமஸ்காரம்! இவ்விடம் என்ன அழகாயிருக்கிறது, எவ்வளவு ரமணீயமாயிருக்கிறது! இப்பொழுது நாம் பார்த்துவந்த இடங்களிலெல்லாம் இதுதான் மிக மேன்மை வாய்ந்ததென்று எனக்குத் தோன்றுகிறது.

ஸ்:—ஹே ராமசந்த்ரா, நீ சொல்வது உண்மைதான். பொல்லா அரக்கர்கள் போயொழிந்ததோடு, உல்லாஸமான இந்த உத்யானவனத்தி னழகுசேரவும்,

ஸல்லாபம்விளைத்து சந்தோஷத்தைத்தருகின்றது. பாவிகள் போனதே பதின்மடங்கு சந்தோஷத்தைத்தருகின்றது! கண்ணுக்கெட்டாத கன உயரமுள்ள மலையின் உச்சியோரத்தில் ஒட்டிக்கொண்டிருக்கும் பாறைபோல், பாவிகளியற்றும் பாவத்தொழில்கள் கூட்டமாய்ச்சேர்ந்து காத்துக்கொண்டிருக்கும், தட்டினமாத்திரத்தில் தலையில் விழுவதற்கு! அவர்கள் வாழ்வு நெருப்பாற்றில் மயிர்ப்பாலம்போலவும், ஒற்றைமயிரில் கட்டிவைத்த கத்தியைப்போலவும் இருக்கிறது. வேளைவந்தது; போயொழிந்தார்கள்!

ராம:—ஸ்வாமி, அவர்களொழிந்தது அடியோம்செய்த தவப்பயனாலும், தாங்களளித்த ஆசீர்வாதபலனாலுமேதானாகும். அஃது ஒருபுறமிருக்க, இந்த வனத்தின் சுந்தரமே எங்கள் மனதை இழுத்துச் செல்கின்றது! நவ நவமான பூக்களும், விதவிதமான மரங்களும், தினுசு தினுசான பக்ஷி ஜாதிகளும், அழகழகான அவைகளின் கீதங்களும் கண்ணிற்கும் காதிற்கும் ஆனந்தத்தைத் தருகின்றன, அதியத்புதமாய் விளங்குகின்றன! வானம்பாடிகள் கீதம்பாடுவதில், அழகாயுள்ளனவற்றைப் பற்றிக் கிளிகள் ஆச்சர்யப்பட்டுப் பேசிக்கொள்வதும், போட்டி போட்டுக் குயில்கள் நீட்டி நீட்டிப் பாடுவதும், சிறகைவிரித்து மயில்கள் சிங்காரமாயாடுவதும், என்ன அழகு, என்ன விநோதம்! திவ்யமான திருக்குளங்களில், தாமரையெழுந்து தலையை நீட்டுவதும், குறுகியிருந்தும் மல்லிகை பெருகிய மணத்தைப் போரவலோடு தருவதும், காதுக்கு நவரோஸ்போல கண்ணுக்கு விட்டோஸ் இனிமைதந்து இன்பம் பயப்பதும் எ... மனதைக் கவர்ந்து என்னைக் களிப்பிக்கின்றன...

### ஆனந்த பைரவி-ரூபகம்.

பல்லவி.

ஆனந்த சோபித அலங்காரத் தோற்றம்
அகத்தை யுருக்கி மனத்தைக் கரைக்குதே

அநுபல்லவி.

தேனந்து சோலைத் திருக்குளப் படிகளும்
வானந்து மரங்களின் வானரக்குடிகளும்
ஜாதி மல்லிகைப்பூவின் சிங்கார வாசமும்
ஜடைகட்டும் ரிஷிகளின் ஜபதபநேசமும் (ஆனந்த)

சரணம்.

கிழக்கினில் சூரியன் கிண்ணம்போல் வருவதும்
மேற்கினில் சந்திரன் குளிர்ச்சியைத் தருவதும்
வழக்கிலாத் தென்னைகள் சாமரை வீசவும்
வானம்பாடிகள் கீதம் வண்மையாய்ப் பேசவும் (ஆனந்த)

விஸ்:—குழந்தாய் ராமா, நீ சொல்வது உண்மைதான். இது வெகு ரமணீயமான இடமென்பதற்குத் தடையொன்றுமில்லை. முன் இது கௌதமர் தம் பத்தினியாகிய அகலிகையோடு வாசஞ்செய்து கொண்டிருந்தவிடம். அவளுடைய தகாநடத்தையால் கல்லாய்ச் சமைந்திருக்கிறாள்!

(காலடிபட்டு அகலிகை திடீரென்று எழுந்தனள்)

(ராமர் சடக்கென்று திபரமையோடு நிற்க)

அகலிகை:— ராகம்-மோஹனம்; தாளம்-ஆதி

பல்லவி.

ரகுகுலதிலகா ஹா ராமா என்னை
ரக்ஷிப்பதுன்கடன் ராஜீவ நயனனே (ரகு)

சரணம்.

வெகு க்ருபை செய்திடும் வீராதிவீரனே
உன்பதம் வந்தனம் தந்தனம் (ரகு)

ஏழையைக் காத்திடும் மோஹன ராமனே
ஸ்ரீராமா ஜயராமா ரகுராமா (ரகு)

சேவ் மீ ஐ ப்ரே—சேவ் மீ ஐ ப்ரே
Save me I pray—Save me I pray!
ஓ லார்ட்—மை காட்—மை லார்ட் (ரகு)
Oh Lord! My God! My Lord!

ஹே! பரந்தாமா! ஹே பக்தவத்ஸலா! ஏழைகள் துயருக்கிரங்கி, அவர்கள் கஷ்டத்தைப்போக்கி அதிர்ஷ்டத்தை விளைக்கும் அற்புதத்தேவே! உன் அருளை என்னென்று கூறுவேன், உன் புகழை என்னென்று வருணிப்பேன்! அறியாது தவறிய என்னை அல்லலினின்றும் நீக்கித் தொல்லையினின்றும் காத்துத் துணை புரிந்த தூயவனே, மாயவனே, சுந்தரனே, ராமசந்திரனே! பக்திக்கிரங்குவோனும் நீயே, ஞானத்திற்கு வயமாவோனும நீயே, எல்லாப்பாவங்களும் எல்லாக்கொடுமைகளும் உன் சக்கரப் பொறியின் தீயினாலே தூசாகி இருந்ததிசை தெரியாது மழுங்கிவிடுமென்பதில் யாது தடை? நானே உன் திருவருட்டிறனுக்குச் சாக்ஷியாவேன், நானே உன் பெருமிதக் குணத்திற்குச் சாக்ஷியாவேன், நானே உன் திருவடிப்புகழுக்குச் சாக்ஷியாவேன், நானே உன் கருணைவெள்ளத்திற் கிலக்கானேன். உன் பொன்னடி போற்றி, உன் புகழ்த்திறம் போற்றி, உன் நன்னயம் போற்றி, நளினம் போற்றி, திருவடித் துணைகள் போற்றி, திருவருட் பெருமை போற்றி.

ஆனந்த மாமணியே அன்புநிறை தூமணியே
அருணிறைந்த பூமணியே அடியார் நெஞ்சில்
தானந்த மொருமணியே தங்கவண்ணப் பெருமணியே
தத்துவஞ்சொல் குருமணியே தவித்தே னைப்பார்த்
தேனென்றே யருள்புரியு மொளிமணியே இளைத்தபயிர்
மேனமழைநீர்த் துளிமணியே என்னைக் காப்பாய்

கோனென்றே மின்மணியே பொன்மணியே நன்மணியே
கண்மணியே விண்மணியே கொற்ற மணியே.

விஸ்:—ராமசந்திரா, நான் முன் சொன்ன கௌதமர், மனைவி இவள்தான் இந்திரனிடத்தில் தவறிவிட்டாளென்று கல்லாகச் சபித்தார் கௌதம முனிவர். அஃதே இவள் வரலாறு. உன் திருவடித் திறனல் உருவுடனெழுந்தனள்.

(கௌதமர் வருகிறார்.)

ஹோ—கௌதமரும் வந்துவிட்டார்

(கௌதமர் வந்தனஞ் செய்தல்.)

ராம:—கௌதமரே, உமது மனைவியைச் சுகமே யழைத்துக்கொண்டு போய்வாரும். 'சிறியார்செய்த சிறு பிழையெல்லாம் பெரியோராயிற் பொறுப்பது கடனே' என்கிறபடி உமது மனைவியை மன்னித்து ஊருக்கழைத்துச் செல்லும். நமஸ்காரம் நமஸ்காரம்!

(அனைவரும் போகிறார்கள்.)

---

## Act. VI. Scene I.

### அங்கம் 6. காட்சி 1.

(மிதிலைநகரம்: விஸ்வாமித்திரர், ராமலக்ஷ்மணர் வீதியே போகுதல்)

---

(மாடிமீது சீதையும் தோழியும் நிற்கிறார்கள்)

விஸ்:—அருமந்தக் குழந்தாய், அப்பா ராமா, இது தான மிதிலை நகரம், இதுதான் ஜனகமகாராஜா அரசாட்சி செலுத்தும் அற்புத நகரம்.

ராம:—தபோசிதே! என்ன அலங்காரமாயிருக்கிறது இந்தப்பட்டணம்! அயோத்தியைவிட்டு வந்தபிறகு அழகிய நகரம் இதைத்தான் நான் பார்த்தது. காட்டில் வாசஞ்செய்த எனக்குக் காட்டில் வந்தது ஒருவாறாக இருந்தது!

விஸ்:—ஏன் கடினமாயிருந்ததா?

ராம:—இல்லே, இல்லே!

லக்ஷ்மண:—என்ன தாதா என்னவோ கேட்கிறீர்களே! காட்டில் வந்தால் காபி போகிறதே! கஷ்டம் கஷ்டம்தான்! அண்ணு விழுங்குகிறார்கள், அடியேன் சொல்கிறேன் உண்மையை!

விஸ்:—தம்பி லக்ஷ்மணன், துடுக்கன் லக்ஷமணனுயிற்றே நீ! அதிருக்கட்டும். நீவா லக்ஷமணு, நாம போய் நல்ல விடுதியாய்ப் பார்த்து வருவோம்.

லக்ஷ:—அப்படியே குருமகாராஜ்.

[விஸ்வாமித்திரரும் லக்ஷமணரும் போதல்.]

(ராமர் தனியாக உலாவிக்கொண்டிருக்கும்போது, மாடிமேல் சீதையைப்பார்த்து மனங் கலங்குகிறார்.)

நவரசக்கன்னடா-ரூபகம்.

பல்லவி.

என்னவென்பேன் மின்னலோதான்
எதிரில் நிற்கும் மாதரசி (என்)

அனுபல்லவி.

கன்னல்மொழியோ பாகோ தேனே
கண்டின் ரசமோ கனகமயமோ (என்)

சரணம்.

நீலம்பூத்த நெடியகண்ணே
முத்துப்பல்லோ முறுவற் பூவோ
ஒன்றுந்தெரியேன் என்னசெய்வேன் (என்)

கொவ்வை யிதழோ குளிர்ந்த நிலவோ
பவளக்கொடியோ பதுமவடிவோ
எதுந்தெரியேன் யாதுசெய்வேன் (

லோட்டஸ் f எ ஸ லில்லி ஐஸ
Lotus face Lily eyes
ரோஸி சீக்ஸ் அண் ரூபி லிப்ஸ் ஹோ
Rocy Cheeks and Ruby lips Oh!
பெர்லி டீத்தும் கர்லி ஹெயரும் (என்)
Pearly teeth Curly hair

ராம:—ஹா ஹா! என்ன அற்புதம்! மாடிமேல் இருவர் மயில்களைப்போல் நிற்கிறார்களே! ஒருவர் அரசிளங்குமரியென்றும் மற்றொருத்தி மனதிற்கிசைந்த தோழியென்றும் தோன்றுகிறது! எங்குமில்லாத பரவசம் எப்படியோ எனக்குண்டாகிவிட்டதே! ஆட்ட பாட்டத்திலும் வேட்டையோட்டத்திலும் ராக்ஷதப்போரிலும், ரிஷிகள் சகவாஸத்திலும், காலங்கழித்த எனக்குக் காதலென்பது ஓதாமலே வந்துவிட்டதே! ஆசையென்பது பொங்கி ஆனந்தமென்பது மேலிட்டதே. ஹாஹா! காதல்வன்மையைக் கணக்கிட்டுச் சொல்லலாகாது! சொல்லாமலே வந்து கொல்லாமலே வருத்துவது காதல்! காதல் வன்மையால் கண்மூடித்தனமாகிறவர்கள் எத்தனைபேர், காதல் வன்மையால் காசினியை மறந்தவர்கள் எத்தனைபேர்! பிரமன் முதல் பிபீலிகை வரைக்கும் பெண்ணென்றால் வாய்திறக்கிறது; பேசுவதில் பிழையிருந்தாலும், படிப்பில் குறை இருந்தாலும் பெருமையாய்ப் புகழ்கிறது, பேரானந்தமாய்ப் பொய்சொல்கிறது! ஹா! இது உலக இயற்கை! பிரமன் முதல் பிபீலிகை மாத்திரம் என்ன, பெரிய பெருமாளுமன்றோ, பெரிய பிராட்டியை மார்பிலும் சிறிய பிராட்டியரைப்பக்கத்திலும் வைத்திருக்கின்றார்! பிரமன் தூக்கி நாவில்வைத்

துக்கொண்டார், சிவன் தூக்கித் தலையில்வைத்துக்கொண்டார், தலையிலும் வைத்துக்கொண்டார், பாதியுமாய்விட்டார்!—(சற்று நிதானித்து) என்னதான் நிதானித்தும் என் மனம் அங்கேயே இழுக்கின்றது! தத்துவ ஆராய்ச்சியில் சற்றேனும் மனம் நிற்கவில்லை! தத்துவம் என்பது யாது? தத்துவம் என்பதுதான் இதுவும்! தங்கப்ரகாச தாவள்யரூபமாய் என் கண்ணுக்கெதிரே இணையிலாதிருப்பவர் கண்ணிலே மயங்கிவிடுமே கணக்கில்லாத தத்துவங்கள்! அழகென்பதே அவதாரஞ்செய்து விட்டதோ, ஆனந்தமென்பதே யுருவாய்த்திரண்டதோ! அழகுக்கு அழகு செய்யும் அந்தசந்தம் மிகுந்த சுந்தர மயில், மையல் விளைத்து மனதைக்கரைக்கும் மனோரஞ்சித உருவம்! ஹா! யாரோ, என்னபேரோ, ஒன்றுந்தெரியவில்லை, உளத்தைமாத்திரம் கலக்குகிறது

எதுகுலகாம்போதி-ரூபகம்

பல்லவி.

அழகினில் மிகுந்த பவழ இதழெந்தன்
அகத்தை வருத்தி மனத்தைக் கரைக்குதே (அழ)

அனுபல்லவி.

பழகிய முத்தாகும் பற்களின் உன்னதம்
பார்க்கப் பார்க்க என்மனம் பரவசமாகுதே (அழ)

சரணம்.

பங்கஜமுகமும் இங்கித வொளியும்
சிங்காரத் தோற்றமும் சித்திர விழியும்
அலங்காரவில்போன்ற அற்புதப் புருவமும்
அஷ்டமி நிலாப்போன்ற அழகிய நெற்றியும்
எங்கும் நான் கண்டிலேன் என்னை மணப்பாரோ
ஏழை நானென்று ஏற்காது தணப்பாரோ (அழ)

(ராமர் உலாவிக் கொண்டிருக்கிறார்)
(சீதையும் தோழியும் ராமனை முன்நோக்குகிறார்கள்

தோழி:—ஜானகி, என்ன பார்க்கிறாய் உன்னிப்பாய் ?
சீதை:—அடிபோடி அதிகப்ரஸங்கி! நானொன்றும் பார்க்கவில்லையே! வீதியைத்தான் நோக்கினேன்!

தோழி:—எனக்குத் தெரியும், என்னிடம் மறைக்காதே!
சீதை:—அதோ போகும் அழகிய பிள்ளையைப் பார்! அரச குமாரன்போலும் மன்மதவடிவன் போலும் தோன்றவில்லையா ?

தோழி:—பார்த்தையா பார்த்தையா! எனக்குத் தெரியாதா உனக்குத் தோன்றியது? என்னிடம் மறைக்கலாமா ? ஏதொன்றையும் ஒளிக்கலாமா ?

சீதை:—அற்புத சகி, அந்தரங்கமாதே! உன்னிடம் மறைப்பேனா உள்ளதைக்கூறு து! என் மனதைக் கரைத்து என் ஆவியைக் கொள்ளைகொண்ட அந்த சுந்தரபுருஷன், அற்புதவடிவன், நீலமேனியன், கோல உருவினன், தாமரைக்கண்ணினன் தமனிய ஒளியன், நாவில் நக்ஷத்திரமும் பல்லில் பரஸவீணையும் முகத்தில் ப்ரகாசமும் முத்தனைய பல்லில் முல்லையனைய முறுவலும், என்னென்று சொல்வேன! என்மனதில் ஒன்றுந் தோனறவில்லையே! யாதாயினும் சொல்லலாமென்றால் யாதொன்றும் விளங்கவில்லையே!

ரூபகம்.

பல்லவி.

பேசாமல் போவதேனோ—பேருளாளனே
பேசாமல் போவதேனோ.

அநுபல்லவி.

கூசாமல் இங்கே கோடிசூரியர் போலே
குற்றமற்ற என்மேல் பக்ஷம்வையாது சாமி. (பே)

சரணம்.

அழகினுக்கேற்ற அருளுமே கிடைக்காதோ
அடியேனைக்கண்டு ஆதரியாது சாமி (பே)

மண்ணையும் மயக்குதே மன்னவா உன் வடிவம்
பெண்ணையுமயக்காதோ பேரின்பவடிவனே (பே)

மந்தமாருதம்வந்து சிந்தையைமயக்குதே
அந்தமுள்ளமுகம் அல்லாட்டப்படுத்துதே சாமி (பே)

தோழி:—பேஷ்! சீதா! என்னிடத்தில் மறைத்து என்னென்னவோ பாடுகிறாயே இப்போது! இதற்குள்ளாகவா அவரைப் பேசக்கூப்பிடவேண்டும்? இறைவன் அருள்புரிவார் இப்போதே. வாதொன்றுக்கும் பயப்படவேண்டாம். திகில்படாதே சீதா, கவலைப்படாதே!

சீதை:—சொகுஸான இந்தவடிவம் வில்லை எப்படி வளைத்துத் தொல்லையெப்படி ஒழிக்கப்போகிறது! என் மனம் அவரையே நாடிற்று; என் அன்பு அவரிடமே படிந்துவிட்டது! மல்லிகைபோன்ற மெல்லிய கையால் வில்லெப்படி ஒடியும், சொல்லெப்படி முடியும்?

தோழி:—ஜானகி எனுனக்குக்கவலை? எப்பொழுது உன் மனம் நாடிற்றோ அப்பொழுதே எல்லாம் முடிந்தது! எல்லாம் முடிந்தது, வில்லும் ஒடிந்தது! இந்த சுந்தரவடிவம் சுயம்ப்ரகாஸம், காமனுக்குத்தாதை கம்பீர முதல்வன் ஐயன் திருவுருவேயன்றி, மண்ணுலகத்தின் சாதாரணமக்களுருவமாய் என் மனதிற்கு எள்ளளவும் புலப்படவில்லை. ஆகையால் ஹே! ஜனகசுந்தரி! நீ பயப்படவேண்டாம். உன் எண்ணமே நிறைவேறும். உன் இஷ்டமே உறுதியாய்முடியும். மனங்கலங்காதே.

## Act. 6. Scene 2.

அங்கம் 6. காட்சி 2.

நந்தவனம்—ராமன் தனியாக.

---

ராம:—நல்லது! ஹா! வானமே! உனக்கு மானமே இல்லை! ஆலகாலவிஷமே ஆர்ப்பாட்டமாய்க் கவிந்தது போல் நீலநிறங்கொண்டு மேலெலாங் கவிந்தனை! விஷச்சமுத்திரத்தில் அனல் கொதிப்பதுபோல் உன்நடுவே சந்திரன்உதித்தான்! ஹா! விஷத்திற்கும், அனலுக்கும், நான் படும்பாட்டிற்கும், தென்றல் விளைக்கும் தீங்கிற்கும் வெகு நன்றாய் இருக்கிறது! எல்லாரும்வந்து என்னை வருத்த முயல்கிறீர்கள்! ஜானகிமேல் வைத்த காதலை முன்னிட்டுக் காதகப் பயல்களாகிய நீங்களொன்று சேர்ந்து, ஏழையாகிய என்னை எப்படி எப்படி வாட்டுகிறீர்கள்! எப்படி எப்படி வருத்துகிறீர்கள்! என்னுயிர்க்காதலி என்னை மணம் புரிவாள்! ஒழிந்தது உங்கள் துயரம், போயிற்று உங்கள் தொல்லை! நானே ஜானகிராமன், நானே ஜயராமன்!

ஸஹானா-ரூபகம்.

பல்லவி.

என்னை யிப்படி வருத்துதல் நியாயமா
ஹே தென்றற்புலியே (என்னை)

அநுபல்லவி.

மின்னையொத்த பெண்மேல், மஞ்ஞை யொத்தகண்மேல்
என்னைவயப்படுத்தி இப்படிப் புண்படுத்தி (என்னை)

சரணம்.

அரவிந்த முகந்தனின் அழகிய சுந்தரம்
பாராமலே சொல்லலாகும் அற்புதவிசித்திரம்

கரங்களினுன்னதம் கர்த்தனேயறிவான்
கம்பீரநடையோ அது மிகசித்திரம்
வனஜமலர்விழி வானுயிர்நாசி
வைபவநெற்றி நிலவினை யேசி
பரிமள காந்தியும் கண்களைக் கூசி
விளங்குமிப்பெண்ணை யடைவதே ராசி (என்னை)

ஹா! தென்றற்புலியே, கொடும்புலியாகிய அம்புலியே! நீங்களிருவரும் காற்றும் நெருப்புமாக என்மேல் வீசி என் ஆவியை யழித்து அல்லல்விளைக்கின்றீர்கள், தொல்லை செய்கின்றீர்கள்—தென்றற்காற்றை மந்தமாருதம், சில்லென்றிருக்கும், ஆயாஸத்தைத் தீர்க்கும் என்று அனேகம் பெயர்கள் அறியாமற் கூறுகின்றார்கள், தெரியாற் றடுமாறுகின்றார்கள்! தெற்குத்திக்கு எமன் திக்கு; தெற்கி லிருந்து வருங்காற்று எமன் காற்று! எமலோகத்திலிருந்து வருகிற காற்று, என்னைக்கொல்லப் பாசமும் கயிறுமாய் எழும்பிவருகிற காற்று—இந்தக்காற்றை இளங்காற்றென்று கூறுவதும், குளிர் காற்று என்று சொல்வதும் என்ன பிழை புற்றது, என்ன பேதமைவாய்ந்தது! அதிருக்கட்டும், அந்த நிலாவிருக்கின்றதே! அந்த சந்திரப்பாவி, அனல் கொளுத்தும் பாவி, அஞ்சாநெஞ்சுபடைத்த அயோக்கியப் பாவி; குளிர்ந்து தோன்றுகிறதேயென்று கோடிஜனங்கள் ஏமாறுகின்றார்கள்! "வெங்காரம் வெய்தெனினும் நோய்தீர்க்கும் மெய்ப்பொடிப்பச் சிங்கி குளிர்ந்துங் கொலும்" என்கிறபடி கொடிய விஷப்பாவியைக் குளிர்ந்த முகத்துக் குற்றமற்ற சந்திரன் என்பது, சுடுகாட்டை நன்காடென்பது போல்வும், தாலி யறுந்தது என்பதற்குத் தாலி பெருகிற்று என்று கூறுவது போலவும்தானிருக்கும்! இந்த சந்திரன் பிறந்தது கருங்கடல், கூடப்பிறந்தது கொடியவிஷம்! இவ்வித உற்பத்தியை யுடைய இருண்ட மனத்துச் சந்திரன் நாளிலந்தன்னில் நன்மை யெப்படிச் செய்வான்!

ஆகையால் இப்பாவிகள் இந்த சமயம் எல்லாரும் ஒன்றுசேர்ந்து என்னைக் கொளுத்தி வதைக்கிறார்கள்—தென்றலும் தீயாயிருக்கிறது, நிலாவும் நெருப்பாயிருக்கிறது! என் மனது எந்நேரமும் ஹே! சீதா உன்னிடமே யிருக்கிறது, உன் அழகையே வர்ணிக்கிறது, உன் பாசத்தாலேயே கட்டுண் டிருக்கிறது என்று தெரிந்துதான் இவர்கள் என்னை இப்படித் தொந்தரை புரிகின்றார்கள்! எல்லா அழகையும் படைத்த நீ எல்லா அருளையும் கொண்டுவந்து விடுவாயாயின் ஒழிந்துவிடும் எல்லாத்துயரமும்.—ஹா! ஜானகி! உன்னழகை எங்கிருந்தும் கொண்டு வந்தாய், உன் லாவண்யத்தை எங்கிருந்தும் பெற்றாய்! உன் முகம் உத்தமச்சந்திரன்போல் விளங்குகின்றது! நீ என்னெதிரிலில்லையாயினும், என் மனதிலேயே எந்நேரமும் குடிகொண்டிருக்கின்றாய். தாமரையைக் கண்டு சந்திரன் பிரகாசித்த போதிலும் சந்திரனைக் கண்டு தாமரை குவிந்து கூம்பிப்போவதுபோல் ராமச்சந்திரனைக்கண்டு உன்தன் தாமரை முகம் குவிந்து போகுமோவென்று என் மனம் ஏக்கமடைகின்றது! உன்முகம் தாமரைமுகம் மாத்திரம் அன்று; சந்திர பிம்பமாயும் சுந்தரத்தோடு விளங்குவதால் சந்திரனைக் கண்டு கூம்பாது, என்னை நோக்கி யிகழாது!

வானிடு வில்லோ நின்றனற் புருவம்
  வயங்கொளி நிலவோ தயங்கு நின் முகமும்
கானிடுமானோ கயமடு கயலோ
  கண்ணிணை யவைதாம் கன்னியரரசே
தேனிடு மொழியோ நின்திருச் சொற்கள்
  திருவருளிலகு திருத்தமோ பற்கள்
நானிடு முவமை யேனெனக் கேட்க
  நலமுறு சீதா நலமுடன் வருவாய்!

வருவாயே யென்பக்கல் வந்தொரு நன் முத்தந்தான்
தருவாயே யென்னன்பே தாமதம் நீ செய்யாதே

உருவாயே நிற்கின்ற ருத்தமராம் மன்மதனூர்
அருவாயே யிருப்பையோ நீ அழகினுக்கோராரணங்கே

அழகினுக்கோராரணங்கே அற்புதத்திற் கற்புதமே
பழங்களெலாம் ரசம்பிழிந்த சுவைமொழியாய் சுந்தரமே
கிழங்களெலாம் நமை நகைத்துக் கிண்ணாரங் கொட்டுகின்றார்
அழகுடையாய் வாராயோ அன்புடையாய் வாராயோ

ஹே! ஜனகசுந்தரீ, ஹே கனகாம்புஜே, ஹே சீதா! நீ சீக்கிரத்தில் என்னிடம்வந்து, என்னை மணம் புரியாவிடின் இறப்பேன், உயிர் துறப்பேன். உன் அழகிலேயே என் ஆத்மா லயித்துவிட்டது! ஊரை யெல்லாம் சுற்றியும் யாரையெல்லாங்கண்டும் உன் அழகைப்போல் வேறெங்கும் கண்டிலேன், உன் ஸௌகுணத்தைப் போல் வேறெங்கும் பார்த்திலேன், ஹே சுந்தர குமரீ! ஹே சந்திரவதனா! உன் கஸ்தூரிதிலகமும், கம்பீரவதனமும், அலங்காரத் தோற்றமும் அற்புத நகையும் பாவி யென்றன் ஆவியை விழுங்கியதே, ஆவியை விழுங்கி ஆசைக்கடலில் அகற்றிவிட்டதே! ஆசைக்கடலில் முழுகிய எனக்கு ஆதரவு செய்யாயோ, அழகைக்காட்டி அருளைக்காட்டாயோ! உன்றன் அழகுக்கு உவமை கூற என்னாலேயாகாது, யாராலுமாகாது!

மின்னெனு முகமோ மீனெனும் விழியோ
வில்லெனு நுதலோ வியன்பெறு புருவம்
பொன்னெனு மொளியோ கொடியெனு மிடையோ
புகழெனுஞ் செயலோ பூவெனு முடலோ
கன்னலி னிசையோ கண்டெனு மொழியோ
கற்பகக் கொடையோ முற்பகற் றவமோ
என்னென்ன வுரைப்பே னுன்னுடைப் பெருமை
எத்தனை மொழிவே னென்னுடை யன்பே.

## Act 6. Scene 3.

அங்கம் 6. காட்சி 3.

நந்தவனம்—சீதை தோழியுடன்.

---

**தோழி:**—அம்மா ஜானகி, அன்பிற்குரிய ஹே ப்ரியே. நீ என் இப்படி வருந்துகின்றாய்?

**ஜானகி:**—ஹே சகி! என் மனதிலிருப்பதை உன்னுடன் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்லப் போகின்றேன்? அன்று பார்த்தோமே மாடி மேல், அந்த சுந்தரபுருஷன், என்னை வந்து மணம்புரிய என் பாக்கியம் கிடைக்குமா என்றுதான் வருந்துகிறேன்!

**தோழி:**—ஜனகபுத்ரீ! உனக்கு என் அவரையே மணம் புரிய வேண்டுமென்கிற உறுதிப்பாடு உண்டானது? எத்தனையோ ராஜர்கள் எத்தனையோ நாளாகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள் கடிமணம்புரிய! அவர்களுள் எத்தனைபேர் அந்தத்தில் மிக்க சுந்தரபுருஷர்கள்! கம்பீர சுகுமார அலங்கார அதிவீரமன்னர்கள் அத்தனை பெயர் காத்துகொண்டிருக்க, அந்த இளம்பிள்ளைமேல் ஆசைகொண்டாயே, அதுதான் எனக்கு ஆச்சர்யமாயிருக்கிறது.

**ஜானகி:**—என் பிராணசகி! என்னுயிர்த்தோழி! காக்கையின் கண்ணுக்குப் பீர்க்கம்பூ அழகு என்கிறபடி உன்கண்ணுக்கு அவர்கள் உன்னதமாய்த் தோன்றுகிறார்கள். அஃதென்ன அழகா, அஃதென்ன கம்பீரமா? என் ஆவியைக் கொள்ளைகொண்ட என்னுயிர்க் காதலன் கடைவிழிக்குத் தோற்றுப்போகுமே காசினி யழகெல்லாம், புன்ன

கைக்கு இளைத்துப் போகுமே பூமியின் பொலிவெல்லாம்! அந்த அழகையெங்குங்கண்டதில்லை, அந்த நகையை யெங்கும் பார்த்ததில்லை! புருஷோத்தமனே வந்து பூலோகத்தி லவதரித்தானென்று நன்றாயெனக்கு நம்பிக்கையாய்த் தோன்றுகிறது! தாமரை விகஸித்தது போல், அலர்ந்த நல்ல அழகிய முகமும், பரந்தநெற்றியும், விரிந்த மார்பும், கொவ்வைபோல் உதடும், கோட்டைபோல் மூக்கும், சத்தியம் கூறும் உத்தமக் கண்களும், சங்கடமொழிக்கும் இங்கிதக்கரங்களும் பாவையென்மனதைக் பக்குவமாய்க் கொள்ளை கொண்டது, பக்தர் மனதையும் சக்தியோடிழுப்பது, அந்த சுந்தரம் மற்றயார்க்கும் கிடைக்காது, வேறுயாரிடமும் காணமுடியாது!

ஆனந்தபைரவி-ரூபகம்.

பல்லவி.

ஆனந்த தேஜோ மயதிவ்யஸ்வரூபம்
அற்புத அலங்க்ருத அழகிய ரூபம் ப்ரம்ஹானந்த

அநுபல்லவி.

தானந் தயை தோற்றும் தாமரை முகத்தினில்
அன்புமருளும் தோற்றும் உள்ளத்தி னகத்தினில் (ஆனந்த)

சரணம்.

சதகோடி மதிகளைப் பழித்த நல்வதனமும்
சங்கடந்தீர்க்கும் இங்கித நயனமும்
கொவ்வை யிதழும் மரகத வர்ணமும்
கோகனகக்கரமும் கோமள வடிவமும்
வர்ணிக்க முடியாது வாகா யென்றாலே
சொல்லுவார் புலவர்கள் சொகுஸாகப் பின்னாலே (ஆ)

தோழி:—ஜனகசுந்தரீ! என் கண்மணி! அப்படியா சங்கதி! நீயேன் வருந்துகின்றாய்? அவரேயுனக்கு

அழகிய மணவாளனாகப்போகிறார்! ஆனந்ததேஜோமயன், அற்புத திவ்ய அகில கல்யாண குணப்ரதன், அவரே யுனக்கு அமையப்போகிறார்: நீயேன் சந்தேகப்படுகின்றாய்?

ஜானகி:—இவ்வளவு சுந்தர வடிவமும், இத்தகைய புஷ்ப மிருதுவுமாயிருக்கிற இந்த ஸௌகுமாரான கௌமாரன் எப்படி வில் வளைக்கப்போகிறானென்பதே என் மனத்தை வருத்துகின்றது. என் செய்வேன் தோழி!

தோழி:—ஹே! ஜனக்குமரீ! ஜகத்ரக்ஷகி! நீ ஒன்றுக்கும் பயப்படாதே, நீலமேகன் நாளைக்கே வருவான்!

ஜானகி:— செஞ்சுருட்டி-ரூபகம்.

பல்லவி.

எப்போவருவாரோ எந்தன
துரைசாமி (எப்)

அனுபல்லவி.

ஒப்பிலாத அந்த ஒய்யார வடிவினர் (எப்)

சரணம்.

முப்புவனங்களும் கண்டிலா அழகினர்
மோகக்கடலிலெனை முழுத்தியபண்பினர் (எப்)

தேவமனோகர திவ்யக்ருபாகரர்
தேஜோ மயானந்த தீரகுணாகரர் (எப்)

அற்புத சந்திரனை ஒத்துள மேனியர்
அகணித குணகர ஆனந்தஜோதியர் (எப்)

தோழி:—என்னுயிர்க்கினிய இன்னுயிராசே! நீ வருந்தவேண்டாம் ஒன்றுக்கும்! நாளையே வருவான் நளின சுந்தரன—சற்று இப்படி, பூவாலாகிய மெல்லிய படுக்கையில் உல்லாஸமாய்ப் படுத்து ஸ்ர

மத்தைப் போக்கிக்கொள். இந்தா, இந்த சந்தனத்தைப் பூசிக்கொள், சற்றே குளிர்ந்திருக்கும்! தாமரையாலாகிய சாமரை கொண்டு தாபவிரகம் போக்க விசிறுகிறேன்! சற்று நேரம் உறங்கியெழுந்திரு.

ஜானகி:—இவற்றாலெல்லாம் துன்பம் இரட்டிப்பாகிறதே யொழிய ஒன்றாயினும் சிறிது ஒழிந்த பாடில்லை! சந்திரன் செந்தீயாய்க் கொளுத்துகிறான்! பூவும் கொளுத்துகிறது, சந்தனமும் வருத்துகிறது! என்மனதைக் கொள்ளை கொண்டவன் தன் வாராமல் என் துயரம் ஒழியாது, என் வருத்தமும் போகாது! ஹே! நாதா, என் மனதைக் கொள்ளைகொண்ட ஹே நாதா, நீ யெப்போது வருவாய், வில் ஒடிப்பாய், குறை முடிப்பாய்?

சாவேரி-ரூபகம்.

பல்லவி.

என்மீதில் க்ருபை ஏனின்னும் வரவில்லை (என்)

அநுபல்லவி.

பன்னகசயனனே பன்னகபாணியோ
பங்கஜவாசனே பாரில்வந்த நீ (என்)

சரணம்.

பொன்போலும் தாமரைப் பூவுமே கொளுத்துது
மின்போலுஞ்சந்திரன் மேலெலாங்காயுது
என்மேலுஞ் சந்தனம் எரிவந்தம் செய்யுது
தன்மேலும் பூக்கொண்ட பள்ளியும் வருத்துது
உன்போ லழகினில் உத்தமர் யாருளர்
உன்போல் குணத்தினில் உன்னதர் எவருளர்
என்போல் மனைவி உனக்குமே கிடைக்குமோ
எங்கெங்கும் தேடியும் என்போல் கிடைக்குமோ (என்)

தோழி:—அம்மா, என்கண்ணே, அருமந்தக் குழந்தாய், நீ கோரினதையே அடையப் போகிருய்! ஏன் வருந்துகிருய்? எல்லாம் மங்களமாய் முடியும்.

---

## Act. VI. Scene IV.

அங்கம் 6. காட்சி 4

ஜனகர் கொலுமண்டபம்

ஜனகர், மந்திரிகள், சதானந்தர்.

---

ஜன:— ஆனந்த பைரவி-ரூபகம்.

பல்லவி.

என்னபாக்கியம் பெற்றேன்
எம்பெருமா னருளாலே (என்ன)

அனுபல்லவி.

பன்னக சயனன் பத்தினியே வந்து
பாரிலென்மக ளானளே பரிந்து (என்ன)

சரணம்.

அம்புஜ வல்லியே யென்மக ளானதும்
அரனர் திருவில்லே அடியேன்பாலானதும்
வேதாந்தப் பழம்பொருள் வித்தகம் தந்ததும்
விஞ்ஞான முனிவர்கள் வியந்தென்பால் வந்ததும்
சொல்லவும் போமோ சுயஞ்சுடர் திருவருள்
சுகிர்தஞ் செய்தாரே பெருவாரிப் பெரும்பொருள் (என்)

சத்ய சங்கல்பராகும் சதானந்தமுனிவரே, தேவரருளாலும் ஈசன் கிருபையாலும் எனக்குக் கிடைத்த பாக்கியமே பாக்கியம்! அஷ்டலக்ஷ்மிகளுக்குள்ளும் விசிஷ்ட லக்ஷ்மியாகிய பெரிய பிராட்டியாரே உரிய குமாரியாக வந்தவதரித்ததும், ஈசன் வில்லே நேசமாய்க் கிடைத்ததும் எல்லாம் தங்களுடைய கிருபையே!

சதா:—ஹே! ஜனகமஹாராஜா, உண்மையாய்ச்சொல்லு கிறேன்கேள் உன்னைப்போல் யாரிருக்கின்றார் ராஜ யோகி! தாமரையிலைத் தண்ணீர்போல் சம்சாரத் தொல்லையில் பட்டும் படாதும், ஞானத்தோடு காட்டிடயாள்பவர் யாரிருக்கின்றார்கள்?

ஜன:—எல்லா மிருந்தும் என்னை வருத்துகிற தொன்றி ருக்கின்றது! என்ன செய்வேன் ஈசன்செயல்!

சதா:—அஃதென்ன மஹாராஜா?

ஜன:—எல்லா அழகையுமுடைய உல்லாஸகுமாரியின் விவாகத்தைப் பற்றியே விசனமடைகின்றேன். சிவனுடைய வில்லை எவனொடிக்கிறானோ; அவ னுக்கே என் மகளைக்கொடுப்பதாய் சபதஞ்செய் திருக்கின்றேன். சுந்தர ரூபனான எந்தகுமாரன் அத்தனை பளுவானவில்லை அனாயாசமாய் ஒடிக்கக் கூடியவனென்றுதான் கவலையுறுகின்றேன், கஷ் டப்படுகின்றேன்!

சதா:—மோனவிரதம் பூண்ட ஞானக்கொற்றவா! நீ ஒன் றுக்குமே விசனப்படவேண்டாம், நீலமேகனேகோ லங்கொண்டு வருவானிப்போது!

(சேவகன் ஓடிவந்து)

சேவ:—மஹாராஜா, வருகின்றார்கள் விஸ்வாமித்திர முனிவரும் இரண்டு இராஜ குமாரர்களும்.

(ஜனகர் ஆச்சர்யக்குறி காட்டி)

ஜன:—யார் யார்?

சேவ:—விஸ்வாமித்திரரும் இரண்டு ராஜகுமாரர்களும்.

(விஸ்வாமித்திரரும் ராமலக்ஷமணரும் வருகிறார்கள்.)

ஜன:—தபோநிதே, தன்யனானேன் அடியேன். தேவர் திருவுள்ளம்பற்றி, ஏழைக்குடிலுக்கு எழுந்தருள்

வதற்கு என்ன பாக்கியம் பெற்றேன். (உபசாரஞ் செய்து) தாங்கள் வீற்றிருக்கவேண்டும் தங்க சிம் மாதனத்தில்.

(விஸ்வாமித்திரர் சிம்மாதனத்தில் உட்காருகிறார்.)

(ஜனகர் ராமலக்ஷ்மணரை நோக்கி) பிள்ளைகாள் உட்காருங்கள்.

(ராமலக்ஷ்மணர் உட்காருகிறார்கள்.)

விஸ்—யோகத்தவங் கொண்ட ஞான ஜனகரே, நீரும் உம்மைச் சார்ந்த அனைவரும் க்ஷேமமா?

ஜன:—தேவர் கிருபையாலே அனைவரும் சுகமே யிருக் கின்றோம். தங்களோடு வந்திருக்கும் தவப்பெ ரும் புதல்வர்கள் யாவர்? இவ்வளவு சுந்தரமும், இவ்வளவு சுகுமாரமும், இவ்வளவு உல்லாஸமும், இவ்வளவு கம்பீரமும் வாய்ந்தவர்களைக் காசினி தன்னில் நான் கண்டதேயில்லை.

கேதாரகௌளம்-ரூபகம்.

பல்லவி.

கண்டதேயில்லை காசினிதன்னில்

அநுபல்லவி.

கண்ணன் மணிவண்ண னிவனைப்போல் (கண்ட)

சரணம்.

சுந்தரமுகமும் சந்திரவொளியும்
சுகுமார வடிவமும் சூரிய ப்ரபையும் (கண்ட)

இவர்கள் யாவரென்றும் இவர்களுடைய குணாதி சயங்கள் இன்னவென்றும் தாங்கள் தயவுசெய்து தெரிவிக்கவேண்டும், தபோநிதே!

விஸ்:— சங்கராபரணம்-ரூபகம்.

பல்லவி.

பெருமை யுரைக்கவசமா பெருமான்
வன்மையின் தன்மையின் (பெ)

அநுபல்லவி.

அருமையாமிவன் அற்புதச் செயல்களின்
ஆனந்தவீர அதிதீரவெகுசூர வகைகளின் (பெரு)

சரணம்.

உன்னத ரகுகுலந் தன்னி லவதரித்து
உற்றாரின் பெற்றாரின் உளமெலா மகிழ்வித்து
அம்பொன்றால் தாடகை ஆவியைப் போக்கினேன்
அழகிய மாதவள் ஆபத்தை நீக்கினேன் (பெரு)

ஹே! ஜனகமஹாராஜனே! இக்ஷ்வாகு குலத்தில், பிறந்த இணையில்லாத வீரர்கள் இவர்கள்! புறாவிற்கு அபயந்தந்து அதன் உயிருக்காகத் தன் சதையை அரிந்து தராசில் நிறுத்துக் கொடுத்த சிபிச் சக்ரவர்த்தி, இன்னும் அப்படியே பல படியாலும் புகழ் நிறுத்திய புரவலர்கள் வம்சத்தில் தோன்றிய வள்ளல்கள் இவர்கள்! தசரத சக்ரவர்த்தியின் புத்திரர்கள், ராமலக்ஷ்மணர்கள்! மூத்தபிரானாகிய ராமன் முகுந்த பிரானேயாவன்! அவன் தன் அபாரசக்தியும் அற்புத குணமும் அளந்துசொல்லுதல் யாராலு மாகாது. ஒரே அம்பால் தாடகையைக் கொன்றான்; ஒரே மிதியில் கல்லைப் பெண்ணாக்கினான்.

அந்தோநான் விந்தைதனை யாதென்பேன்
அகிலமெல்லாம் வாய்திறந்து
சிந்தாத பெருஞ்சீரை வியந்ததுதான்
சிறியேனு மயர்ந்தே நின்றேன்
நந்தாத பெருவலியோன் நறுமலரின் தொடைபுனைந்த
நளின மூர்த்தி

கொந்தாத இடமில்லை கொடியரா மரக்கரவர்
கொடிய மேனி (1)
மைவில்லே பொய்வில்லா மாயனிவன்
வன்மைதனைக் கூற லாமோ
உய்வில்லேஞ் செயலில்லே முணர்வில்லே
முவப்பில்லே மென்று போற்றப்
பைவில்லே படவில்லாப் பாம்பணையைத்
துரந்தெம்பாற் பரிவா யோடிக்
கைவில்லாற் கொன்றொழித்தான் கால்படலா
லுயிர்தந்தான் கடவுண் மைந்தன் (2)
போயிற்றே சரமதுதான் புகைந்ததுவே
யகிலமெல்லாம் புக்குப் போந்து
போயிற்றே யரக்கியுயிர் போயிற்றே
தேவர்துயர் போயிற் றென்னல்
ஆயிற்றே கல்தான்பெண் ணுயிற்றே
ஆயிற்றே களிப்பே யெங்கும்
ஆயிற்றே வில்முடிவும் ஆயிற்றே மணநிறைவும்
ஆயிற் றம்மா. (3)

தாடகைசெத்தாள் இவனுலே! கல்லான அகலிகை கண்ணுன பெண்ணுனுள் கால் விரலடியில்! அப்பன் ராமனுடைய பெருமையைக் கூற ஆயிரம் நாவுடைய ஆதிசேஷனுலுமாகாது.

ஜன:— அருந்தவஞ்செய்த பெருந்தவ முனிவரே! என்ன பாக்கியம் பெற்றேன், என்னன்பன் ராமன் பெருமையைக்கேட்க! எல்லாம் தங்களுடைய ஆசீர்வாதமே, எல்லாம் தங்களுடைய கிருபையே! நாளைக்கு அரசர்களெல்லாம் இங்கு வருகிறார்கள்! சிவனுடைய வில்லைச் சிறப்பா யொடிப்பவனுக்கே என் மகளைக்கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறேன். ஆகையால் தாங்கள் மூவரும் விஜயஞ்செய்ய வேண்டும்.

விஸ்:—அப்படியே அப்படியே! தற்போது போய்வருகிறோம்.

(மூவரும் விடைபெற்றுச் செல்கிறார்கள்)

---

## Act. VII Scene I.

அங்கம் 7. காட்சி 1.

**Road Scene.** வழிக்காட்சி.

(நாரதர் வருகிறார்.)

நார:—

---

ஸர்வம் விஷ்ணுமயம் ஜகது! ஸர்வம் கலகமயம் ஜகது! என்ன செய்வேன் என் இயற்கை அப்படியாய் விட்டது! ஒருவேளை சாப்பாட்டிற்கு ஒன்பது கலகமாவது செய்தால்தான் சாப்பிட்டசாதம் எனக்குச் சரிவர ஜீரணமாகும்! அது என் சுபாவமாய்விட்டது, அது என் இயற்கையாய்விட்டது! சாவுவராதாஎன்றுபொழுது விடிந்ததும் பணிசெய்வோன், சங்கைவைத்துக்கொண்டு சங்கரா என்று காத்திருப்பான்! வேலைவாராதா என்று கூலிக்காரர்கள் விழித்திருப்பார்கள் எத்திக்கு பார்த்தாலும்! கலகம் வாராதா என்று காத்திருப்பேன் நான் ஒவ்வொரு கணமும், ஒவ்வொரு நாளும்! உலகத்தில், ஜெகதீஸ்வரா, நல்லதிற்கும் இடமுண்டு, தீயதிற்கும் இடமுண்டு! கலகம் பிறந்தாலன்றோ நியாயம் பிறக்கும்! நியாயம்பிறப்பதற்கும், உண்மை விளங்குவதற்கும், நல்ல எண்ணத்தோடு நல்ல கலகமாய் நான் மூட்டுவதே தவிர, கெட்ட எண்ணத்தோடு கெடுதிவரவேண்டுமென்று மாத்திரம் நான் கலகம் செய்வதில்லை, நான் நெருப்பை மூட்டுவதில்லை! அந்த விஷயத்தால் தான், அடியேன் ரிஷியாய் விளங்குகிறேன், தபோதன

னென்று மதிக்கப்படுகிறேன்! அதிருக்கட்டும், இன்று கலகம் மூட்டுவதற்கு ஒன்றுங்கிடைக்க வில்லையே யென்று ஒரு நாழிகையாய் உறங்கிக்கொண்டிருந்தேன். அச்சா, சபாஷ், அகப்பட்டது ஒன்று! புலப்பட்டது ஒரு விஷயம்! ஜானகி கல்யாணம் மிதிலையில் நடக்கப் போகிறது! ராவணனைக் கிளப்பி விட்டால், நல்லவேடிக்கை நாலுநாழிகை பார்க்கலாம்! அதுதான்சரி! இத்தனை நாள் எனக்கு இதைப்போல் அழகான யோசனை அற்புதமாய்த் தோன்றினதில்லை! காலையிலெழுந்ததும், இன்று, கள்ளமுள்ள குள்ளநரி கண்ணெதிரேபட்டது! கோணமூஞ்சிப் பைத்தியக்காரனொருவன், குறுக்கே சென்றான் குதர்க்கம் பேசிக்கொண்டு! இந்த சகுன அதிர்ஷ்டத்தால் தான், இந்த அற்புதமான யோசனை எந்தனுக்குத் தோன்றியது! சரி, ராவணன் மாளிகைக்கு ரமணீயமாய் வந்துவிட்டோம். பார்ப்போம் ஒருகை, காண்போம் ஒரு தமாஷை!

---

## Act VII. Scene 2.

அங்கம் 7. காட்சி 2.

### இலங்கை.

(ராவணனுடைய மந்திரி பிரதானிகள் கொலுவில் காத்துக்கொண்டிருக்க, ராவணன் வருதல்)

---

ஸ்ரீராகம்-ரூபகம்

ராவ:— பல்லவி.

பரசிவ சின்மய பரமானந்தம்
பரிபூர்ண,நிஷ்கள பரமாகாஸம்-ஸ்ரீ (பர)

அனுபல்லவி.

ஹர ஹர தத்துவ அற்புத நடனம்
வெகு வெகு நின்மல வேதாகமபடனம்-ஸ்ரீ (பர)

சரணம்.

கொன்றையும் தும்பையும் கொண்டருள் பரனே
மன்றையும் மனதையும் மகிழ்விக்கும் அரனே
அரனே சங்கரனே
திருமகன் ஐங்கரனே
அடியரைக் காத்தருள் பரனே
கங்கா தரனே-ஸ்ரீ (பர)

ராவணன் கொலுவமர்தல்.

மந்திரி பிரதானிகள் வந்தனஞ்செய்தல்.

ராவணன்:—தந்திரம் மிக்க மந்திரியே! நாட்டில் என்ன விசேஷம், நகரத்தில் என்ன சங்கதி?

மந்திரி:—சப்த சமுத்திரங்களையும் கொந்தளிக்கச்செய்து சப்த லோகங்களையும் பந்தைப்போலாட்டி, அந்தர வானவர்களையும், ஆகாய கந்தர்வர்களையும் சுற்றிச் சுழற்றித் தேவர்களைப்போலவே மூவர்களையும் திக்குமுக்காடச்செய்து எட்டுத்திக்கிலுமுள்ள கொட்டம்பிடித்த யானைகளையும், பாதாளலோகத்துப் பயங்கர நாகங்களையும், விதிர் விதிர்த்துப் பிதிர் கலங்கும்படி ஏழாட்டமாடிய ஏந்தல் பெருமானே, பராக்கு! எட்டுத்திக்குகளுக்கு எட்டுச் சிரங்களையும், ஆகாயத்திற்கும் பாதாளத்திற்கும் அழகிய மற்றிரண்டு சிரங்களையும் படைத்து, அதிகப்பிரசங்கித்தனத்தை அடியோடே ஓட்டி, கிடுகிடுத்துப்போகும்படி கீர்த்தியுள்ளதேயென்று எங்கணும் நாட்டி, எம்மையெல்லாம் காத்தருள் ஏக சக்ராதிபதியாய் தேவர் எழுந்தருளியிருக்கும்போது என்ன விசேஷம், என்ன சங்கதி யுண்டாகப்போ

கின்றது? கைக்குழந்தைகளுக்கு வாய்விட்டழு வதற்குப்பயம், காவலாசர்க்குக் கட்டளையிடுவதில் 'காபரா,' கந்தர்வஸ்த்ரீகளுக்குக் கானம் வருவ தில்லை, நாரதபகவானும் தம்புரை மீட்டுவதில்லை; கோயிலில் பூஜையில்லை, குருக்களுக்கு வாயில்லை! தேவர்களெல்லாரும் திசைதெரியா தோடிவிட் டார்கள், மூவர்கள் போயெங்கோ மூலையில் புகுந் துகொண்டார்கள்! இதுதான் விசேஷம், வேறென் னவிசேஷம்!

ராவ:—ஹா மந்த்ரீ, அற்புத மந்த்ரீ, அறிவுள்ள மந் த்ரீ. என் சக்தியைத் தெரிந்து, என் சாகஸத்தை யறிந்து, என் வல்லமையை யுணர்ந்து, ஏற்றவாறு கடமைகளை எதிரில்லாதபடி நிறைவேற்றுவதற் குத் தக்க மந்திரி நீ அதிர்ஷ்டவசமாய்க் கிடைத் தாய்! அது நான் செய்த பாக்கியம், உனக்கு நேரிட்டயோக்கியம்! அதிருக்கட்டும், நான் இப் பொழுது கவனிக்கவேண்டியவை யாவை? சொல் லவேண்டிய முக்கியவிஷயங்களைச் சொல்லுவாய் மந்த்ரீ, சுபகுண மந்த்ரீ.

மந்:—நேற்றைப்போதுதான் ஒன்பது கிரகங்களைப்பிடி த்து ஒரு மூலையில் போட்டுவைத்தேன்!

ராவ:—அப்படியா சபாஷ்! சோறு போட்டாயா, அவை களுக்குத் தண்ணீர் வார்த்தாயா?

மந்:—என்ன செய்வேன், ஒன்று கொள்ளு கேட்கிறது, ஒன்று துவரை கேட்கிறது, ஒன்று மொச்சை கேட்கிறது, நச்சையென்ன சொல்வேன், நாதனே என்னால் முடியவில்லை!

ராவ:—ஆயின் என்ன செய்தாய்?

மந்:—விளக்குமாற்றால் பொத்துப் பொத்தென்று பொத்தி, தாம்புக்கயிற்றால் மொத்து மொத்தென்று மொத்தி, வாரிச்சேர்த்து மூலையில் தள்ளிவிட்டு, வந்தேனிங்கே இப்போதுதான்! தண்ணீர் தெளிக்காத வருணன் மீது தடபுடலாய்க் கோபித்து, ஐந்து ரூபாய் அபராதம் போட்டேன்! சூரியன் ரோட்டுக்கு ரயிட் சயிட்டில் வந்தானென்று, எட்டு ரூபாய் அபராதம் சட்டப்பிரகாரம் போட்டேன்! கொடுக்கமுடியாததால், இரவெல்லாம் ஜயிலிலடைத்தேன்!

ராவ:—ஹா சூரியனையா?

மந்:—ஆம் ஆம் மண்டலாதிபா!

ராவ:—ஆயின் அழுதானா?

மந்:—ஆமாம் அரசே! அழுத கண்ணீரெல்லாம் அப்படியப்படியே பனிநீராய்ப் பெய்கிறது!

ராவ:—பலே பலே சபாஷ் சபாஷ் மஹாவிஷ்ணுவோ!

மந்:—மஹா விஷ்ணுவை மண்ணைத்தின்னச் சொன்னேன்.

ராவ:—தின்றானா?

மந்:—அப்புறம் பார்க்கலாமென்று அப்படியே ஓடிவிட்டார்.

ராவ:—எப்புறம்?

மந்:—இடையனாய்ப் பிறக்கப்போகிறாராம். அப்பொழுதாம்!

ராவ:—விட்டுவிட்டாயா?

மந்:—ஓடிவிட்டார்.

ராவ:—ஹா! பார்த்தாயா அதிகப்பிரசங்கித்தனத்தை! சிவனே?

மங்:—மலையிலேறி மாட்டின் பின்னே யொளித்துக் கொண்டார்!

ராவ:—இழுத்துக்கொண்டு வரக்கூடாதா?

மங்:—பாம்பையெடுத்து ஊஞ்சியில் காட்டுகிருர்?

ராவ:—பல்லைப் பிடுங்கக் கூடாதா?

மங்:—பயமாயிருக்கிறது, தாங்கள் தான் போகவேண்டும்!

ராவ:—இருக்கட்டும் நான் பார்த்துக்கொள்கிறேன்.

மங்:—காலை முதல் மாலைவரையில் சிவபூஜை செய்கிறீர்களே தாங்கள்! சிவாகமத்தையே சிந்தனைசெய்கிறது, சிவன்கோயிலையே இடித்துத்தள்ளுகிறது! மஹாப்ரபோ தங்கள் திருவிளையாடல் என்ன திருவிளையாடல்!

ராவ:—சிவனைப் பூஜைசெய்வது சிவனையடிப்பதற்குத்தான்! தீட்டின மரத்திலே கூர்பார்ப்பது தான திருவிளையாடல்! எங்களண்ணன் பத்மாசூரன், மஹேஸ்வரனிடத்திலேயே வரம்வாங்கி மஹேஸ்வரன் தலையிலேயே கைவைக்கப் பார்க்கவில்லையா? ஆனால் அவன் அகப்பட்டுக் கொண்டான், நான் அகப்பட மாட்டேன்!

மங்:—அதற்குத் தடையில்லை! தாங்கள் போனால் தடையுண்டோ? நாராயணர் வந்து வேப்பிலையைத் தின்ற நாக்குப்பூச்சியைப்போல், காலில்விழுந்து கயமுயவென்பார்! சுண்டைக்காய் வற்றல்போல், சுக்குமாந்தடியோடே, காலில்விழுவார் கபாலீஸ்வரர்! மற்றவர்களைப் பற்றிச்சொல்லவேண்டுமோ மாநிலந்தன்னில்! தங்கள்பெயர் சொல்லும்போதே தவித்துப்போகிறது உலகமெல்லாம்! தவிக்கிறது; தத்தளிக்கிறது, கொந்தளிக்கிறது, கட

லெல்லாம் கொப்புளிக்கிறது, நக்ஷத்திரங்களெல்லாம் உதிர்கின்றன, நாகங்கள் நடுங்குகின்றன, அண்டகடாகங்கள் படார் படாரென்று வெடித்து, கடலிலுள்ள மீன்கள் குதித்துவிழுந்து, துள்ளித்துடிக்க, யானைகள் வீறிட்டுக்கூவ, சிங்கங்கள் கர்ச்சித்துச் சின்னாபின்னமாயோட உலகமெல்லாம் அல்லோலகல்லோலமாய் அவ்திப்பட்டுப்போகின்றனவே! அதைவிட நமக்கு வேறென்னவேண்டும்!

ராவ:—அதுதான் வேண்டும் அதுதான் வேண்டும்!

(சேவகன் ஓடிவந்து எதிரில் விழுந்து நமஸ்கரித்து.)

சேவ:—மஹா மண்டலாதிபா நாரதர் வருகின்றார்.

ராவ:—ஹா! நாரதரா? சும்மாவா வருகிறார்?

சேவ:—சும்மா வருவாரா? சூழலோடுதான் வருவார்!

ராவ:—என்ன என்ன?

சேவ:—வீணையை ஏந்திப் பாடிக்கொண்டு வருகிறார் பாகவத சிகாமணிபோல்!

(நாரதர் வீணையை யேந்திப் பாடிக்கொண்டு வருதல்)

சங்கராபரணம்-ரூபகம்.

பல்லவி.

எதுக்கு உலகமே
யாவுமே கலகமே
எந்தை பெருமான் சிந்தையில் வந்தது (எது)

அனுபல்லவி.

வாதுக்கு வம்புக்குப் போதாது எனக்கு
வகையான கலகமே வழியாகும் என் தனக்கு (எது)

சரணம்.

ஐயன் கலக்கவே பிறப்பது உலகம்
நானும் கலக்கவே விளைவது கலகம்
எல்லாம் நல்லது என் செயல் வல்லது
நான் சொலும் சொல்லது பாவிகள் தலையில்கல்லது (எது)

ராவ:—வாரும் நாரதரே, நீரும் மோரும்!

நார:—அதென்னப்பா!

ராவ:—மோரில் நீரைக் கலக்கச் சொன்னேன்!

நார:—தெரியவில்லையே!

ராவ:—உண்மையோடு ஊறுவிளைப்பது, சங்கதி தன்னில், சங்கடத்தைச் சேர்ப்பது! அதுதான் வேறொன்றுமில்லை!

நார:—அப்பா ராவணா, நான் கிழவன், ஊரூராய் அலைகிறவன்! நீயோ, வேதத்தைச் சிக்கறுத்தவன்! உன்னோடு பேச என்னாலே முடியுமா? எனக்கு அர்த்தமே விளங்கவில்லை!

ராவ:—உள்ள சங்கதியோடு கள்ளமாகும் கலகத்தை மெள்ளமெள்ளச் சேர்ப்பவராயிற்றே தாம் என்று சொன்னேன்!

நார:—நானா கலகக்காரன்! நீதான் பைத்தியக்காரன்! நீதான் கற்றறிமோழை; நீ படித்தும் பயனில்லை, நீ பாடியும் பலனில்லை.

ராவ:—ஹா என்ன நாரதரே அப்படித் தீர்த்துவிட்டீர்!

நார:—எனக்கென்ன பயம், உள்ளத்தைச் சொன்னால் கொள்ளைக்கண்ணிக்கு கோப்பாளம் என்கிறது! கண்டதைச் சொன்னால் கலகக்காரன், உண்மையைச்சொன்னால் வெகுஜனவிரோதி, சத்தியவாதி வெகுஜனவிரோதியல்லவோ! நான் சாகப்போகிற

கிழவன், நீயாவது சுகப்படுவாயென்று, பேயாவதும் பின்னிடும்படி ஓடிவந்தேனிங்கே ஓரே ஓட்டமாய்! நானும் வேதம் படித்தவன், நீயும் வேதம் படித்தவன்! நானும் பாட்டுக்காரன்; நீயும் பாட்டுக்காரன்! அந்த நேசத்தாலே அதிக பாசம் வந்து, நாடிவந்தேனுன்னை, ஓடிவந்தேனிங்கே! நீ என்னமோ, எல்லாவற்றையும் விட்டுப் பைத்தியம் பிடித்தவன்போலும் சைத்தியத்தாலே ஜன்னிபிறந்தவன்போலும் ஏதேதோ உளறுகிறாய், என்னென்னமோ குளறுகிறாய்?

ராவ:—என்ன என்ன நாரதரே!

நார:—ராவணா, உன் அண்ணன் கும்பகர்னன் உறங்குவது போதாதென்று, நீயும் உறங்குவது பேயும் செய்யாத வேலையாயிருக்கிறதே! அவன் கண்ணை மூடிக்கொண்டாயினும் தூங்குகிறான்: நீ கண்ணைத் திறந்துகொண்டே தூங்குகிறாயே! பேஷ் பேஷ்!

ராவ:—நாரதரே சொல்லும் சொல்லும்! ஏதோ விசேஷமிருக்கிறாப் போலிருக்கிறதே!

நார:—மிதிலைப்பட்டணத்தில் ஜனகிப்பெண்ணை ரகுராமன் கொண்டுபோக வெகு வேகமாய்ப் போகிறான்! உனக்கல்லவோ கிடைக்கவேண்டும் உன்னதப்பாவை! நீ ஏன் இங்கு அதைவிட்டு பைத்தியகாரன் போல் பரதவித்துக் கொண்டிருக்கிறாய்?

ராவ:—ஹா! அப்படியா சமாசாரம்! தெரியாமற்போயிற்றே தெரிவையின் சங்கதி! ஹா அவள் அழகும், ஐயோ அவள் ஒயிலும், அவள் குரலின் குயிலும், அவள் நடையின் மயிலும், என்ன சுந்தரம் என்ன வடிவம்! விடுவேனா நான்! எனக்கு ஏன் சொல்லவில்லை ஜனக மஹாராஜன்?

நார.—உறங்கிக் கொண்டிருந்தால் உனக்கார் சொல்லு வார்கள்? கும்பல் கும்பலாய் ராஜாக்கள் கூட்டம் கூட்டமாய்ப் போகிறூர்களே நீ சொத்தையென்று உனக்குச் சொல்லவில்லை.

ராவ.—ஹா அப்படியா நாரதரே? இதோ புறப்பட்டேன், அதோகதிப் படுத்துகிறேன், அண்ட கடாகத்தைப் புரட்டுகிறேன், அதிகப் பிரசங்கிகளை அடியோடே நசுக்குகிறேன், பொசுக்குகிறேன். எனக்கென்ன வன்மையில்லையா, எனக்கென்ன தன்மையில்லையா, எனக்கென்ன வீரமில்லையா, எனக்கென்ன தீரமில்லையா? ஹா அறிகிறேன், ஹா தெரிகிறேன்!

ராகம்-அடாணு தாளம்-ஆதி.

பல்லவி.

நானென்ன முட்டாளா நீர்தாம் சொல்லுமே
நானென்ன மட்டாளா

(நார:—யார் சொன்னது?)

அநுபல்லவி.

வானத்தை யிடித்து
மீன்களைப் பிடித்து

(நார:—அது பெரிய வேலையாயிற்றே?)

ஆவியைக் குடித்து
அரசரை மடித்து
அந்தரமெங்கணும் அவதிப்பட்டொழிந்திட
அரிவையை நானே கொண்டுதிரும்பிட
எனக்கென்ன தெரியாதா என்பலம்
யார்க்குமே புரியாதா

(நார:—ஹா ஹா உனக்கென்ன தெரியாதா?)

சொத்தை யரசர்கள் சூரத்தைப் பார்க்கிறேன்
வித்தையையெல்லாம் கிணற்றிலே சேர்க்கிறேன் (நா

சரணம்.

ஏனெனக்குச் சொல்லவில்லை

(நார:—ஆமாம் நீ தூங்குகிறாய்)

திருமணக்கடிதம் அனுப்பவேயில்லை
வந்தது அரசர்க்குச் சரியானதொல்லை
வீராதி வீரர்கள் தின்னட்டும் புல்லை

(நார:—பாரு)

ராவணனிங்கே பேசாதிருந்திட
ராஸ்கல்களங்கே வந்து பொருந்திட
என்னென்ன விந்தை

(நார:—அதற்கென்ன ஆக்ஷேபணை?)

எனக்கென்ன சிந்தை
ஒருநொடி தன்னில் ஒரு குதிகுதிக்கிறேன்
ஒருமொழி தன்னில் பெருமிதி மிதிக்கிறேன்
நானென்ன பெரும் Foolஆ
எனக்குச்செய்வது ஜாலா

(நார:—இல்லை இல்லை!)

முட்டாள் பயல்களை முறுக்கியடிக்கிறேன்
மூடராம் பேய்களை ஓட அடிக்கிறேன் (நானென்)

நார:--பேஷ் ராவணா நல்லபாட்டு, நல்ல ராகம்! பேஷ் பேஷ்!

ராவ:—நாரதரே, Good Bye, Good Bye! Thanks! நான் மிதிலைக்குப் போகிறேன். நீரும் வாரும், வேடிக்கைபாரும்! நான் முன்னே போகிறேன்.

---

## Act VII. Scene 3.

### அங்கம் 7. காட்சி 3.

### ஜனகர் கோலுவிற்கு வருதல்.

---

இங்கிலீஷ் நோட்.

ஆதியான தேவனே ஜோதியான தற்பரா
நீதியானபோதனே நித்யமான வித்தகா.
புண்யமான ரூபனே கண்யமான தத்துவா
அண்ணலான அற்புதா அத்தனுன சத்துவா
வேதகீத போதனே ஆதியான ஜோதியே
நீதியான வேதனே ஆடல் நீடு பாதனே.

(ஜனகர் கோலுமண்டபம்.
அரசர்களெல்லாரும் விஜயஞ்செய்திருக்கிறார்கள்.
விஸ்வாமித்ரரும் ராமலக்ஷ்மணரும் வந்து சேர்ந்தார்கள்.

அந்தப்புரமாடியின்மேல் ஜானகியும் தோழியும் நின்றுகொண்டு வார்த்தையாடுகிறார்கள்.)

தோழி:—அன்பார்ந்த எனது பொன்போன்ற சீதா! ஹே, ஜாநகசுந்தரீ, இத்தனை ராஜாக்கள் இங்கு எத்தனைபோ வந்திருக்கிறார்கள்! ஆசைகொண்ட நேசமணவாளன், அழகில் மிகுந்த ஆனந்த ஸ்வரூபன், யாராயிருக்கலாம்? உன் எண்ணத்தைக் கூறினால் என்னெண்ணத்தில் நிலையுண்டாகும். அன்னவனே வில்வளைக்க ஐயனைப் பிரார்த்திக்கலாம. அதோபார்! அங்கே முதலில் உட்கார்ந் திருக்கிறாரே அவரா, நீ விரும்பிய அழகிய மன்னர்?

கமாஸ்-ரூபகம்.

தோழி:— அந்த சந்தத்தோடே முந்தியுட்கார்ந்தாரே
அவரையா விரும்பினாய் அதிரூப வதியே

சீதா:— வீணுனபேச்சை விளையாட்டாய்ப் பேசாதே
கோண குல்லாக்காரர் கொற்றாவர் வேண்டாம்

### எதுகுலகாம்போதி-ரூபகம்.

தோழ்:— ஆனந்தமாகவே அட்டகாசம் செய்து
அலங்காரத்தோடே அப்படித் திரும்பி
தானந்தம் பாடும் தரணி மன்னவர்
தன்யராவேண்டும் அன்னமே கூருய்

சீதா:— ஒன்றுந்தெரியாமல் உளருதே நீ பாவாய்
உத்தமரவரன்று உளங்களி செய்தவர்
ஒன்றுந் தெரியாமல் ஓஹோவென்றிருப்பவர்
என்றனக்குவேண்டாம் இயம்பாதே பெண்ணே

### செஞ்சுருட்டி-ரூபகம்.

தோழி:— பார்க்கப் பார்க்கப் பரிதாபமாக
வேர்க்க வேர்க்க ஆவிகுன்றி
யார்க்கும் முன்னே ஆவென்றிருப்பவர்
தீர்க்கவதியே அவர்தானு வேண்டும்

சீதா:— அன்னவர் வேண்டாம் அழகுள்ள தோழி
என்னமோ பேசுவாய் எதிரே நீ நில்லாதே

### ராகம்-மோஹனம்; தாளம்-ஆதி

தோழி:—மோஹன சுந்தரன் முத்துப்போல் பல்லினன்
கோமளவடிவினன் கொற்றவிற் புருவத்தன்
ஸ்யாமள மேனியன் யாவர்க்கும் பாலியன்
சாரங்கமேந்திய சமர்த்தனு வேண்டும்
சண்பக மணமுள்ள இன்மொழிமாதே
கோதண்டமேந்திய குமரனு வேண்டும்

(சீதை தலைகுனிந்து புன்னகை செய்தல்)

தோழி:—தெரிந்தது தெரிந்தது! கடவுள் அருள் புரிவார், அவரே வில்லொடிப்பார்.

* * *

சதா:—கனக சிம்ஹாதனத்தில் வீற்றிருக்கும் ஹேஜனக மன்னு! அரசர்களெல்லாரும் ஆவலோடு வந்திருக்கிருர்கள், உன் பிரதிக்ஞையை நிறைவேற்ற உத்தமமான சமயம் இதுவே!

ஜன:—மஹாபாக்யம் மாதவமுனிவரே!

(பிறகு அரசர்களை நோக்கி)

ஜன:— ஆனந்தபைரவி-ரூபகம்.

அங்கதேசாதிப அன்பரே வாரும்
அழகிய வில்லொடிக்க அன்புடன் வாரும்.

அங்:— ஐந்தாறு நாளாய் அகம் மிக வருந்துது
அதிகமாய்த் தலைநோயும் மென்மேலும் பொருந்துது
வாட்டமில்லாவிடில் தாட்டியா யொடிப்பேன் நான்
வருத்தமில்லாவிடில் பாரமோ இவ்வில்தான்

ஜன:— வங்கதேசாதிபா வண்மையாய் வருவீரே
துங்க வில்லொடித்துமே துயரத்தைப் போக்கீரே.

வங்:— என்ன நான் செய்வேன் இடுப்புமே நோகுது
இல்லாவிட்டாலிவ்வில் சும்மாவோ போகுது

ஜன:— கலிங்கதேசத்துக் கம்பீர மன்னரே
கணத்திலே வில்லைக் கனமாயுடைப்பீரே

கலி:— ஜலதோஷத்தோடு ஜுரமுமே வந்தது
கையுமசையாமல் கவலையே தந்தது
என்ன நான் செய்வேன் என்னாலே யாகாது
ஈசன் வில்லையொடிக்க எவனாலுமாகாது

துலிங்:— என்னாலேயாகாதா ஏதேதோ பார்க்கலாம்
எடுப்பேனுன்வில்லை ஒழிப்பேனே இத்தொல்லை
ஐயையோ விழுந்தேனே தலையிலும் பட்டதே
ஹா ஹா ஹா என்னாசை அடியோடே விட்டதே.

ஜன:—காஸ்மீர ராஜரே, தாங்கள் பார்க்கிறீர்களோ?

காஸ்:—வேண்டாம் வேண்டாம்! வந்தனம் வந்தனம்!

ஜன:—மகதராஜரே, தாங்களோ

மக:—Ditto, Ditto!

ஜன:—குருதமன்னரே தாங்களோ

குருத:—Same, Same—கேட்கவேண்டுமோ!

ராவணன் வருகிறான்

ராவ:— தோடி-ரூபகம்.

பல்லவி.

என்னடா மெத்த இடக்குச் செய்கிறாய்
ஹே ஜனக மன்னா

அநுபல்லவி.

பன்னடா இந்தப் பாரி லென்னைவிடப்
பாக்கிய சாலியும் யோக்கிய சாலியும்
முன்னடா கொடுவந்து முடுக்கடா பார்ப்போம்
என்னடா உன்புத்தி என்னடா உன் சக்தி (என்)

சரணம்.

கல்யாணமென்று நீ கட்டியங் கூறிட்டுக்
கடிதங்களெங்கணும் கனக்கவே வரவிட்டு
எனக்குமே சொல்லாது என்னடா செய்திட்டாய்
உனக்கெங்கே புத்தியும் கிணற்றிலோ பெய்திட்டாய்
வெட்கம் வெட்கம் சீசீசீ
முட்டாள் முட்டாள் தூதூதூ (என்)

ஹா ஜனகா! என்னடா உன் அறிவீனம்! என்னடா உன் புத்தி உலக்கைக்கொழுந்தா யிருக்கிறதே! இத்தனை பெயர் இஸ்பெட் ராஜாக்களுக்குச் சொல்லி எனக்கு ஏனடா சொல்லவில்லை எந்திழை கல்யாணத்தைப்பற்றி! அதோ பார், ஆடுதன் ராஜா ஆந்தை போல் விழிக்கிறார்! க்ளாவர் ராஜா காட்டுமராண்டி போல் பசபசவென்று பல்லைக்காட்டுகிறார்! இஸ்பெட் ராஜா, அதோ பார், இளித்தபல்லை ஒளிக்காது காட்டுகிறான், டைமன் ராஜா, டர்டி பெல்லோ, டம்டம் என்று நடுங்குகிறான்! இந்த சொத்தைப் பயல்களுக்கு எழுதியனுப்பிவிட்டு, ஏகசக்ராதிபதியாகிய எனக்கு, த்ரிலோகத்தையும் ஆளும் தீர புருஷனாகிய எனக்கு, உன்னையும் உன்னைப்போலொத்த மன்னவர்களையும் அந்

தாக்தன்னில் பம்பரம்போலாட்டும் எனக்கு, தேவரைச் சிறையிட்ட எனக்கு, மூவரைப்பயமுறுத்திய எனக்கு, ஏனடா அனுப்பவில்லை திருமணப் பத்திரிகை? தக்க பதில் சொல்லாவிட்டால் இக்கணமே உன்னைச் சிறையிடுவேன்! ஹா அவ்வளவு கர்வமா! ஹா அவ்வளவு அகங்காரமா! ஹா ஹா!

ஜன:—என்னை க்ஷமிக்கவேண்டும்.

ராவ:—உன்னையா க்ஷமிக்கவேண்டும்! உண்மையைச் சொல், எனக்கு ஏன் சொல்லவில்லை?

ஜன:—நான் சொல்லத்தான் சொன்னேன்! கணக்கப்பிள்ளை ஏதோ தப்பு செய்துவிட்டான்.

ராவ:—கூப்பிடு அந்தக் கூழைக் கணக்கனை!

(கணக்கப்பிள்ளை வருதல்.)

ராவ:—அடா சுண்டெலிக கணக்கா! அடா கள்ளாப்புக் கணக்கா! ஏனடா எனக்குச் சொல்லவில்லை?

கணக்:—(நடுங்கிக்கொண்டு) நானு சொல்லவில்லை நாயகராகிய தங்களுக்கு? இதோபாருங்கள் திருமணப் பத்திரிகை! கையிலேயே வைத்துக்கொண்டு கவலையேபட்டுக் கொண்டிருக்கிறேன்.

ராவ:—ஏன் ஏன்?

கண:—இந்த அரசர்களுக்கெல்லாம், ராஜகம்பீரரென்றும், ராஜமான்ய ராஜாதிபரென்றும், மார்த்தண்ட மஹாராஜரென்றும், A B C D முதல் இருபத்தாறு எழுத்துக்களையும் டைடில்போட்டு தடபிடல் செய்துவிட்டேன்—கார்ட்ஸ்ப்ளே ராஜர்களுக்கெல்லாம்!

ராவ:—அதென்ன கார்ட்ஸ்ப்ளே ராஜாக்கள்?

சண:—அதுதான் தாங்கள் சொன்னீர்களே! கேட்டுக் கொண்டுதா னிருந்தேன்.

ராவ:—என்ன அது ?

கண:—இஸ்பேட் ராஜா, க்ளாவர் ராஜா, டைமன் ராஜா, ஆடுதன் ராஜா.

ராவ:—பேஷ் பேஷ்! அப்புறம் சொல்!

கண:—அந்த கார்ட்ஸ்ப்ளே ராஜர்களுக்கெல்லாம் அந்த டைடில்கொடுத்துவிட்டு, தங்களுக்கு மேல்விலாஸம் எந்த டைடிலை வைத் தெழுதுவது என்று எனக்குத் தோற்றவில்லை! தங்கள் பெருமைக்கும் தங்கள் அருமைக்கும் எந்த டைடிலும் இழிவாகவே காண்கிறது? எல்லாவற்றிற்கும் பெரியபட்டம் எதுவாயிருக்கக் கூடுமென்று இன்னும் யோசனை செய்துகொண்டிருக்கிறேன், ஏதோன்றும் விளங்கவில்லை. ஆதலால், கலியாணப் பத்திரிகையைக் கையிலேயே வைத்துக்கொண்டு ககனத்தைப் பார்த்துக்கொண்டே காலங்கழிக்கிறேன்.

ராவ:—பேஷ் பேஷ்! ஜனகா, இப்படிப்பட்ட இணையில்லாக் கணக்கப்பிள்ளையை வைத்துக்கொண்டிருப்பதால்தான் உனக்கு விவேகியென்று பெயர்வந்தது, உன்னையெல்லாருங் கொண்டாடுகிறார்கள்! கொடு, கொடு, ஜோடு சாலுவை!

கண:—இவ்வாறு நான் சொல்லாவிட்டால், ஜோடு பூசை கொடுத்திருப்பீர்களே!

(ராவணன்முதல் அனைவோரும் சிரிக்கிறார்கள்.)

ராவ:—மற்று ஆகவேண்டியதற்கு!

ஜன:—மஹாப்ரபோ, வில்லொடிக்கவேண்டும்.

ராவ:—சிவன் வில்தானே! நான் சிவபக்தன் தானே! இதோ ஒரு நிமிஷம்!

கொங்களக நிலவொளியாள் பைந்துளவோன்
தன்னிணையாள் கூறாய்த் தங்கும்
இந்துறையும் சடைமுடியாய் வெந்தழலின்
எரியுருவாய் இன்பே யன்பே
வந்தெவர்தம் மனத்தகத்தும் வாழ்த்துவோர்தம்
வாயகத்தும் வாழ்வாய் வள்ளால்
சிந்தையுறு மென்னிடரைச் சிதறுறுத்திச்
சிவதனுவை யிறுக்கச் செய்வாய்.

ஈசாநின் புகழ்போற்றி இயலே போற்றி
இன்பார்ந்த அருள்போற்றி இசையும்போற்றி
நேசாநின் செயல் போற்றி நியமம் போற்றி
நேராவோர் துணைபோற்றி நெறியும் போற்றி
ஆசாரத் துறைபோற்றி அன்பே போற்றி
அழுதொழுகு சாமகீதா அழகார் கைலை
வாசாநின் வண்மைபோற்றி வடிவம் போற்றி
வளக்கருணைத் தகைமைபோற்றி வனப்பும் போற்றி

(தோத்திரஞ் செய்துவிட்டு ஒருகுதி குதித்து வில்லைக்கிளப்பித் தொப்பென்று விழுந்து வெட்கப்பட்டு விலகிப்போய்விடுகிறான்.)

சதா:—காற்றுமழையடித்து ஓய்ந்ததுபோலிருக்கிறது!

விஸ்:—தப்பட்டையடித்து நின்றது போலிருக்கின்றது,

ஜன:—அரசர்களே, நீங்கள்யாவரும் க்ஷத்திரியர்கள். வீராவேசத்தில் மிகுந்த தீராதி தீரர்கள்! உங்களில் யாவரேனும் எழுந்து, உற்றவில்லை ஒடித்துப் போட்டு, உத்தமக் கன்னிகையைப் பெற்றுக் கொள்ளுங்கள்,

(அனைவரும் பேசாதிருக்க)

ஜன:—என், மகததேசத்து மன்னரே, தாங்கள் எழுந்து வில்லைஒடிக்கப் பாருங்கள்.

மக:—ராவணேஸ்வரரே போனாரே, என்னாலாகுமா இறைவன் வில்லொடிக்க?

ஜன:—குகுத தேசத்தரசரே, தாங்கள் என்னசொல்லுகிறீர்கள்?

குகுதராஜன்:—Ditto.

ஜன:—பப்பர ராஜரே, தாங்களோ?

பப்பரராஜன்:—Ditto Ditto!

ஜன:—குச்சர ராஜரே, தாங்களோ?

குச்:—Ditto Ditto, Same Same!

ஜன:—ஹா அரசர்களே எனக்கே அவமானமாயிருக்கின்றது! இத்தனை யரசர்கள், இணையில்லாவீரர்கள், கல்யாணத்திற்கென்று வந்து, கனத்தவில்லை யொடிக்க ஆர்ப்பரித்து, எல்லாம் ஒழிந்து ஈஸிசெயரில் சாய்ந்து விட்டீர்களே இப்போது! இத்தனை க்ஷத்திரியரில் ஒருத்தராவது காணவில்லையே, உள்ளத்தி னுறுதியோடே ஊக்கமாய் வந்து வில்லொடிக்கக் கூடியவர்கள்! ஈசா, என்ன உன் திருவிளையாட்டல்!

சதா.—விஸ்வாமித்ரரே, ரகுராமனை யெழுந்து வெகு வேகமாய் ஒடிக்கச்சொல்லுங்கள் உத்தமவில்லை!

ஜன:—குழந்தைப் பருவமாயிருக்கிறதே, இளம்பிள்ளை வடிவாயிருக்கிறதே!

விஸ்:—இளம்பிள்ளையா அவன்? மருமகப்பிள்ளை யப்பா அவன்!

சதா:—விஸ்வாமித்ரரே ஏன் இன்னும் காலதாமதஞ் செய்கிறீர்? தாடகையைக் கொன்ற தசரத ராமனுக்கு, மாரீசனையடித்த மாராபிராமனுக்கு, கல்

லைப் பெண்ணுகிய கம்பீர ராமனுக்கு இந்த வில்லா இளைப்பைக் கொடுக்கும்? எழுந்திருக்கச்சொல் லுங்கள்.

விஸ் ஆனந்த பைரவி ரூபகம்.

ஜய ஜய ஸ்ரீரகுராமா
ஜயபலராக்ஷத பீமா
தயையுடனே யெழுந்திருப்பாய்
சிவதனுவை யொடித்திடுவாய் (ஜய)

கரும்பைமுறிக்க விரும்பும் யானை
கோட்டை பிடிக்க எழும்பும் சேனை
அதனைப்போன்றே ஆர்ப்பரித்து
அரனர் வில்லை பொடிப்பாய் முறித்து (ஜய)

அன்னநடை மின்னுமொளி
பன்னுங்கிளி பயிலு மொலி
பொன்னினுருவாள் மன்னன் குமரி
தன்னை மணப்பாய் தயைதன்புணரி (ஜய)

ராமனைநோக்க, ராமன் கம்பீரமாய் வந்து தனு வில்லை யொடிக்கிறான்.

(மாடியிலிருந்து சீதைவந்து மாலை மாற்றுகிறாள்.)

---

## Act VII. Scene 4.

அங்கம் 7 காட்சி 4.

கல்யாண மண்டபம்.

---

அரசர்களெல்லோரும், தசரதர் பத்னிகளும் அனை வரும் வந்திருக்க ராமசந்திரனுக்கும் ஜானகிக்கும் திரு மணம் நிறைவேறல்.

விஸ்:— மங்கள குஞ்சர மஹநீய காத்ரனே
மனாதீத ப்ரம்ஹ விக்ஞான ஸ்வருபனே
எங்களை வருத்தும் இபக்கர்தங் காலனே
இருடியர் தேவர்க ளெல்லோர்க்கு மன்பனே
துங்கவர் புங்கவர் தூயவர் நேயனே
துஷ்டனை வதைத்திடு துரைரகு ராமனே
திங்களிற் றிலகமே தங்கிடும் அன்னையாம்
சீதையை மணந்துமே சிறப்பொடு வாழ்கவே.

திருமண முடிவு
பெருமித மகிழ்வு.

Copies of this Book can be had of—

*The Manager,*
*R. Vivekananda Press,*
*Vepery, Madras.*